DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurence;
Citizenship;
Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

TEAM SMART REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

உதயம் 1399 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 27, 2023


# மனோ சாட்சி

## மனந் திறக்கிறார் மனோ கணேசன்

கனடா உதயனிற்கான பிரத்தியேகத் தொடர்

கொஞ்சம் கிளர்ச்சி நிகழ்வுகள்! நிறைய உறங்கா உண்மைகள் பகுதி 1





## "நடராஜா ரவிராஜ் என்ற எனது நண்பன்..."

காலம்: 2005ம் வருடம் வடக்கில் நடைபெற்ற வாக்கு பகிஸ்கரிப்பின் காரணமாக தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாக மஹிந்த, பாதுகாப்பு செயலாளராக கோதாபய ஆகியோர் ஆட்சி செய்த காலகட்டம். நண்பன் ரவி உயிருடன் இல்லையே என திடீரென நான் நினைத்துக்கொள்வேன். அந்த 2006 நவம்பர், என் நினை-வில் நிற்கிறது. (உள்ளே விபரமான கட்டுரை 13ம் பக்கத்தில்)



## மொன்றியால் "விடியலைத் தேடி" அமைப்பு தாயக மாணவர்களுக்கு வழங்கிய கற்றல் உதவித் தொகை

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

கனடா மொன்றியால் நகரில் இயங்கிவரும் "விடியலைத் தேடி" அமைப்பு தாயக மாணவர்களுக்கு வழங்கிய கற்றல் உதவித் தொகை மற்றும் உதவிகள் பற்றிய செய்திகள் யாழ்ப்பாண குடாநாட்டில் வியந்து பேசப்படும் ஒரு தார்மீகச் செயல் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கனடா மொன்றியால் வாழ் கௌரீஸ் சுப்பிரமணியம் என்னும் பார்வை குன்றிய ஒரு பாடகரின் பிறந்தநாள் நன்கொடையாக அவரும் அவரது அன்னையான சாரதா அம்மையாரும் இணைந்து விடியலைத் தேடி அமைப்பினூடாக எமது தாயக மண்ணில் மாணவர்களுக்கான உதவித் திட்டங்களை நிறைவேற்றியுள்ளனர்.



## எலிசெபெத்த மகாராணியின் 70 வருட சேவை பூர்த்தியை முன்னிட்டு பதக்கங்கள் வழங்கப்பெற்ற நான்கு தமிழ்க் கனேடியர்கள்

கடந்த 24ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று மதியம் கனடா-வின் மார்க்கம் நகரில் அமைந்திருக்கும் மார்க்கம் தோர்ன்ஹில் பாராளுமன்ற உறுப்பினரும் கனடாவின் மத்திய சிறு வர்த்தகம். ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தகம் ஆகிய துறைகள் சார்ந்த அமைச்சருமான கௌரவ மேரி இங் அவர்களின் அலுவலகத்தில்அமைச்சர் சார்பாக கனடிய தமிழர் சமூகத்தைச் சேர்ந்த நான்கு சமூக சேவையாளர்கள் கௌரவிக்கப்பெற்றார்கள்.

மேற்படி கௌரவத்தைப் பெற்றவர்களான திருமதி ஞானம்மா திருநாவுக்கரசு, பாஸ்டர் சோதி செல்லத்துரை, திரு கேதா நடராஜா, திரு வாசன் பரமேஸ், ஆகியோர் இங்கு காணப்படுகின்றனர். (உள்ளே விபரமான செய்தி 18ம் பக்கத்தில்)

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE
ROYAL LEPAGE Ignite

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666
srinada21@gmail.com
RE/MAX ACE

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI


Happy
Tamil Heritage Month
மரபுத்திங்கள்
நல்வாழ்த்துக்கள்
Logan Kanapathi
MPP Markham — Thornhill
Tel: 905-305-1935
logan.kanapathico@pc.ola.org

## உதயன் கதிரோட்டம்

# நாட்டுக்கு உதவாத ‘தலைவர்களை’ கூட்டிக் கொடுக்கும் அயல்நாடு?

நாட்டுக்கு உதவாத அரசியல் தலைவர்கள் என மக்களால் அடையாளம் காட்டப்பட்ட சில இலங்கை அரசியல்வாதிகளை மீண்டும் பொது வெளியில் உலாவவும் அவர்களுக்கு மக்கள் ஆதரவும் ஏனைய நாடுகளின் ‘அணைப்பும்’ உள்ளன என்பதை காட்டுவதில் இலங்கையின் அயல் நாடான இந்தியா தொர்ச்சியாக அக்கறை காட்சி வருவதை இலங்கை மக்கள் கவனித்து வருகின்றார்கள்.இந்த விடயத்தில் தமிழ் சிங்கள மக்கள் புறக்கணிக்கத் தொடங்கி ‘தலைவர்களை’ தங்கள் அரச அலுவலகங்களில் இடம்பெறும் வைபவங்களுக்கு அழைத்து அவர்களை மகிழ்வித்தும் அவர்களைப் பற்றி செய்திகள் ஊடகங்களில் தோன்றுவதற்கும் காரணகர்த்தாக்களாக அயல்நாட்டின் அலுவலகங்கள் தொடர்ச்சியாக விளங்கிவருகின்றன.

மக்கள் கிளர்ந்தெழுந்து போராடங்களை நடத்தி தொடர்ச்சியாக வீதிகளில் நின்று விரட்டியடிக்கும் வகையில் பதவி நீக்கம் செய்யப்பட்டது மாத்திரமன்றி நாட்டை விட்டு “ஓட விரட்டப்பட்ட” ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மீண்டும் அரசாங்கத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் சூழ்ந்திருக்க தலை நகரில் அடிக்கடி நடமாடுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் இடம்பெற்ற இந்திய குடியரசு தின விழாவில் கலந்து கொள்ளும் அளவிற்கு கோட்டாபாயவிற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன. அவற்றுக்கெல்லாம் காரணம் ரணில் என்னும் தற்காலிக ஜனாதிபதி மீண்டும் அடுத்த தடவையும் அந்தப் பதவியில் அமரவேண்டும் என்ற ‘நப்பாசை’ தான்.

தனது ஜனாதிபதி பதவி நீக்கப்பட்ட பின்னர் கோட்டாபாய கலந்து கொண்ட முக்கிய நிகழ்வு இது எனவும் அத்துடன் தனது அடுத்த கட்ட நகர்விற்கு நல்லாசி வழங்கும் நிகழவாகவும் இதைக் கணிக்கலாம் எனவும் கொழும்புச் செய்தியாளர்கள் தங்களுக்குள் உரையாடல்களை நடத்தியுள்ளார்கள் என்ற செய்தியும் தற்போது கசிந்துள்ளது

நிகழ்வில் அவரது சகோதரரும், முன்னாள் பிரதமருமான மஹிந்த ராஜபக்சவும், தற்போதைய பிரதமர் தினேஸ் குணவர்தனவும் கலந்துகொண்டனர் என்றும் இந்த சந்திப்பின் மூலம் ராஜபக்சாக்கள் என்னும் ‘நாட்டுக்கு உதவாத ‘தலைவர்களை’ மக்கள் மறந்து விடக்கூடாது என்ற என்ற எண்ணம் இந்தியாவின் தலைவர்களுக்கு அவசியமான ஒரு தந்திரமாக இருப்பது புலனாகின்றது. மக்களின் விருப்புக்களை விட ஆளும் வர்க்கத்தின் பிரதிநிதிகளை காப்பாற்றுவதே இந்தியாவில் ஆட்சியில் உள்ளவர்களுக்கு தேவையான ஒன்றாகவே பார்க்கப்படுகின்றது

கடந்த ஆண்டு பொதுமக்கள் போராட்டங்களைத் தொடர்ந்து பதவியை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயப்படுத்தப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய பெரும்பாலும் பொது நிகழ்வுகளில் இருந்து விலகி இருந்தார் என்பதும் தற்போது இந்தியாவின் வாக்குறுதிகள் அவருக்கு ‘துணிச்சலை’ தந்திருக்கலாம் எனவும் நம்பப்படுகின்றுத

இதைப்போன்று தான் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டவராக கணிக்கப்படுபவரும் நடமாட முடியாமல் தள்ளாடிய வயதில் அரசியல் பதவியை தொடர்ந்து அனுபவிக்கத் துடிக்கும் சம்பந்தர் ஐயா போன்றவர்களை புகழந்து பேசும் மகிந்தா போன்றவர்களுக்கு தங்கள் பதவிகளை தொடர்ச்சியாக தக்கவைத்துக் கொள்ள எங்கள் தமிழ்த் தலைவர்கள் சிலரும் அவசியம் தேவைப்படுகின்றார்கள் என்பதே வெளிச்சமாகத் தெரியும் உண்மைகள்.

Canada

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

(முன் பக்கத் தொடர்ச்சி)

# மொன்றியால் “விடியலைத் தேடி“ அமைப்பு தாயக மாணவர்களுக்கு வழங்கிய கற்றல் உதவித் தொகை மற்றும் உதவிகள்

கனடா மொன்றியால் வாழ் கௌரீஸ் சுப்பிரமணியம் என்னும் பார்வை குன்றிய ஒரு பாடகரின் பிறந்தநாள் நன்கொடையாக அவரும் அவரது அன்னையான சாரதா அம்மையாரும் இணைந்த விடியலைத் தேடி அமைப்பினூடாக எமது தாயக மண்ணில் மாணவர்களுக்கான உதவித் திட்டங்களை நிறைவேற்றியுள்ளனர்.

இந்த திட்டத்தின் ஊடாக விழிப் புலனற்றவர்களான யாழ்ப்பாண பல்கலைக் கழக





மாணவர்கள் இருவருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய்கள் வழங்கப் பெற்று அதை வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் வழங்கி வைத்தார் யாழ்ப்பாணம் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இந்த உதவித் தொகைகள் கையளிக்கும் வைபவத்தில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தலைவர் திரு நிரோஸ் தியாகராஜாவும் கலந்து கொண்டார்.

அத்துடன் சில ஆசிரியப் பெருந்தகைகளும் கலந்து சிறப்பித்துள்ளனர். அன்றைய தினம் மேலும் கிராம சேவையாளர்களினால் தெரிவு செய்யப்பெற்ற சில மாணவ மாணவிகளுக்கு துவிச்சக்கர வண்டிகள் மற்றும் பாதணிகள் கற்றல் உபகரணங்கள் ஆகியனவும் வழங்கப்பெற்றன.

இவற்றின் மொத்தப் பெறுமதி சுமார் 10 இலட்சம் ரூபாய்கள் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தலைவர் திரு நிரோஸ் தியாகராஜா கனடா உதயன் செய்தியாளருக்கு தெரிவித்தார்.

கனடா மொன்றியால் “விடியலைத் தேடி“ அமைப்பின் ஸ்தாபகர்கள் திருமதி சாரதா மற்றும் அவரது புதல்வர் கௌரீஸ் அவர்களுக்கும் கனடா உதயன் தனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றது.

**வேலைக்கு ஆட்கள் தேவை**

தொழிற்சாலை ஒன்றிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை. ஆண், பெண் இருவரும் விரும்பத்தக்கது.

உடனே அழையுங்கள்:
தொடர்புகளுக்கு Jeya:
(647) 669-2739

**KITCHEN HELPER & LINE COOK WANTED**

Part-time kitchen helper, line cook’s, dish washer, South Indian cook, and Continental cook wanted.

Call AMAR:
(416) 988-9518

7370 Woodbine Ave. Unit 9
Woodbine & Denison, Markham

**DELIVERY DRIVER தேவை**

ரொறன்ரொ நகரில் Danforth / Eglinton சந்திப்புக்கு அருகில் இயங்கிவரும் Greek உணவகம் ஒன்றுக்கு Delivery Driver கள் தேவைப்படுகின்றனர். வாகனம் வைத்திருப்பது அவசியம்.

தொடர்புகளுக்கு
Uma:- 416 659 0483 என்னும் இலக்கத்தை அழைக்கவும்

**BUNGALOW HOUSE FOR RENT**

Brimley & Lawrence சந்திப்பிற்கு அருகில் 3 Bedroom house (upstairs) with 1 kitchen & washroom, Large living hall with Dining space, Washer & Dryer, 3 Parking spaces வாடகைக்கு உண்டு. Close to SP Grocery store (Sri Lankan), 8mins drive to Scarborough Town Center, & 6mins drive to Scarborough Health Network- General Hospital.
AVAILABLE from March 1st 2023
Call: (647) 995-4043
(647) 719-1220

இலங்கை செய்திகள்
Sri Lanka News



# நுவரெலியா மாவட்டத்தில் சட்ட விரோத பண சேகரிப்பில் ஈடுபட்ட பாடசாலை அதிபரும், அபிவிருத்தி சங்கமும்

பாடசாலைகளில் நிதி சேகரிப்பு குறித்த அரசாங்கத்தின் சுற்றறிக்கைகளை அதிபர் ஒருவரும் பாடசாலை அபிவிருத்திக் குழுவும் புறக்கணித்துள்ளதாக நாட்டின் முன்னணி ஆசிரியர் சங்கம் ஒன்று குற்றம் சுமத்தியுள்ளது.

நுவரெலியா மாவட்டம், வலப்பனை கல்வி வலயத்திற்கு உட்பட்ட சில்வர் கண்டி தமிழ் வித்தியாலயத்தில் பயிலும் ஒரு தொகுதி மாணவர்களுக்கு கௌரவிப்பு விழாவினை நடத்துவதற்கு பெருந்தொகை பணம் மாணவர்களிடமே அறவிடப்பட்டுள்ளது.

சில்வர்கண்டி தமிழ் வித்தியாலயத்தில் தரம் 11இல் பயிலும் 46 மாணவர்கள் மற்றும் கடந்த வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 13 மாணவர்கள் ஆகியோருக்கு கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

நிகழ்விற்காக குறித்த மாணவர்களிடம் தலா 3,000 ரூபாய் வீதம் அறவிடப்பட்டுள்ளது. இதற்கமைய 177,000 ரூபாய் பணம் மாணவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதனைவிட குறித்த நிகழ்வு இந்த மாதம் 11ஆம் திகதி இடம்பெற்றுள்ளதுடன் அன்றைய தினம், 6,7,8 ஆகிய தரங்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதோடு, இந்த நிகழ்விற்காக குறித்த தரங்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டுமென அதிபரால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு விடுமுறை வழங்கி ஆரம்ப பிரிவு ஆசிரியர்களை பாடசாலைக்கு வருகைத் தருமாறு அதிபர் கட்டாயப்படுத்தியுள்ள போதிலும், இதற்கு எதிர்ப்பினை வெளிப்படுத்திய ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை இந்த கௌரவிப்பு நிகழ்வில் பிரதேச அரசியல்வாதி ஒருவர் அதிதியாக பங்கேற்றமை குறித்தும் மாணவர்களின் பெற்றோர் எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்பட்டுள்ள நிலையில் வலப்பனை பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் மாணவர்களை கௌரவிக்கும் பாடசாலை நிகழ்வில் பற்கேற்றமை ஏன் என மாணவர்களின் பெற்றோரும், சமூக செயற்பாட்டாளர்களும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

பாடசாலை மாணவர்களிடம் பெருந்தொகை பணம் அறவிடப்பட்டமை மற்றும் மாணவர்களுக்கு விடுமுறை வழங்கியமை தொடர்பில் மத்திய மாகாண கல்விப் பணிப்பாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மத்தியக் குழு உறுப்பினர் காஞ்ஞாதேவி கிருபாகர் தெரிவித்துள்ளார்.

மேலும் பாடசாலை நிகழ்வில் அரசியல்வாதி ஒருவர் பங்கேற்றமை குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பெருந்தோட்ட தொழிலாளர்கள் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கியுள்ள நிலையில், அவர்களின் பிள்ளைகளிடம் இவ்வாறான “அவசியமற்ற” ஒரு விழாவிற்கு மிகப்பெரிய தொகை பணத்தை அறவிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் நுவரெலியா மாவட்ட செயலாளர் ஆசிரியர் வேலு இந்திரசெல்வன் தெரிவிக்கின்றார்.

பாடசாலை நிதி சேகரிப்புகள் தொடர்பில் சுற்றுநிருபங்கள் காணப்படுகின்றபோதிலும் பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள பல பாடசாலைகளின் அபிவிருத்தி சங்கங்கள் அதனைப் பின்பற்றுவதில்லை எனவும் ஆசிரியர் சங்கத்தின் நுவரெலியா மாவட்ட செயலாளர் கூறியுள்ளார்.

பெரும்பாலான பாடாசலைகளின் அபிவிருத்தி சங்க நிர்வாக அதிகாரம் பணபலம் படைத்த வர்த்தகர்களின் கைகளில் காணப்படுவதால் அவர்கள் பண அறவீட்டு விடயத்தில் தன்னிச்சையாக தீர்மானங்களை மேற்கொள்வதாகவும் இதனால் வறிய மாணவர்கள் பாதிக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



தாம் பெற்ற கடனுக்கான வட்டியை வங்கிகள் அதிகரித்தவுடன் அதற்கு எதிர்ப்பினை வெளிப்படுத்திய ஆசிரியர்களும், அதிபர்களும் பெருந்தோட்ட மாணவர்களின் பொருளாதார நிலைமை தொடர்பில் கரிசனை கொள்ள வேண்டுமெனவும் ஆசிரியர் வே. இந்திரசெல்வன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(21-1-2023)

# இலங்கையிலிருந்து மேலும் 5 பேர் அகதிகளாக ராமேஸ்வரத்தில் தஞ்சம் — அகதிகளாக சென்றோரின் எண்ணிக்கை 217 ஆக உயர்வு



இலங்கை தமிழர்கள் 5 பேர் திங்கட்கிழமை (23) காலை ராமேஸ்வரம் அடுத்த சேராங்கோட்டை கடற்கரைக்கு அகதிகளாக சென்றடைந்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் இலங்கையில் இருந்து தனுஷ்கோடிக்கு அகதிகளாக சென்றுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டம் பாரதிபுரத்தை சேர்ந்த பாரதி டிஸ், அவரது தாய் முனியம்மா, அவரது இரண்டு மகன்கள் ஒரு மகள் என ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் கிளிநொச்சி மாவட்டம் நாச்சிக்குடா கடற்கரையில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (22) காலை மீன்பிடி படகில் புறப்பட்டு திங்கட்கிழமை (23) அதிகாலை ராமேஸ்வரம் அடுத்துள்ள சேராங்கோட்டை கடற்கரையை சென்றடைந்துள்ளனர்.

தகவலறிந்த ராமேஸ்வரம் மரைன் போலீசார் இலங்கை தமிழர்களை மீட்டு மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

விசாரணையில் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதில் இருந்து அத்தியாவசிய பொருட்களின் விலை சற்று குறைந்த வந்த நிலையில் தற்போது இலங்கை அரசிடம் போதிய டாலர் கையிருப்பில் இல்லாததால் மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் எரிபொருளுக்காக சாலையில் காத்திருக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் மீண்டும் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வால் குழந்தைகளுடன் இலங்கையில் வாழ வழி இன்றி தமிழகத்திற்கு அகதிகளாக வந்ததாக தெரிவித்தனர்.

பாதுகாப்பு வட்டார அதிகாரிகளின் விசாரணைக்கு பிறகு 5 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட உள்ளனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழகத்திற்கு இலங்கையிலிருந்து வந்த அகதிகளின் எண்ணிக்கை 217 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர் (23-01-2023)**



# மன்னார் பேசாலை கடற்கரையில் கரை ஒதுங்கிய மீனவரின் சடலம் — பேசாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுப்பு

மன்னார் பேசாலை கடற்கரையில் இருந்து கடந்த 20 ஆம் திகதி மீன் பிடிக்க கடலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் திங்கட்கிழமை (23) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட மீனவர் கிளிநொச்சிப் பகுதியை சேர்ந்த தற்போது பேசாலை பகுதியில் வசித்து வரும் இளம் குடும்பஸ்தரான 26 வயதுடைய கஸ்டார் அலெக்ஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், கிளிநொச்சி கோணாவில் யூனியன் குளம் பகுதியைச் சேர்ந்த கஸ்டார் அலெக்ஸ் (வயது-26), இரண்டு பிள்ளைகளின் தந்தை ஆவார்.

இவர் பேசாலையில் குடும்பத்துடன் தங்கி இருந்து கடந்த சில மாதமாக மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்த நிலையில் கடந்த 20 ஆம் திகதி குறித்த மீனவர் பேசாலை கடற்கரை மீன்பிடி துறைமுகத்தில் படகு மூலம் (றோலர்) கடலுக்குள் மாலை 3 மணியளவில் மீன்பிடிக்க சென்றுள்ளனர். இவருடன் மேலும் இரண்டு மீனவர்கள் சென்றுள்ளனர்.

அவர்கள் கடலுக்குள் மீன் பிடி தொழிலில் ஈடுபட்ட சந்தர்ப்பத்தில் இவர்களது தொழிலை மேற்கொள்ளும் டோலர் படகின் பிரதான வலை கிழிந்த நிலையில் அதை சீர் செய்து மீண்டும் தொழிலில் ஈடுபட்ட சந்தர்ப்பத்தில் அவர்கள் மேற்கொண்ட தொழிலில் மீன்பாடு இல்லாத நிலையில் இரவு சுமார் 9.30 மணி அளவில் பேசாலை கரைக்கு திரும்பி கடற்கரைக்கு சற்று தொலைவில் படகை நங்கூரமிட்டு குறித்த 3 நபர்கள் நீந்தி கரைக்கு வந்து உள்ளனர்.



இதன் போது ஒருவர் தாமதமாகியும் கரைக்கு வராத நிலையில் காணாமல் போய் உள்ளார்.

குறித்த நேரத்தில் அவரை தேடிய மற்றைய இரண்டு மீனவர்களும் உரிமையாளரிடம் முறையிட்டு பேசாலை போலீஸ் நிலையத்தில் முறைப்பாட்டையும் பதிவு செய்துள்ளனர். இந்த நிலையில் குறித்த நபரின் சடலம் திங்கட்கிழமை (23) காலை பேசாலை மீன்பிடி துறைமுகத்திற்கு மேற்கு பக்கமாக கரை ஒதுங்கிய நிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவருடன் தொழிலுக்கு சென்ற இரண்டு நபர்கள் மற்றும் அவரது மனைவி, உறவினர், தொழில் உரிமையாளர் ஆகியோரிடம் பேசாலை போலீசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர் (23-01-2023)**

# ஹற்றன் நேஷனல் வங்கியினால் மாங்குளம் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோருக்கான உயிரிழை உபகரணங்கள் கையளிப்பு!




யாழ் ஹற்றன் நேஷனல் வங்கிக்கிளையின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை ஒட்டி வடமாகாணத்திற்கு வருகை தந்திருந்த ஹற்றன் நேஷனல் வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரி திரு ஜொனதன் அலஸ் அவர்கள், இன்றைய தினம் காலை மாங்குளம் பகுதியில் அமைந்துள்ள முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோருக்கான உயிரிழை அலுவலகத்திற்கு விஜயம் மேற்கொண்டு அங்கு இருக்கும் மாற்று திறனாளிகளுடன் கலந்துரையாடியிருந்தார்.

நிகழ்வில் மாற்றுவலுவுள்ளோரின் தேவைப்பாடுகள் குறித்து கேட்டறிந்து கொண்ட ஹற்றன் நேஷனல் வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரி தன்னாலான ஒத்துழைப்புக்களை அவர்களுக்கு நல்க தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தார்.

இதன் போது மாங்குளம் உயிரிழை அமைப்பிற்கு 01 சக்கர நாற்காலியும் (wheel chair) மற்றும் 02 காற்று மெத்தைகளும் (air mattress-es) ஹற்றன் நேஷனல் வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரியினால் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் ஹற்றன் நேஷனல் வங்கி வடமாகாண செயல்பாட்டு முகாமையாளர் திரு. நிஷாந்தன் கருணைராஜ் மற்றும் மல்லாவி வங்கிக் கிளையின் முகாமையாளர் திரு. அமிர்தலிங்கம் அமிர்தசொருபன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

**ஜெகதீஸ்வரன் பிரஷாந்த் - முல்லைத்தீவு**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# 12 வருடமாக சிறையில் இருந்த அரசியல் கைதி குற்றம் எதுவும் நிரூபிக்கப்படாத நிலையில் நீதிமன்றத்தால் விடுதலை



குற்றம் எதுவும் நிரூபிக்கப்படாத நிலையில் 12 வருடங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதி சிவசுப்பிரமணியம் தில்லை ராஜ் வியாழக்கிழமை (26) குற்றமற்றவர் என கருதி மன்னார் மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம் 13 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மானிப்பாய் பகுதியில் தில்லை ராஜாவுக்கு சொந்தமான மரக்காலை ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்ட தில்லை ராஜ் கடந்த 12 வருடங்களாக அரசியல் கைதியாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் குறித்த வழக்கு மன்னார் மேல் நீதிமன்றத்தில் எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி அரசியல் கைதியான சிவசுப்பிரமணியம் தில்லை ராஜ் குற்றமற்றவர் என்ற அடிப்படையில் விடுதலை செய்தார்.

விடுதலையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தில்லை ராஜ், 12 வருடங்களின் பின் தான் குற்றமற்றவன் என நிருபிக்கப்பட்டு விடுவிக்கப் பட்டுள்ளேன்.

எனக்காகவும் என் விடுதலைக்காகவும் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி ரட்ணவேல் அவர்களுக்கும் அவரது உதவியாளர் தாயளனுக்கும் அதே போன்று யாழ் மாவட்டத்தில் 2016 ஆண்டு இடம் பெற்ற வழக்கில் என் சார்பாக ஆஜரான சட்டத்தரணி ரெமிறியேஸுக்கு நன்றிகள்.



நான் எந்த குற்றச்சாட்டுகளும் இன்றி 12 வருடம் சிறையில் இருந்து விடுதலையாகி இருக்கிறேன். என்னை போன்று என்னும் 25 வருடங்களுக்கு மேலாக அரசியல் கைதிகளாக சிறைகளில் எங்களுடம் ஒன்றாக இருந்த பலர் இன்னும் சிறைப்பட்டு இருக்கிறார்கள். அவர்களையும் விரைவில் விடுதலை செய்து தர வேண்டும் என கண்ணீருடன் கேட்டுக்கொண்டார்.

**- மன்னார் நிருபர் (26.01.2023)**

# அரசியல் கைதிகளின் விடுதலை என்ற எமது கோரிக்கை நிறைவு செய்தால் மட்டுமே சர்வ கட்சி கூட்டத்தில் கலந்து கொள்வோம் -செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.

காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை என்ற எமது கோரிக்கைகளை நிறைவு செய்தால் மட்டுமே எதிர் வரும் காலங்களில் நடைபெற இருக்கும் சர்வ கட்சி கூட்டத்தில் கலந்து கொள்வோம் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் வியாழக்கிழமை (26) காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் இனப் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி தலைமையில் நடை பெறுகின்ற சர்வ கட்சி கூட்டத்தில் நானும் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொள்ளவில்லை.

அதற்கான காரணம் கடந்த காலங்களில் ஜனாதிபதியால் வாக்குறுதி அளித்த விடயங்களான நில அபகரிப்பு மற்றும் சிறைக்கைதிகள் விடுதலை போன்ற பல விடயங்களை அரசாங்கம் சரியாக நடைமுறைப்படுத்தாத காரணத்தால் இன்றைய தினம் நாங்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

நாங்கள் ஏற்கனவே கேட்டுக் கொண்ட விடயங்களை உடனடியாக செய்ய வேண்டும் என்று ஜனாதிபதியிடம் மீண்டும் கோரிக்கை வைக்கின்றோம்.

தமிழ் மக்கள் சார்பாக நாங்கள் கேட்ட விடயங்கள் நிறை வேற்றப்படுமாக இருந்தால் இனி வரும் ஏனைய கூட்டங்களில் நாங்கள் கலந்து கொள்ள தயாராக இருக்கிறோம்.



இது தொடர்பாக ஜனாதிபதி அவர்கள் நேரில் சந்தித்து கூற இருக்கின்றோம்.ஜனாதிபதி உத்தரவிட்டும் கூட வன வள திணைக்களம் தங்களுடைய செயற்பாடுகளை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

எங்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு நில அபகரிப்புகள் நிறுத்தப்பட வேண்டும். அரசியல் கைதிகளை விடுதலை செய்யப்பட வேண்டும்.

ஏற்கனவே கடந்த பொங்கல் தினத்தில் யாழ்ப்பாணத்தில் வந்து வாக்களித்த 108 ஏக்கர் பொதுமக்களின் காணி இன்னும் விடுபடவில்லை. ஆகவே அதை எல்லாவற்றையும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் முன் வைக்கின்றோம்.

எனவே நாங்கள் வைத்த கோரிக்கைகள் காணி விடுவிப்பு மற்றும் அரசியல் கைதிகளை விடுதலை. அவை சாத்தியமாக இருந்தால் அடுத்தடுத்து கூட்டங்களில் நாங்கள் கலந்து கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர் (26.01.2023)**


# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgagecliniccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# சொந்த நிலம் இருந்தும் 32 வருடங்களாக அகதி வாழ்வை வாழ்ந்து வரும் யாழ்ப்பாணம் வலி வடக்கு பொலிகண்டி மக்கள்

இலங்கை செய்திகள் Sri Lanka News

## மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ



யாழ்ப்பாணம் வலி வடக்கு பொலிகண்டி பகுதியில் உள்ள இடைத்தங்கல் முகாம்களில் கடந்த 32 வருடங்களுக்கு மேலாக பல்வேறு இடர்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் மக்களை வலி வடக்கில் உள்ள தமது சொந்த காணிகளில் மீள் குடியேற வேண்டும் என தொடர்ந்து அரசிற்கு வலியுறுத்தி வருகின்ற போதும் இதுவரை எவ்வித முன்னேற்றமும் இல்லை என மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வலி வடக்கு பொலிகண்டி பகுதியில் உள்ள இடைத்தங்கல் முகாமில் கடந்த 32 வருடங்களுக்கு மேலாக பல்வேறு இடர்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் நிலையில் வலி வடக்கில் உள்ள தமது சொந்த காணிகளில் மீள்குடியேற முடியாத நிலையில் உள்ளனர்.

இந்த நிலையில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் மக்களுக்கு அத்தியாவசிய உலர் உணவு பொதிகள் ஞாயிற்றுக்கிழமை (22) மதியம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினால் (மெசிடோ) 6 நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் 65 குடும்பங்களுக்கும் உறவினர்கள் வீட்டில் உள்ள 35 குடும்பங்கள் உள்ளடங்களாக 100 குடும்பங்களுக்கு இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்காண நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்காண நிறுவனத்தின் பணியாளர்கள் இணைந்து குறித்த உலர் உணவு பொதிகளை வழங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து உரையாற்றுகையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் வலி வடக்கு பொலிகண்டி பகுதியில் உள்ள இடைத்தங்கல் முகாம்களில் கடந்த 32 வருடங்களுக்கு மேலாக பல்வேறு இடர்களுக்கு மத்தியில் வலி வடக்கு மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

சுமார் 32 வருடங்களுக்கு மேலாக 6 நலன்புரி நிலையங்களிலும், உறவினர்கள் வீடுகளிலும் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

சொந்த நிலம் இருந்தும் அகதி வாழ்வை வாழ்ந்து வருகின்றீர்கள்.

மழைக்காலங்களில் பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் முகாம்களில் பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருவதை நாங்கள் நேரடியாக அவதானித்துள்ளோம்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஓர் உதவியாகவே நாங்கள் தொடர்ந்து நிவாரண உதவியை முன்னெடுத்து வருகிறோம். 1990 ஆம் ஆண்டில் இருந்து இந்த முகாம்களில் வாழ்ந்து வருகிறார்கள்.

உங்கள் நிலங்களை விடுவிக்கக் கோரி தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றீர்கள்.

மக்களினுடைய காணிகளை ஏன் அதி உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்த வேண்டும்? 1990 ஆம் ஆண்டு மக்கள் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த பின் இன்று வரை அந்த மக்களின் தனியார் காணிகள் அதி உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இந்த உயர் பாதுகாப்பு யாருக்கு? மக்களுக்கு பாதுகாப்பை வழங்க வேண்டிய அரசு மக்களின் காணிகளை பிடித்து அதில் முகாம் அமைத்து அதற்கு பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் அரசு இன்று மக்களை முகாம்களில் தவிக்க விட்டுள்ளது.

எனவே முகாம்களில் உள்ள மக்களை மீண்டும் அரசு அவர்களின் சொந்த நிலங்களில் மீளக் குடியம ர்த்தி அந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர் (22-1-2023)**





# முல்லைத்தீவு ஊடக அமையத்தினர் கறுப்பு ஜனவரியை அனுஸ்ரித்து துண்டுப்பிரசுரம் விநியோகம்



ஜனவரி மாதம் என்பது இலங்கையில் ஊடகத்துறையைப் பொறுத்த வரையில் கறைபடிந்த மாதமாகவே காணப்படுகிறது.

பல்வேறு ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் பல்வேறு ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்ட பல்வேறு ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்பட்ட இந்த ஜனவரி மாதத்தில் கொல்லப்பட்ட கடத்தப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி இலங்கையில் வருடம் தோறும் ஜனவரி மாதத்தை கறுப்பு ஜனவரியாக கடைப்பிடிக்கும் இலங்கயின் ஊடகவியலாளர்கள் இந்த கொலை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டமை ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்களுக்கு நீதி கோரி வருகின்றனர்.

அந்தவகையில் இவ்வருடமும் இலங்கையில் பல்வேறு பகுதிகளில் ஊடகவியலாளர்கள் கறுப்பு ஜனவரியை அனுஸ்ரிக்கின்றனர் இதன் ஒரு அங்கமாக 2006ம் ஆண்டு இதே நாளில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் அவர்களுடைய 17ம் ஆண்டு நினைவு நாளை நினைவு கூறும் முகமாகவும் 2010ம் ஆண்டு இன்றைய நாளில் கடத்தப்பட்ட ஊடகவிலாளர் பிரகீத் எக்னெலிகொட அவர்களினன் நினைவாகவும் முல்லைத்தீவு ஊடக அமையத்தினர் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் முல்லைத்தீவு நகர்ப்பகுதிகளில் கறுப்பு ஜனவரியை அனுஸ்ரித்து துண்டுப்பிரசுரம் விநியோகிக்கும் நடவடிக்கையில் இன்று ஈடுபட்டுள்ளனர்.

குறித்த துண்டுப்பிரசுரத்தில்

தமிழ் ஊடகவியலாளர் சுப்ரமணியம் சுகிர்தராஜன் எம்மோடு இருந்திருந்தால் அவருக்கு இன்று 53 வயதாகியிருக்கும். ஆனால், வேதனையளிக்கும் விதத்தில் 17 ஆண்டுகளிற்கு முன்னர் அவரது 36 ஆவது அகவையில் அரச கொலையாளிகளால் அவர் படுகொலை செய்யப்பட்டார். கிழக்கு கடற்கரை நகரான திருகோணமலையில், 2006 ஆம் ஆண்டில் இரண்டாவது நாள், ஐந்து மாணவர்கள் எப்படி படுகொலை செய்யப்பட்டனர் என்பதை மறுக்க முடியாத புகைப்பட ஆதாரத்துடன் அவர் நிரூபித்ததால் அவர் அரச படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். அந்த மாணவர்கள் எடுத்துச் சென்ற குண்டு வெடித்ததாலேயே அவர்கள் உயிரிழந்தனர் என்று இலங்கை அரசு கூச்சமின்றி பச்சைப் பொய் கூறியது ( அல்லது உண்மையை மூடி மறைக்கும் வகையில் பச்சைப் பொய் கூறியது). ஆனால், சுகிர்தராஜன் உண்மையை உலகிற்கு வெளிப்படுத்தினார். சுகிர்தராஜனிற்கு முன்னரும் பிறகும் வலிந்து காணமால் ஆக்கப்பட்ட அல்லது கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கைகளைக் கூட்டினால் அது 50ஐ எட்டும். அதில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள். அதிலும் அதிகளவானவர்கள் ஜனவரி மாதம் பலியாயினர். இதன் காரணமாக ஜனவரி மாதமே ஊடகவியலாளர்களுக்கு கறுப்பு மாதமாக உள்ளது. குற்றமிழைத்தவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படாதது மட்டுமின்றி அவர்கள் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளுவது, மேலும் உண்மையைக் கண்டறிந்து நீதியை நிலை நாட்ட தொடர்ச்சியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கத் தவறியதால் இன்று முழு நாடும் இருண்டு போயுள்ளது. என குறிப்பிடப்பட்டுள்ளது.

**- சண்முகம் தவசீலன் (19-01-2023)**





# முல்லைத்தீவு ஊடக அமையத்தில் உணர்வுபூர்வமாக இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வு



முல்லைத்தீவு ஊடக அமையத்தில் ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் அவர்களுடைய 17ம் ஆண்டு நினைவேந்தல் மற்றும் ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க அவர்களுடைய 14ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

கடந்த 2006ம் ஆண்டு ஜனவரி 24ம் திகதி திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் அவர்களுடைய 17ம் ஆண்டு நினைவேந்தல் இன்றாகும்.

அதேவேளை கடந்த 2009ம் ஆண்டு ஜனவரி 8ம் திகதி கொழும்பில் படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமசிங்க அவர்களின் 14ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த 8ம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது.

இதேவேளை 2010ம் ஆண்டு இன்றைய நாளில் கொழும்பில் வைத்து கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட பிரகீத் எக்னெலிகொட அவர்கள் கடத்தப்பட்டு 13 ஆண்டுகள் கடந்து வரும் இன்றைய நாளில் முல்லைத்தீவு ஊடக அமையத்தில் ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் அவர்களுடைய 17ம் ஆண்டு நினைவேந்தல் மற்றும் ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க அவர்களுடைய 14ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.




இதேவேளை முல்லைத்தீவு ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு மற்றும் முல்லைத்தீவு நகரங்களில் கொல்லப்பட்ட கடத்தப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரியும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்களுக்கு நீதி கோரியும் அனுஸ்ரிக்கப்படும் கறுப்பு ஜனவரியை நினைவுபடுத்தி துண்டுப்பிரசுரம் விநியோகிக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர். **- சண்முகம் தவசீலன் (9-01-2023)**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் எருக்கலம் பிட்டி மகளிர் கல்லூரியில் சிறப்பாக இடம்பெற்ற தேசிய மட்ட சாதனையாளர்கள் கௌரவிப்பு



மன்னார் எருக்கலம் பிட்டி மகளிர் கல்லூரியில் தேசிய மட்ட சாதனையாளர்களை கௌரவித்தலும், அகில இலங்கை ஜமியத்துல் உலமாவின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு விசேட து.ஆ பிரார்த்தனையும் எருக்கலம் பிட்டி மகளிர் கல்லூரியில் பாடசாலை அதிபர் தலைமையில் வியாழக்கிழமை (19) நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக மன்னார் வலயக்கல்வி அலுவலகத்தின் தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. மனோரஞ்சன், கௌரவ அதிதிகளாக அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் மன்னார் பிரதேச தலைவர் அஷ்ஷேக் எஸ்.ஏ. அஸீம், அகில இலங்கை ஜமியத்துல் உலமாவின் எருக்கலம்பிட்டி தலைவர் அஷ்ஷேக் கே.வி.எம். பாஸிர், மற்றும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் முசலி பிராந்திய செயலாளர் அஷ்ஷேக் ரி.எம். ஜாலிஸ், சிறப்பு





விருந்தினராக மன்னார் வலயக்கல்வி அலுவலகத்தின் தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி. அன்ரன் டபரேரா, முகைதீன் பெரிய பள்ளிவாசல் பேஷ் இமாம் அஷ்ஷேக் ஏ.கே.எம். முதக்கீர், காட்டுபாவா சின்ன பள்ளி வாசல் இமாம் அஷ்ஷேக் எம்.வை.எம். திக்குறுல்லா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கும், 7ஏ இற்கு மேல் சித்திகளை பெற்ற மாணவர்களுக்கும், பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்களுக்கும் கௌரவம் அளிக்கப் பட்டதுடன் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு விசேட விளக்க உரையும், துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.

# கோலாகலமாக நடைபெற்ற சம்மாந்துறை சிறி கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்தின் பாராட்டு விழா



அமரர் பத்மநாதன் மகேஸ்வரி அறக்கட்டளையின் அனுசரணையுடன் அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட சிறி கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்தின் சாதனையாளர் கௌரவிப்பு விழா, பாடசாலை அதிபர் இளங்கோவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்வி பணிப்பாளர் அமீர் அவர்களும், பிரதிக் கல்விப் பணிப்பாளர் சகாதேவராஜா அவர்களும், உதவிக் கல்விப் பணிப்பாளர் பரமதயாளன் அவர்களும், கௌரவ அதிதிகளாக அமரர் பத்மநாதன் மகேஸ்வரி அறக்கட்டளையின் இணைப்பாளர் கேசவகுமார் அவர்களும், லண்டன் எல்பீட் நாகபூசணி அம்மன் ஆலயத்தின் முன்னாள் தலைவரும் நீம் நிறுவனத்தின் நிறுவுனருமான மன்மதன் மற்றும் ரதி அவர்களும், நீம் நிறுவனத்தின் பணிப்பாளர் நிதர்ஷன் அவர்களும் கலந்து கொண்டனர்.



இதன் போது தரம்-5, க.பொ.த (சா/தர) பரீட்சை மற்றும் க.பொ.த (உ/தர) பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பதக்கங்கள் மற்றும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதன் போது பாடசாலையில் பிரதான பெயர்ப் பலகையும் திறந்து வைக்கப்பட்டது விசேட அம்சமாகும்.

THANA INSURANCE Inc.

## Thana Insurance Inc

### NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 27 | 23 | 29 | 27 | 35 | 30 | 44 | 36 | 61 | 48 | 84 | 63 |
| 25 K | 37 | 33 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 | 148 | 105 |
| 50 K | 69 | 62 | 88 | 74 | 103 | 92 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 240 | 406 | 318 | N/A | N/A |
| 200 K | 260 | 231 | 338 | 282 | 398 | 353 | N/A | N/A | N/A | N/A | N/A | N/A |

### 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 | 450 | 296 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | N/A | N/A | N/A | N/A |

INVESTMENTS

RRSP
RESP
TFSA

Protect
once
helps your life



LIFE INSURANCE
ஆயுட் காப்புறுதி
Thana Manickavasagar
Insurance Broker
Cell : 416-728-5772
Office : 416-519-3896
thana7@gmail.com www.thana.ca
fax : 647-547-8147
80 Nashndene Road ,#D218, Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை வைத்தியர்கள் கருப்பு பட்டி வார போராட்டத்தை முன்னெடுப்பு



அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உடனடியாக மக்களுக்கு கிடைக்க வழி செய்ய வேண்டும் என கோரி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றும் வைத்திய அதிகாரிகள் சங்கம் இணைந்து முன்னெடுத்து வரும் கருப்பு பட்டி போராட்டம் செவ்வாய்க்கிழமை (24) மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட வைத்தியசாலை பகுதிகளில் கருப்பு கொடி மற்றும் கருப்பு, தோரணங்கள் பறக்கவிடப்பட்டு,வைத்தியர்கள் தமது கையில் கருப்பு பட்டி அணிந்து கடமையை முன்னெடுத்து வருகின்றனர்.

அரச வைத்தியசாலைகளில் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்கள் தட்டுப்பாட்டை உடனடியாக தீர்க்கவும்,வான் உயரத்தில் பணவீக்கம் நடு வீதியில் உத்தியோகத்தர்கள், திறனற்ற சுகாதார அமைச்சால் இலவச மருத்துவம் வீழ்ச்சி, சுகாதாரத்திற்கான பண ஒதுக்கீட்டில் கை வைக்காதே, சுகாதார கட்டமைப்பு சீர்குலைந்துள்ளது, போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து கருப்பு பட்டி வார போராட்டத்தை செவ்வாய்க்கிழமை (24) வைத்தியர்கள் ஆரம்பித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் அதிகமான பணவீக்கம் மற்றும் முறையற்ற நிதி மேலாண்மை காரணமாக சுகாதார துறைக்கு ஏற்பட்டிருக்கும் பாரிய சவால்களை அரசாங்கம் விரைவில் நிவர்த்தி செய்ய வேண்டும்.

குறிப்பாக இந்த மருந்து தட்டுப்பாடு ஒரு வருடத்துக்கு மேலாக நாட்டில் நிலவி வருகிறது. இப்போது அது உச்சகட்டத்தில் உள்ளது. அனேகமான சத்திர சிகிச்சைக்குரிய மருந்துகள், அனஸ்தீசியா ட்ரக்ஸ் அதாவது நினைவு மாற்று சத்திர சிகிச்சைக்குரிய அனேகமான மருந்துகள் மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் இல்லை.

மன்னார் மாவட்டத்தில் இது பெரிய அளவு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மன்னார் மாவட்ட சனத் தொகைக்கு இது ஒரு பெரிய சவாலாக உள்ளது. ஏனென்றால் சிறிய சிகிச்சை மேற்கொள்வதற்கு கூட தேவையான மருந்துகள் இல்லை இரத்த அழுத்தம்,கொலஸ்ட்ரால், ஓ. பி. டி நோயாளிகளுக்கான, சிகிச்சைக்கான மருந்துகள் கூட இப்பொழுது இல்லை.

பாரியதொரு சவாலை மக்கள் இதன் மூலம் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அத்துடன் இந்த நாட்டில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய வரி அறவிடும் முறை மூலம் அரச வேலையில் இருக்கக்கூடிய நிபுணத்துவம் வாய்ந்த அதிகாரிகளிடம் இந்த வரி திணிக்கப் பட்டிருக்கிறது.

இதனால் வைத்தியர் ஒருவரின் அல்லது உயர்நிலை அதிகாரியிருவரினதோ 12 மாத சம்பளங்களில் இரண்டு மாத சம்பளத்தை அரசாங்கம் வரியாக பெற்றுக்கொள்கின்றது. இதனால் வைத்தியர்கள் பலர் இந்த நாட்டை விட்டு வெளியேற இது காரணமாக இருக்கிறது.

கடந்த வருடம் மாத்திரம் 600 தொடக்கம் 700 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறி இருக்கிறார்கள். இதனால் பெரியளவு வைத்தியர்கள் தட்டுப்பாடு ஏற்படப்போகிறது.

மன்னாரை எடுத்துக்கொண்டால் இங்கு ஸ்கேன் வைத்திய நிபுணர் இல்லை இகன்சல்டன்கள் பலர் இல்லை இஅதோடு சத்திர சிகிச்சைக்குரிய நிபுணர் ஒருவர் மாத்திரமே இருக்கிறார். மற்றவர் வெளிநாடு சென்றுவிட்டார், இன்னும் படித்தவர்கள், வைத்தியர்கள், நாட்டை விட்டு வெளியேறும் வாய்ப்பு இருக்கிறது.



இப்படி தொடர்ந்தால் இன்னும் ஒரு சில மாதங்களில் மன்னார் வைத்தியசாலையில் பெரிய அளவில் வைத்தியர் பற்றாக்குறை ஏற்படும்.

எனவே அரசாங்கம் இந்த அசாதாரண வரி திருத்தத்தை உடனடியாக மீள பெற வேண்டும் என்பதுடன் மருந்து தட்டுப்பாடு மற்றும் சுகாதார உபகரண தட்டுப்பாட்டை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

**- மன்னார் நிருபர் (24-01-2023)**

# மன்னாரில் ஐந்து கட்சிகளை உள்ளடக்கிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் அறிமுக கூட்டம்: தலைவர்கள் பங்கேற்பு



ஐந்து கட்சிகளை உள்ளடக்கிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் மன்னார் மாவட்டத்திற்கான உள்ளூராட்சி மன்ற தேர்தலின் வேட்பாளர் அறிமுக கூட்டம் புதன்கிழமை (25) காலை 11 மணியளவில் மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம் தலைமையில் இடம்பெற்ற குறித்த அறிமுக கூட்டத்தில் ஐந்து கட்சிகளை உள்ளடக்கிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளான ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஜனநாயக போராளிகள் கட்சி, தமிழ் தேசிய கட்சி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.



இதன் போது பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம் (ஜனா) சித்தார்த்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், எம். கே. சிவாஜிலிங்கம், தமிழ் தேசிய கட்சி சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி சிறிகாந்தா, ஜனநாயக போராளிகள் கட்சி சார்பாக வேந்தன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது குறித்த 5 கட்சிகளும் எதற்காக ஒன்றிணைந்து இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுகிறார்கள் என்பது குறித்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் சின்னமாக குத்து விளக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறித்தும் வேட்பாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

குறித்த அறிமுகக் கூட்டத்தில் குறித்த 5 கட்சிகளையும் உள்ளடக்கி மன்னார் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர் (25-01-2023)**

# சர்வதேச ஈரநில தினத்தை முன்னிட்டு மன்னாரில் பறவைகள் கண்காணிப்பகம் திறந்து வைப்பு



மன்னார் மாவட்டத்தில் உள்ள கோரை குளம் பகுதிக்கு ஆண்டுதோறும் பல ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பறவைகள் வருகை தருவதன் அடிப்படையில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் குறித்த பறவைகளை பார்வையிடுவதற்காக அமைக்கப்பட்ட பறவைகள் கண்காணிப்பகம் வியாழக்கிழமை (26) வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் பெண்கள் மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் “வேல்ட் ஓரியன் கிளப்” மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் அனுசரணையில் பறவைகள் மற்றும் ஈரநிலம் தொடர்பாக பணியாற்றும் நிறுவனங்களின் ஒத்துழைப்பில் குறித்த கண்காணிப்பகம் அமைக்கப்பட்டு வைபவரீதியாக பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பயன்பாட்டுக்கு கையளிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஸ்ரான்லி டிமேல், மன்னார் நகர் பிரதேச செயலாளர் ம.பிரதீப் பேராதனை பல்கலைக்கழக தாவர அறிவியல் பேராசிரியர் நிமல் குணதிலக, மழைக்காடுகள் தொடர்பான பேராசிரியர் சாவித்திரி குணதிலக, பறவைகள் ஆய்வு பேராசிரியர் சம்பத் செனவிரட்ன மற்றும் கயோமினி, பெண்கள் மேம்பாட்டு பேரவை மாவட்ட இணைப்பாளர் ரெபேக்கா மெராண்டா, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட அமைப்பின் பிரதிநிதிகள், கல்வி திணைக்கள அதிகாரிகள், கடற்படை உயர் அதிகாரிகள், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வின் இறுதியில் ஈரநிலங்களின் முக்கியத்துவம் மற்றும் மன்னார் நோக்கி இடம் பெயரும் வெளிநாட்டு பறவைகள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பான தெளிவு படுத்தலும் வழங்கப்பட்டது.






அதே நேரம் மன்னார் மாவட்டத்தை மையப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள பறவைகள் கழகத்தின் அங்குரார்ப்பணம் இடம்பெற்றதுடன் அக் கழகத்துக்கு தேவையான தொலைநோக்கி உள்ளடங்களான தொழில்நுட்ப கருவிகளும், புத்தகங்கள், வழங்கி வைக்கப்படமை குறிப்பிடத்தக்கது

**- மன்னார் நிருபர் (26.01.2023)**

# பாம்பு பிடிக்கும் தொழிலாளர்களுக்கு கிடைத்த பத்மஸ்ரீ விருது: இருளர் மக்களுக்கு கிடைத்த அங்கீகாரம்

செங்கல்பட்டை அடுத்த சென்னேரியைச் சேர்ந்த பாம்பு பிடிக்கும் 2 இருளர் தொழிலாளர்களுக்கு, மத்திய அரசு பத்மஸ்ரீ விருது அறிவித்துள்ளதால் இருளர் மக்களுக்கு கிடைத்த மிகப் பெரிய அங்கீகாரம் என பாம்பு பிடிக்கும் இருளர் தொழிலாளர்கள் பெருமிதம் தெரிவித்துள்ளனர். செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தை அடுத்த நெம்மேலி பகுதியில் இருளர் பாம்புபிடிப்போர் தொழில் கூட்டுறவு சங்கம் மூலமாக பாம்பு பிடிக்கும் சங்கம் இயங்கி வருகிறது.

இந்தசங்கத்தில், 362 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.இதில், குறிப்பாக பழையபெருங்களத்தூர், சென்னேரி, புதுப்பெருங்களத்தூர் மாம்பாக்கம், காயார், வெம்பேடு ஆகிய பகுதிகளில் உள்ள வனப்பகுதிகளில் இருந்து விஷப்பாம்புகளை பிடித்து வரும், இருளர் பழங்குடியின மக்கள் அந்த பாம்புகளை நெம்மேலி பகுதியில் உள்ள பாம்பு பண்ணையில் வழங்கி விஷம் எடுத்து, பின்னர் மீண்டும் அந்தந்த வனப்பகுதிகளில் அவற்றை விடுவதை தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர்.பாம்புகளை பிடித்து வரும் இருளர் மக்களின் வாழ்வாதாரம் மேம்படுவதற்காக, கடந்த 40 ஆண்டுகளுக்கு முன் தொழில் கூட்டுறவு சங்கம் மூலமாக இருளர் பாம்பு பிடிப்பு நல தொழில் கூட்டுறவு சங்கம் அமைத்து, தமிழக அரசுடன் இணைந்து நடத்தப்பட்டு வருகிறது.

இதில், உறுப்பினராக இருப்பவர்கள்



வடிவேலு மற்றும் மாசி. கொடிய விஷமுடைய பாம்புகளை பிடிப்பதில் வல்லவர்களாக திகழும் இவர்களை அடையாளம் கண்ட வெளிநாட்டவர் ரூம்லக்ஸ் விட்டகர் என்பவர் மூலம் பல்வேறு வகையான பாம்புகளை பிடித்தனர்.

வெளிநாட்டுப் பயணம்மேலும், பாம்பு பிடிப்பதில் கைதேர்ந்த வடிவேலு, மாசிஆகிய இருவரையும் அமெரிக்கா,தாய்லாந்து போன்ற வெளிநாடுகளுக்கு அழைத்து சென்று அங்குள்ள கொடிய விஷம் உள்ள பாம்புகளை பிடித்து விஷம் எடுத்து வந்தனர். தற்போது தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ளகொடிய விஷமுள்ள பாம்புகளை பிடிப்பதில் இருவரும் கை சேர்ந்தவர்களாக திகழ்ந்து வருகின்றனர். இந்நிலையில், மத்திய அரசு பாம்பு பிடிக்கும் தொழிலாளிகளான இவர்களை கவுரவிக்கும் வகையில் பத்ம விருது வழங்கப்பட உள்ளதாக மேற்கண்ட இருவரின் பெயர்களை அறிவித்துள்ளது. இதன்மூலம், இருளர் பழங்குடியின மக்களுக்கு மிகப்பெரிய அங்கீகாரம் கிடைத்துள்ளதாக பெருமிதம் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து, மாசியின் மனைவி சுசிலா கூறியதாவது: பாம்புகளை பிடித்து கொடுப்பதன் மூலம் கிடைக்கும் வருவாய் மூலம் எங்களின் வாழ்வாதாரம் உயர்ந்து வரும் நிலையில், மத்திய அரசின் இந்த அறிவிப்பு இருளர் பழங்குடியின மக்களுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரமாக கருதுகிறோம். மத்திய அரசுக்கும், இருளர் பழங்குடியின மக்களுக்கான இருளர் கூட்டுறவு பாம்பு பிடிப்பு நல சங்கத்துக்கும் நன்றிகளை தெரிவிக்கிறோம் என்றார்.அவரது மகன் சுகேந்திரன் கூறியதாவது:அடுத்த தலைமுறை இருளர் பழங்குடியின இளைஞர்களான நாங்கள் இத்தொழிலை தொடர்ந்து செய்யும் வகையில் எங்களுக்கு ஆர்வம் ஏற்பட்டுள்ளது என்றார்.

கூட்டுறவு தொழில் சங்கத்தின் நிர்வாக இயக்குநர் தங்கராஜ் கூறியதாவது:கடந்த 40 ஆண்டுகளாக பாம்பு பிடித்து வரும் எங்களுக்கென தனியாக எந்த அடையாளமும் இல்லாத நிலையில், தற்போது கிடைத்துள்ள இந்த பத்ம விருது மூலமாக எங்களுடைய சங்கத்துக்கும், இருளர் பழங்குடியின இனத்துக்கும் ஓர் அடையாளம் கிடைத்துவிட்டதாக பெருமிதம் கொள்கிறோம் என்றார்.

# சென்னை | குடியரசு தின விழா அணிவகுப்பில் முதலில் வந்த 'தமிழ்நாடு வாழ்க' வாசகம் தாங்கிய வாகனம்



74வது குடியரசு தினத்தையொட்டி சென்னையில் நடந்த விழாவில், அணிவகுப்பு ஊர்வலத்தில் முதலில் வந்த தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் வடிவமைக்கப்பட்டிருந்த "தமிழ்நாடு வாழ்க" வாகனம் பார்வையாளர்களின் கவனம் பெற்றது.நாட்டின் 74வது குடியரசு தினம் இன்று கொண்டாடப்பட்டது. சென்னை மெரினா காமராஜர் சாலையில் சேப்பாக்கம் பகுதியில் உள்ள உழைப்பாளர் சிலை அருகே நடைபெற்ற விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி, தேசியக் கொடியை ஏற்றி வைத்து, முப்படையினர், காவல்துறையினர் உள்ளிட்டோரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

சென்னையில் வழக்கமாக, மெரினா காந்தி சிலை பகுதியில் குடியரசு தின விழா நடைபெறும். அப்பகுதியில் மெட்ரோ ரயில் கட்டுமானப் பணிகள் நடப்பதால், இந்த முறை உழைப்பாளர் சிலை பகுதியில் விழா நடைபெற்றது.குடியரசு தினத்தையொட்டி, காலை 8 மணிக்கு முதல்வர் ஸ்டாலினும், அவரைத் தொடர்ந்து ஆளுநர் ஆர்.என். ரவியும் காவல் துறை மற்றும் ராணுவ அணிவகுப்புடன் விழா நடைபெறும் இடத்துக்கு வருகை தந்தனர். அவர்களுக்கு முப்படை தலைமை அதிகாரிகள், டிஜிபி, சென்னை காவல் ஆணையர் ஆகியோரை தலைமைச் செயலர் அறிமுகம் செய்து வைத்தனர்.

இதையடுத்து, தேசியக் கொடியை ஆளுநர் ஏற்றிவைத்தார். அப்போது இந்திய கடற்படைக்குச் சொந்தமான ஹெலிகாப்டர் மூலம் மலர் தூவப்பட்டது. அணிவகுப்பில் வலம் வந்த தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்பு துறை வாகனம்இதன் பிறகு, முப்படையினர், கடலோர காவல் படையினர், காவல், சிறை, வனம், தீயணைப்பு துறையினர், ஊர்க்காவல் படையினர் உள்ளிட்டோரின் அணிவகுப்பும், கடலோர காவல் படை,கடற்படை, விமானப்படையின் அலங்காரஊர்திகளும் வலம் வந்தன.

"தமிழ்நாடு வாழ்க" வாகனம்: இந்த அணிவகுப்பில், தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு வாழ்க என்று வாசகம் இடம்பெற்றிருந்த வாகனம் முதலில் வந்தது. இதனை பார்வையாளர்கள் உள்ளிட்டோர் கண்டு ரசித்தனர். இந்த வாகனத்தில் தமிழகம், தமிழ்நாடு சர்ச்சையைத் தொடர்ந்து, பொங்கல் பண்டிகையின்போது வாழ்த்துகளைத் தெரிவிக்கும் வண்ணம் பலரும் சமூக வலைதளங்களில் பதிவிட்டிருந்த தமிழ்நாடு என்ற எழுத்துடன்கூடிய கோலமும் இடம்பெற்றிருந்தது.

முன்னதாக, 2023 ஜனவரி 4ம் தேதி அன்று ஆளுநர் மாளிகையில் நடந்த நிகழ்ச்சியொன்றில்பேசிய ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழகம் என்று அழைப்பது மிக பொருத்தமாக இருக்கும் என்று பேசியிருந்தார். இது சர்ச்சையை ஏற்படுத்தியது. அதேபோல், நடந்து முடிந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் பங்கேற்ற அவர் ஆளுநர் உரையின்போது தமிழ்நாடு என்று சொல்லை தவிர்த்திருந்தார்.

இந்நிலையில் இதுகுறித்து விளக்கம் அளித்த அவர், "வரலாற்று பண்பாட்டுச் சூழலில், தமிழகம் என்பதை மிகவும் பொருத்தமான வெளிப்பாடு என்ற கண்ணோட்டத்தில் குறிப்பிட்டேன். எனது கண்ணோட்டத்தை தமிழ்நாட்டின் பெயரை மாற்றுவதற்கான பரிந்துரை போல பொருள் கொள்வதோ, அனுமானம் செய்து கொள்வதோ தவறானது மற்றும் யதார்த்தத்துக்கு புறம்பாடு என்று தெரிவித்துக் கொள்கிறேன்" என்று விளக்கம் அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# மொழிப்போர் தியாகிகள் நினைவு நாள்: முதல்வர் ஸ்டாலின், அரசியல் தலைவர்கள் புகழஞ்சலி

மொழிப்போர் தியாகிகள் நினைவுநாளை ஒட்டி, தமிழ் மொழிக்காக உயிர்நீத்த தியாகிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் புகழஞ்சலி செலுத்தியுள்ளனர்.தமிழ் மொழியைக் காப்பதற்காக உயிர்நீத்த தியாகிகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மொழிப்போர் தியாகிகள் தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. இதன் பகுதியாக சென்னை, கிண்டி, காந்தி மண்டபம் வளாகத்தில் உள்ள மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபத்தில் தமிழ்மொழிக்காக உயிர்நீத்த தியாகிகளின் உருவப் படங்களுக்கு முதல்வர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

நிகழ்வில், அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், சென்னை மேயர் ஆர்.பிரியா, சட்டப்பேரவை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.பின்னர், முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது ட்விட்டர் பதிவில், ``இந்தித்தான் இந்தியா எனின் அந்நிலை மாற்ற இன்னுயிரை ஈந்தேனும் தமிழ் மானம் காப்போம் என உயிர்நீத்த மொழிக்காவலர்களின் திருவுருவப் படங்களுக்குக் கிண்டி மொழிப்போர்த் தியாகிகள் மணிமண்டபத்தில் மரியாதை செலுத்தினேன்.

இனி ஓர்உயிரையும் இழக்காமல் நம் உரிமையை நிலைநாட்டுவோம்'' எனக் கூறியுள்ளார்.இதேபோல் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி தனது ட்விட்டர் பதிவில், ``இந்தி மொழி திணிப்பை எதிர்த்து, மாபெரும் புரட்சிப் போராட்டத்தில் ஈடுபட்டு, இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்பதை உலகுக்கு எடுத்துரைத்து, அன்னைத் தமிழுக்காகத் தியாக வேள்வியில் இன்னுயிர் துறந்த மாவீரர்களான, மொழிப்போர் தியாகிகளுக்கு எனது வீரவணக்கங்கள்'' எனக் குறிப்பிட்டுள்ளார். முன்னதாக அதிமுக முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் கட்சி நிர்வாகிகளோடு ராயபுரத்தில் இருந்துமூலகொத்தளத்தில் உள்ள மொழிப்போர் தியாகிகள் நினைவிடம் வரைமவுன ஊர்வலம் நடத்தினார். தொடர்ந்து நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார்.

சென்னை, பசுமை வழிச்சாலையில் உள்ள தனது இல்லத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், மொழிப்போர் தியாகிகளின் உருவப் படங்களுக்கு மரியாதை செலுத்தினார். வடசென்னை மூலகொத்தளத்தில் உள்ள மொழிப்போர் தியாகிகள் நினைவிடத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி, மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

அவருடன் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஐட்ரீம்ஸ் மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர், எழிலரசன், தாயகம் கவி உள்ளிட்டோரும் மரியாதை செலுத்தினர்.மதிமுக தலைமை நிலையச் செயலாளர் துரை வைகோவும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தனது ட்விட்டர் பதிவில், ``அன்னைத் தமிழ்மொழியைக் காக்க தங்கள் இன்னுயிரை ஈந்த மொழிப்போர் தியாகிகளைப் போற்றும் வீரவணக்க நாளில் அவர்களைத் தாய்மொழிப் பற்றோடு நினைவு கூர்ந்து வணங்குவோம்'' எனத் தெரிவித்துள்ளார்.

# பதற வைக்கும் பாகிஸ்தான் பொருளாதாரம்



இலங்கையைத் தொடர்ந்து பாகிஸ்தான் இப்போது கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. அண்டை நாடுகள் வலுவிழந்து போவது நமக்கு நல்லதல்ல. அந்த நாட்டுடன் ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகத்தில் ஏற்படும் சரிவு தொடங்கி, அகதிகள் ஊடுருவல், அதனால் நிகழக்கூடிய சட்டம் ஒழுங்கு பிரச்சினை வரை பல சவால்களை நாம் சந்திக்க வேண்டி வரும். இதன் தொடர் விளைவாக எழும் அரசியல் மற்றும் பொருளாதார அழுத்தம் தவிர்க்க இயலாதது. இது நமது வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படுத்தவே செய்யும். எனவே, பாகிஸ்தானில் நிலவும் பொருளாதார பதற்றம் விரைவில் தணிந்து இயல்பு நிலை திரும்பினால் நல்லது.

பொருளாதாரத்தில், தெற்காசியாவின் வலுவற்ற நாடாகப் பாகிஸ்தான் உள்ளதாக உலக வங்கி கூறுகிறது. இந்த இக்கட்டில் இருந்து நாட்டை மீட்க அறிவார்ந்த யுக்தி, கடுமையான முடிவுகளை எடுப்பதற்கான அரசியல் துணிவு, மக்களை ஊக்கப்படுத்தி நாட்டின் மறுகட்டமைப்புக்கு வழி நடத்திச் செல்லும் பொறுப்பு வாய்ந்த தலைமை கண்ணுக்கு எட்டிய தூரம் வரை காணக் கிடைக்கவில்லை. எனவே இப்போதைக்கு, "வெளி ஆதரவு" மட்டுமே பாகிஸ்தான் நாட்டை மோசமான விளைவுகளில் இருந்து காக்க முடியும்.

பாகிஸ்தானின் பொருளாதார சீர்குலைவுக்கு கடந்த ஜூலை மாதம் ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளம் காரணமாக கூறப்படுகிறது. விளைநிலங்களில் தேங்கிய தண்ணீரை அகற்றும் பணிகள் நடக்கவில்லை என்று கூறுகின்றனர். உணவுப்பொருள் உற்பத்தி மிக மோசமாக பாதிக்கப்படுவதைப் பற்றிக் கவலைப்படாத அரசு நிர்வாகம், மக்களை இன்று உணவுக்காகத் தெருவில் கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறது. கோதுமை விளைச்சலை ஊக்குவிக்க, உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க, வேளாண் தொழிலை மீட்டெடுக்க அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக உணவுப் பொருள் இறக்குமதியில் அதிக அக்கறை காட்டுகிறது. தற்போது பாகிஸ்தானின் அந்நிய செலாவணிக் கையிருப்பு மிகவும் குறைந்துள்ளது. கைவசமுள்ள 5 பில்லியன் டாலர், 3 வாரங்களுக்கு மட்டுமே தாக்குப் பிடிக்கும். அதன் பிறகு..?

சென்ற மாத இறுதியில் பாகிஸ்தானில் பணவீக்கம் 24.5% ஆக உயர்ந்தது. வெளிச்சந்தையில் அத்தியாவசிய, உணவுப்பொருட்களின் விலை, முந்தைய மாதத்தை விட 30% முதல் 50% வரை அதிகரித்த வண்ணம் உள்ளது. சாமான்யர்களின் அன்றாட வாழ்க்கை சவாலாக மாறி வருகிறது.

"பொருளாதார மேலாண்மை மோசமாக இருக்கிறது் பொது நிதியைக் கையாளுவதில் திறமையில்லை பொருளாதார நிலையற்ற தன்மை, சமூக முன்னேற்றத்தில் அலட்சியம், பரவலான ஊழல், வேலை வாய்ப்பின்மை அதிகரிப்பு, ஆழமாகப் பரவும் வறுமை, கடன் சுமைப் பெருக்கம். தவறான பொருளாதாரக் கொள்கை காரணமாக, அந்நிய சக்திகளை சார்ந்து இருக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப் படுகிறோம்" என்று சில ஆண்டுகளுக்கு முன்பே பாகிஸ்தானின் பிரபல பொருளாதார நிபுணர் மீக்கல் அஹமது வெளிப்படையாகக் கூறினார். யாரும் செவி மடுக்கவில்லை.

"அந்நியக் கடன் பெறுவதை அரசுத் துறைகள் கொண்டாடுகின்றன. மற்றவரின் பணத்தில் வாழ்வது தேசிய சாதனை ஆகாது. இரவல் வளர்ச்சி நீண்ட நாளைக்கு உதவாது" என்று அங்கே பலரும் எச்சரித்தார்கள். எந்தப் பலனும் இல்லை. இன்று..? அந்நிய நிதியுதவியை எதிர்நோக்கிக் காத்துக் கிடக்கிறது நாடு. தவறான ஆட்சியாளர்களின் மோசமான பொருளாதார மேலாண்மை எந்த அளவுக்கு சீரழிவைத் தரும் என்பதற்கு பாகிஸ்தான் மற்றுமொரு உதாரணம்.

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்குதல் மற்றும் ஊரகப் பொருளாதாரத்தை வலுவாக்குதல் மூலம் மட்டுமே படிப்படியாக பாகிஸ்தான் பொருளாதார வளர்ச்சி காண முடியும். இதற்கு சில ஆண்டுகள் ஆகலாம். ஆனாலும் இதுதான் அந்த நாடு பயணிக்க வேண்டிய சரியான பாதை. இந்த மாதம் சுமார் 450 மில்லியன் டாலர் அளவுக்கு உலக வங்கி நிதியுதவி கிடைக்கும் என்று நம்பிக்கையுடன் காத்து இருந்தார் பாகிஸ்தான் பிரதமர். ஆனால், அடுத்த நிதியாண்டில்தான் இது பரிசீலிக்கப்படும் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது. இனி சவுதி, ஐக்கிய அரபு அமீரகம் மட்டுமே ஓரளவுக்கு உதவ முடியும். இந்நிலையில், இந்தியாவுடன் நல்லுறவைப் பேணுமாறு அமீரகம், பாகிஸ்தானுக்கு அறிவுரை கூறியுள்ளதாய் செய்திகள் வருகின்றன.

அண்டை நாடுகளுடன் நட்புறவு என்றைக்கும் நல்லது. அண்டை நாடுகள்தாம் ஆபத்தில் விரைந்து உதவ முடியும். ஆனால் சீனா போன்ற வல்லரசு நாடுகளின் உதவி தீர்வைத் தராது. பாகிஸ்தானின் பொருளாதார சீர்குலைவுக்கு சீனாவின் உதவி ஒருவகையில் காரணம் என்கிற கருத்தும் பரவி வருகிறது. அப்படியானால், இந்தியா போன்ற ஜனநாயக நாடுதான், உண்மையாகக் கைகொடுத்து உதவ முடியும். இதனால் இந்தியாவுக்குப் பெருமை என்பதை விட, உலக அமைதிக்கு இது மிக நல்லது என்பதே அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. கடந்த 75 ஆண்டுகளில், நேரு தொடங்கி இந்திய அரசியல் தலைமை தொடர்ந்து மேற்கொண்டு வரும் பொருளாதார நடவடிக்கைகளின் பயன் நமக்குமே கூட இன்றுதான் புரிய வருகிறது.

இலங்கை மற்றும் பாகிஸ்தானின் பொருளாதார வீழ்ச்சி உலக நாடுகளுக்குச் சொல்லும் வலுவான செய்திகள் இரண்டு. அரசின் பொருளாதார மேலாண்மை அடித்தட்டு மக்களின் அன்றாட வாழ்க்கை வரை நீள்கிறது. எனவே, ஒருபோதும் பொருளாதாரக் கொள்கையில் அலட்சியமாக இருக்கக் கூடாது. இரண்டாவது, அந்நிய உதவி புதை மணல் போன்றது. அளவு கடந்தால், மீள்வது எளிதல்ல. எனவே, அந்நிய கடன் பெறுவதில் கூடுதல் கவனம் தேவை. உலகம் உணருமா..?

சின -

# சூர்யாவை நஷ்டத்தில் தள்ளிய 5 படங்கள்



தமிழ் சினிமாவில் டாப் ஹீரோக்களில் ஒருவராக இருக்கக்கூடியவர் நடிகர் சூர்யா. நடிப்பின் மூலம் சினிமா துறையில் தனக்கென ஒரு தனி இடத்தை பிடித்தவர். நடிப்பினை தொடர்ந்து படங்கள் தயாரிப்பதில் ஆர்வம் ஏற்பட்டு 2 டி என்டர்டைன்மென்ட் நிறுவனத்தை தொடங்கியுள்ளார். அதில் தனது மனைவியை வைத்து தயாரித்த படங்கள் அனைத்தும் தோல்வியை மட்டுமே சந்தித்தது. இவ்வாறு தோல்வியை சந்தித்த இந்த 5 படங்களை பற்றி பார்க்கலாம்.

பொன்மகள் வந்தாள்: 2020 ஆம் ஆண்டு ஜே.ஜே பிரெட்ரிக் இயக்கத்தில் சூர்யா தயாரிப்பில் ஜோதிகா வழக்கறிஞராக நடித்து வெளிவந்த திரைப்படமாகும். இதில் சைக்கோ கொலையாளியை தனது திறமையின் மூலம் வெளிச்சத்திற்கு கொண்டு வரும் திறமையான வழக்கறிஞராக நடித்திருப்பார். அதிலும் ஜோதிகாவுடன் தமிழ் திரை உலகின் முக்கிய இயக்குனர்களாக இருக்கக்கூடிய 5 இயக்குனர்கள் இப்படத்தில் இணைந்து நடித்துள்ளனர். பொன்மகள் வந்தால் திரைப்படம் நேரடியாக பிரைம் வீடியோவில் வெளியிடப்பட்டது.

ஜாக்பாட்: இயக்குனர் கல்யாண் இயக்கத்தில் 2019 ஆம் ஆண்டு வெளியான ஆக்சன் கலந்த நகைச்சுவை திரைப்படம் ஆகும். இதில் அட்சய பாத்திரம் என்ற பொருளை மையமாகக் கொண்டு இப்படம் அமைந்துள்ளது. இந்த அட்சய பாத்திரத்தில் நாம் எதை கொடுக்கிறோமோ அந்த பொருள் பல மடங்காக பெருகி எடுக்க எடுக்க வந்து கொண்டே இருப்பது போல் சுவாரசியமாக கதையினை அமைத்துள்ளனர். இருந்தும் இப்படம் வெற்றி படமாக அமையவில்லை.

மகளிர் மட்டும்: இசையமைப்பாளர் ஜிப்ரான் இசையமைப்பில் 2டி என்டர்டைன்மென்ட் நிறுவனத்தின் தயாரிப்பில் ஜோதிகா, சரண்யா பொன்வண்ணன், ஊர்வசி, பானுப்ரியா, நாசர் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். மூன்று பெண்களுக்குள் நடக்கும் அட்ராசிட்டிகளை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. இப்படமானது ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை பெறவில்லை.

36 வயதினிலே: 2015 இல் இயக்குனர் ரோ'ன் ஆண்ட்ரூஸ் இயக்கத்தில் சந்தோஷ் நாராயணன் இசை அமைப்பில் ரகுமானுக்கு ஜோடியாக ஜோதிகா நடித்து வெளிவந்த படம். குடும்பத்தின் பொறுப்புகளின் மூலம் தனது கனவுகளையும் அடையாளத்தையும் தொலைக்கும் ஒரு பெண் அதனை எவ்வாறு தனது 36-வது வயதினில் மீட்டுக் கொண்டு வருகிறார் என்பதை மையமாக கொண்டு இப்படமானது அமைந்துள்ளது.

உடன்பிறப்பு: 2021 ஆம் ஆண்டு நடிகர் சூர்யா-வின் 2டி என்டர்டைன்மென்ட் தயாரிப்பில் குடும்ப பாசத்தினை மையமாகக் கொண்டு அமைந்த திரைப்படம் ஆகும். அதிலும் கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு உறவுகளை வளர்ப்பது ஏன் முக்கியம் என்பதை வெளிச்சம் போட்டு காட்டுவது போல் அமைந்து உள்ளது. இப்படத்தில் குடும்ப சென்டிமென்ட்க்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.

# என் பெற்றோரின் ஆத்ம சாந்திக்காக தான் நான் சினிமாவை விட்டு விவசாயத்திற்கு முழுமையாக மாறினேன் - இயக்குநர் பாண்டிராஜ்



விவசாயம் செய்பவர்கள் பலர் நஷ்டம் அடைகிறார்கள். ஆனால், விவசாயத்தை மாற்று வழியில் செய்பவர்கள், லாபத்தை சம்பாதிக்கிறார்கள். நான் இந்த வருடம் 114 மூட்டை நெல் அறுவடை செய்தேன். எனது மனைவி அறுவடை செய்யும் வரை ஆனா செலவை ஒரு டைரியில் எழுதி வைத்திருந்தார். நெல் விற்று பணத்தை கணக்கிட்டு இந்த வருடம் நமக்கு லாபம் என்று கூறினார். சினிமா எடுத்து பல கோடிகள் சம்பாதித்து கிடைத்த மகிழ்ச்சியை விட, விவசாயம் மூலம் வரும் நெல்லில் சாப்பிடும் போது அதிகமான மகிழ்ச்சி கிடைக்கிறது.

விவசாயத்தில் நஷ்டம் வந்தாலும் தொடர்ந்து விவசாயிகள் அதையே தான் செய்கிறார்கள். இந்த வருடமாவது லாபம் பார்த்து விடுவோம் என்று மனம் தளராமல் இருப்பதுதான் விவசாயத்தின் சக்தி. ஒவ்வொரு முறை நான் ஊருக்கு செல்லும்போதும் காரில் தான் செல்வேன். அப்போது மாலை 6 மணிக்கு முன்பு ஓட்டுநரை வேகமாக ஓட்டுங்கள் என்று அழுத்தம் கொடுப்பேன். நீராக வீட்டிற்கு செல்ல மாட்டேன். விவசாய நிலங்களுக்கு சென்று அங்கு விளைந்த காய்கறிகள் பழங்களை அப்படியே சாப்பிட்டால் தான் எனக்கு திருப்தியாக இருக்கும்.

எனது பெற்றோர்கள் விவசாயிகள், நான் சினிமாவிற்கு வந்துவிட்டேன். கடைக்குட்டி சிங்கம் படத்திற்கு முன்பு விவசாயிகளின் வலிகளை சொல்ல வேண்டும் என்று நினைத்திருந்தேன். ஏனென்றால், எனது பெற்றோர் பத்து வருடமாக விவசாயம் செய்யவில்லை. இப்போது நான் விவசாயம் செய்ய முடிவெடுத்து எடுப்பதற்கான கதையை கூறினால் நேரம் போதாது. ஒரு படமே எடுக்கலாம். ஆனால், என் நண்பன் ஒரு நாள் நீ தேசிய விருது முதல் பல விருதுகளையும் வாங்கி விட்டாய். பெரிய நாயகர்களைக் கொண்ட படம் இயக்கி விட்டாய். இதனால் உனது பெற்றோர்களின் ஆத்மா சாந்தியடையுமா என்று கேட்டான். அவர்கள் சந்தோஷமாக தானே இருக்கிறார்கள் என்று கூறினேன். அவர்கள் விவசாயம் செய்த நிலம் வீணாக கிடக்கிறது. அதை பார்க்கும்போது அவர்களால் எப்படி சந்தோஷமாக இருக்க முடியும் என்று கேட்ட ஒரு கேள்விதான் என்னை சென்டிமெண்டாக விவசாயத்தை செய்ய வேண்டும் என்று முடிவை தீர்க்கமாக எடுக்க வைத்தது. எங்களது நிலத்தை பார்க்கும் போது எனக்கு வருத்தமாக இருந்தது. எனது பெற்றோர் வாழ்ந்த நிலம் பாழாய் இருந்தது. அங்கே மது அருந்திவிட்டு பாட்டில் போட்டு சாராயம் காய்ச்சுவது முதல் என் அப்பாவின் நிலம் மோசமாக இருந்தது. அதனால் நான் அதில் விவசாயம் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்து துவங்கினேன். நிறைய சிக்கல்களை சந்தித்தேன். வேலி, கிணற்றில் தண்ணீர் இல்லை, என பல தடைகளை தாண்டவே பணமும், உழைப்பும் செலவானது. சுற்றி இருந்தவர்களும், எனக்கு விவசாயத்தில் அதிர்ஷ்டம் இல்லை என கூற ஆரம்பித்தார்கள். ஆனால் விடாது அதில் மீண்டும் மீண்டும் முயற்சி செய்த பிறகு, நிலத்திற்கு நீர் வந்தது. இதை எல்லாம் பார்க்கும் போது, இத்தனை ஆண்டுகளாக விவசாயிகள் எதையும் எதிர்பாராமல் இதற்காக தான் உழைத்து இருக்கிறார்கள் என்று தெரியவருகிறது. எத்தனை கஷ்டங்கள் வந்தாலும், அவர்கள் அதை தாண்டி பயிரை விளையவைத்து நமக்கு கொடுக்க பாடுபடுகிறார்கள். அப்படிபட்டவர்களை கௌரவிக்கும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வது மகிழ்ச்சி. நானும் கார்த்தி சாரும் இணைந்து கடைக்குட்டி சிங்கம் திரைப்படம் எடுத்த மகிழ்ச்சியை விட, அவர் இந்த உழவன் அமைப்பு ஆரம்பித்ததில் தான் எனக்கு மகிழ்ச்சி அதிகம். இங்கு வந்தவர்களின் முகத்தை பார்க்கும் எனக்கு மகிழ்ச்சியை தருகிறது. அதோடு அரசு நூறு நாள் வேலை திட்டத்தில் உள்ள குறைகளை களைய வேண்டும். அந்த திட்டத்தை ஆக்கபூர்வமாக விவசாயத்திற்கு பயன்படுத்த வேண்டும். ஒரு நாள் கூலி 250 ரூபாய் பெற்றுக் கொண்டு இரண்டு மணி நேரம் கூட வேலை செய்யாமல் அடுத்தவரின் கதைகளை பேசுவதற்கான இடமாக பயன்படுத்தி வருகிறார்கள். ஆகையால் மத்திய அரசு நூறு ரூபாயும் மாநில அரசு 100 ரூபாயும் விவசாயி 50 ரூபாயும் கொடுத்தால் விவசாயத்தில் முன்னேற்றம் ஏற்படும். அதேபோல தூர் வாரும் வேலைகளையும் மேலோட்டமாகவே செய்கிறார்கள். சில நாட்களிலேயே மீண்டும் பழைய நிலைக்கு வந்து விடுகிறது. தமிழ்நாட்டு அரசு இதற்கு உரிய முறையை முன்னெடுத்து செய்தால் நாடும், விவசாயமும் வளர்ச்சி பாதையில் செல்லும் என்றார்.

இந்தியா செய்திகள் India News

# குஜராத் கலவரம்: பிரதமர் மோடிக்கு எதிரான பிபிசியின் ஆவணப்படத்திற்கு தடை



பிரதமர் மோடி குறித்து பிபிசி சேனல் தயாரித்துள்ள குஜராத் கலவரம் தொடர்பான ஆவணப்படத்தை டுவிட்டர் மற்றும் யூடியூபில் வெளியிட மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சகம் தடை விதித்துள்ளது.

மேலும் ஆவணப்படம் தொடர்பான லிங்க்குகளுடன் பகிரப்பட்ட 50-க்கும் மேற்பட்ட ட்வீட்களை நீக்கவேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

ஆவணப்படத்தை யாரேனும் மீண்டும் பதிவேற்றினாலோ அல்லது ட்வீட் செய்தாலோ அதன் புதிய லிங்க்குகளை நீக்குமாறு யூடியூப் மற்றும் ட்விட்டரிடம் மத்திய அரசு கூறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மத்திய அரசு உத்தரவிட்டதைத் தொடர்ந்து, திரிணாமுல் காங்கிரஸ் எம்பி டெரிக் ஓ பிரையன் உள்ளிட்ட சில எதிர்க்கட்சித் தலைவர்களின் ட்வீட்களை டுவிட்டர் நீக்கியது.

இதற்கு ஆட்சேபம் தெரிவித்த பிரையன், "பிபிசி ஆவணப்படத்தின் எனது ட்வீட்டை ட்விட்டர் நீக்கியுள்ளது. லட்சக்கணக்கான பார்வைகளைப் பெற்றது. ஒரு மணி நேர பிபிசி ஆவணப்படம், சிறுபான்மையினரை பிரதமர் எப்படி வெறுக்கிறார் என்பதை அம்பலப்படுத்துகிறது" என கூறியுள்ளார்.

கடந்த 2002-ம் ஆண்டு நிகழ்ந்த குஜராத் கலவரத்தோடு, அப்போது முதல்வராக இருந்த நரேந்திர மோடியை தொடர்புபடுத்தி பிபிசி இந்த ஆவணப்படத்தை தயாரித்துள்ளது.

"இந்தியா: மோடிக்கான கேள்விகள்" எனும் தலைப்பிலான இந்த ஆவணப்படம் இரண்டு பாகங்களாக தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணப்படத்தில், "இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இந்தியாவின் முஸ்லிம் சிறுபான்மையினருக்கும் இடையே இருக்கும் பதற்றங்களை பாருங்கள். ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்ட 2002 குஜராத் கலவரத்தில் நரேந்திர மோடிக்கு உள்ள பங்கு குறித்து விசாரிக்க வேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆவணப்படத்திற்கு மத்திய அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்து கருத்து தெரிவித்துள்ள மத்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பக்சி, "இந்தியாவுக்கு எதிராக பிரச்சாரம் செய்யும் நோக்கில் இந்த ஆவணப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணப்படத்தை தயாரித்த நிறுவனத்தை இது பிரதிபலிக்கிறது. ஒரு சார்பான ஆவணப்படம் இது. காலனியாதிக்க மனோபாவம் இன்னமும் தொடர்வதை இது காட்டுகிறது. இந்த ஆவணப்படம் கண்ணியமானது அல்ல" என விமர்சித்துள்ளார்.

குஜராத்தில் கலவரம் தொடர்பாக விசாரணை நடத்திய உச்ச நீதிமன்றம், குஜராத் கலவரத்தின்போது முதல்வராக இருந்த பிரதமர் மோடி எந்த தவறும் செய்ததற்கான ஆதாரம் எதுவும் இல்லை என அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

# பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனுக்கும் இந்திய தூதரகத்தின் 2 ஆம் நிலை அதிகாரிக்கும் இடையில் சந்திப்பு



மன்னாருக்கு செவ்வாய்க்கிழமை (24) மதியம் விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய தூதரகத்தின் 2 ஆம் நிலை அதிகாரி நாகராஜன் ராமசாமி வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனை சந்தித்து கலந்துரையாடி உள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினரின் இல்லத்தில் குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பின் போது தற்போதைய அரசியல் நிலவரங்கள் தொடர்பாக கலந்துரையாடப் பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

(24-01-2023)



# ஒரு இடைக்கால ஏற்பாடாக 13ஆவது திருத்தம்?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை தமிழ் தரப்பிடமிருந்துதான் முதலில் வெளிப்பட்டது. ஆறு கட்சிகள் இணைந்து இந்தியாவை நோக்கிக் கூட்டுக் கோரிக்கையை வைத்த பொழுது அது ஒரு வாதப்பொருளாக மாறியது. கடந்த தைப்பொங்கல் விழாவில் வைத்து ரணிலும் அதைத்தான் சொன்னார். இப்பொழுது ஜெய்சங்கரும் அதைத்தான் கூறியிருக்கிறார். அவர் அவ்வாறு கூறுவதற்கு சில கிழமைகளுக்கு முன்பு தயான் ஜயதிலக்கவும் அதுபற்றிக் கூறியிருந்தார். 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு 15 ஆண்டுகள் அவகாசம் கொடுக்க வேண்டும் என்று தயான் கூறுகிறார். ரணில் விக்ரமசிங்க கூறுகிறார் தனக்கு ஒன்றரை ஆண்டுகள் தேவை என்று.எனவே கூட்டிக்கழித்துப் பார்த்தால் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவது என்பது ஒரு வலிமையான கருத்தாக மேலெழுகிறது.

அது ரணில் விக்கிரமசிங்கவுக்கு வசதியானது. அவர் முன்பு மைத்திரியோடு ஆட்சியைப் பகிர்ந்த காலகட்டத்தில் சம்பந்தரோடு இணைந்து உருவாக்கிய ஒரு புதிய யாப்புக்கான இடைக்கால வரைபானது 13ஆவது திருத்தத்தை கடந்து செல்கின்றது. அதை அவர் "எக்கிய ராஜ்ய" என்று கூறினார். அப்படி ஒரு தீர்வை கட்டியெழுப்புவது குறித்து அவர் இந்தியாவுக்கு தெரிவித்திருக்கவில்லை. தமிழ் தரப்பும் தெரிவித்திருக்கவில்லை. அவ்வாறு தமக்கு தெரிவிக்கவில்லை என்பதனை அப்போதிருந்த இந்தியத் தூதுவர் சம்பந்தரை சந்தித்தபொழுது குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டியிருந்தார். அது சண்டே டைம்ஸ் பத்திரிகையில் வெளியாகியிருந்தது. ஆனால் இப்பொழுது எக்கிய ராஜ்யவிலிருந்து கீழிறங்கி மீண்டும் 13ஐ முழுமையாக அமுல்படுத்துவது என்ற நிலைக்கு அரசியல் வந்திருக்கிறது. மகிந்தவும் 13ஐ ஏற்றுக் கொள்கிறார், சஜித்தும் 13ஐ ஏற்றுக் கொள்கிறார், எனவே பெரிய சிங்களக் கட்சிகள் மத்தியில் அதற்கு எதிர்ப்பு இல்லை. அதனால் 13ஐ முழுமையாக அமல்படுத்துவது என்ற விடயத்தில் ரணிலுக்கு பெரிய சவால்கள் இல்லை, மேலும் அதன் மூலம் இந்தியாவை வைத்துத் தமிழ்த் தரப்பைக் கையாள முடியும் என்றும் அவர் நம்புவார்.

இந்தியா கடந்த ஆண்டு இலங்கைத்தீவில் ஒப்பீட்ளவில் அதிகமாகப் பெற்றுவிட்டது. பொருளாதார நெருக்கடியின் பின்னணியில் முதலில் உதவிய நாடாகவும் அதிகமாக உதவிய நாடாகவும் இந்தியா காணப்படுகிறது. அதன் மூலம் இந்தியா இலங்கை மீதான தனது பிடியை ஒப்பீட்டளவில் அதிகரித்த அளவில் இறுக்கிக் கொண்டு விட்டது. கடந்த 13 ஆண்டுகளில் இந்தியா இலங்கை தீவில் அதிகம் பெற்றுக் கொண்ட ஒரு ஆண்டாக கடந்த ஆண்டைக் குறிப்பிடலாம். கடனை மீளக்கட்டமைக்கும் விடயத்திலும் சீனாவை முந்திக்கொண்டு இந்தியா இலங்கைக்கு சாதகமாக முடிவுகளை எடுத்தது. இதில் உள்ள வேடிக்கை என்னவென்றால், இந்தியா கடனை மீளக் கட்டமைக்கத் தயார் என்ற செய்தியை "இந்து" பத்திரிகையைப் பார்த்துத் தான் வெளியுறவு அமைச்சர் அலி சபரி அறிந்து கொண்டார் என்பது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வருவதை இந்தியா விரும்பவில்லை என்று கருதப்பட்டது. ஆனால் இந்தியாவை சுதாகரிப்பதில் அவர் கடந்த ஆண்டு முழுவதிலும் வெற்றிகரமாக உழைத்திருப்பதாகவே தெரிகிறது. அவரை இந்தியாவுக்கு வருமாறு ஜெய்சங்கர் கடந்த வாரம் உத்தியோக பூர்வமாக அழைப்பு விடுத்திருக்கிறார். இவ்வாறு நெருக்கடியான காலத்தில் உதவி புரிந்ததன்மூலம் இந்தியா சீனாவை முந்திக்கொண்டு கொழும்பை அதிகம் நெருங்கி வரலாமா என்று முயற்சிக்கின்றது. இவ்வாறு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான ராஜதந்திரப் போட்டிக்குள் ஈழத் தமிழர்களை நுட்பமாக சிக்க வைக்கும் தந்திரம் மிக்கவர் ரணில் விக்கிரமசிங்க என்பதே ஈழத் தமிழர்களுக்கு இதிலுள்ள பாதகமான அம்சம் ஆகும்.

தந்திரசாலியான ரணில் மூன்று முனைகளில் விடயங்களை அணுகுகிறார். முதலாவது தமிழ்த் தரப்போடு பேச்சுவார்த்தை. இரண்டாவது இந்தியாவை வளைத்துப் போடுவது. மூன்றாவது ஐநாவை சுதாகரிப்பது. ஒருபுறம் 13, இன்னொருபுறம் நிலைமாறுகால நீதி. இந்த இரண்டையும் சமாந்தரமாக அவர் முன்னெடுக்க முயற்சிக்கக்கூடும். தென்னாபிரிக்கப் பாணியிலான நல்லிணக்க முயற்சி என்று கூறிக்கொண்டு அவர் நிலைமாறு கால நீதிச் செயற்பாடுகளை புதிய வடிவத்தில் உயிர்ப்பிக்க முடியும். அதன்மூலம் அவர் ஐநாவைச் சமாளிக்கலாம். ஐநா தீர்மானங்களில் 13 வது திருத்தம் ஒரு தீர்வாக முன்வைக்கப்படுகிறது. இந்தியா அதை ஊக்கிவித்தது. எனவே நிலைமாறுகால நீதி, 13வது திருத்தம் என்பவற்றின் ஊடாக ரணில் பல இலக்குகளை அடைய முயற்சிக்கிறார்.

கடந்த 21 ஆம் தேதி சம்பந்தரையும் சுமந்திரனையும் அவர் சந்தித்தபொழுது அவர் தெரிவித்த கருத்துக்களின் பிரகாரம் 13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவதற்குரிய நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகளை அரசாங்கம் சிந்திக்கிறது என்ற ஒரு தோற்றம் உருவாக்கப்படுகிறது. காணி அதிகாரம், போலீஸ் அதிகாரம் போன்ற விடயங்களில் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த போகிறார் என்ற ஒரு தோற்றத்தை அவர் காட்டியிருக்கிறார். கடந்த மூன்று தசாப்த காலங்களுக்கு மேலாக மாகாண சபைகளின் அதிகாரங்கள் தோலிருக்க பழந்தின்னும் அரசியல் நடவடிக்கைகளின்மூலம் குறைக்கப்பட்டன. அவ்வாறு மாகாண சபைகளின் அதிகாரங்களைக் குறைக்கும் விதத்தில் நிறைவேற்றப்பட்ட சட்ட ஏற்பாடுகளை மீளாய்வு செய்வதற்கு ரணில் குறிப்பிடத்தக்க அளவுக்கு தயாராகி வருவதாகத் தெரிகிறது. அதுபோலவே காணி அபகரிப்பை நிறுத்தவும், மாகாண சபைகளுக்கு காணி அதிகாரத்தை பிரயோகிக்கத் தேவையான ஏற்பாடுகளை குறித்தும் அவர் சிந்திப்பதாக கூறப்படுகிறது. மாகாணங்களுக்கு போலீஸ் அதிகாரங்களை பகிர்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பதாக கூறப்படுகிறது. ஆக மொத்தம் 13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த போகிறேன் என்ற ஒரு தோற்றத்தை அவர் கட்டியெழுப்ப முற்படுகிறார். இது இந்தியாவையும் திருப்திப்படுத்தும், தமிழ்த் தரப்பில் ஒரு பகுதியை திருப்திப்படுத்தும், ஐநாவையும் திருப்திப்படுத்தும்.

இதில் பதிமூன்றாவது திருத்தத்தை ஒரு இடைக்கால ஏற்பாடாகக்கூட ஏற்றுக் கொள்ளாத தமிழ்த் தரப்புகள் என்ன செய்யப் போகின்றன? தமது தீர்வு முன்மொழிவை நோக்கி அக்கட்சிகள் கடந்த 13 ஆண்டுகளாக எப்படி உழைத்திருக்கின்றன? என்னென்ன தியாகங்களைச் செய்திருக்கின்றன? ஒரு அரசியல் இலக்கை முன்வைத்து அதை நோக்கி உழைக்கத் தேவையான கட்டமைப்புகள் தமிழ்க் கட்சிகளிடம் உண்டா? தாம் விரும்பும் ஒரு தீர்வுக்காக போராடவோ தியாகம் செய்யவோ எத்தனை தமிழ் அரசியல்வாதிகள் தயார்? இந்த வெற்றிடத்தைத்தான் ரணில் விக்ரமசிங்க வெற்றிகரமாக கையாளப் பார்க்கிறார். இந்த வெற்றிடத்தைத்தான் ஜெய்சங்கர் "தீர்வைப் பற்றி பேசுவதே தீர்வு ஆகிவிடாது" என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அதாவது பொருளாதார நெருக்கடியின் பின்னரான தமிழ் அரசியல் எனப்படுவது மீண்டும் ஒரு தடவை அதன் இயலாமையை நிரூபித்துக் கொண்டிருக்கிறது. உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை எதிர்கொள்வதில் மட்டுமல்ல, இந்தியாவை எதிர்கொள்வதில், ஐநாவை எதிர்கொள்வதில், சீனாவை எதிர்கொள்வதில், உலக சமூகத்தை எதிர்கொள்வதில், குறிப்பாக, மேற்சொன்ன அனைத்துத் தரப்புகளையும் கெட்டித்தனமாகக் கையாளும் ரணிலை எதிர்கொள்வதில் தமிழ்த் தரப்பு மீண்டும் ஒரு தடவை தோற்கப் போகிறதா?

அண்மை நாட்களாக தமிழ் சமூக வலைத்தளங்களிலும் கைபேசிச் செயலிகளிலும் ஒரு "ரிக் ரொக்" காணொளி தொடர்ந்து பகிரப்பட்டு வருகிறது. அதில் இறுதிக் கட்டப் போரில் தமிழ் மக்களைத் தோற்கடிப்பதற்காக என்னென்ன நாடுகள் என்னென்ன உதவிகளைச் செய்தன என்ற விபரம் சுருக்கமாகத் தரப்படுகிறது. இந்தியாவில் தொடங்கி கிரேக்கம் வரையிலும், உலகப் பேரரசுகள், அமெரிக்காவுக்கு எதிரான சிறிய நாடுகள், ஐநா, ஐரோப்பிய ஒன்றியம், இஸ்லாமிய நாடுகள், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் என்று உலகின் பெரும்பாலான நாடுகள் அவ்வாறு உதவியுள்ளன. கோட்பாட்டு வேறுபாடுகளுக்கு அப்பால், மத வேறுபாடுகளுக்கு அப்பால், உலகம் முழுவதிலும் உள்ள பெரும்பாலான பலசாலி நாடுகள் ஒரு சிறிய மக்கள் கூட்டத்தை சுற்றிவளைத்திருக்கின்றன என்பதனை அச்சிறிய காணொளி விவரிக்கின்றது.

ஆயின், ஐநாவும் உட்பட உலகின் பெரும்பாலான நாடுகள் ஈழத் தமிழர்களைத் தோற்கடிப்பதற்காக ஒன்று திரண்டனவா? அவை அவ்வாறு திரளக் காரணம் என்ன? பிராந்தியத்தில் எதிரும் புதிருமாக காணப்படும் அமெரிக்கா -சீனர் இந்தியா-சீனர் இந்தியா-பாகிஸ்தான் ஆகிய நாடுகளை தமிழ்மக்களுக்கு எதிராக ஒரே கோட்டில் கொண்டு வந்து நிறுத்த எப்படி இலங்கை அரசாங்கத்தால் முடிந்தது? இஸ்ரேல்-ஈரான் ஆகிய எதிரும் புதிருமான நாடுகளை எப்படித் தமிழ் மக்களுக்கு எதிராக ஒரே கோட்டில் கொண்டு வந்து நிறுத்த முடிந்தது? சிங்கள மக்கள் அரசுடைய ஒரு தரப்பாக இருப்பதுதான் அதற்குக் காரணமா? அப்படியென்றால் அரசற்ற தரப்பாகிய தமிழ் மக்கள் இதிலிருந்து எதைக் கற்றுக் கொள்ளவேண்டும்?

ஒரு சிறிய மக்கள் கூட்டத்துக்கு எதிராக முழு உலகமும் எப்படி நீசமாக மாறியது? பிராந்தியத்தில், அனைத்துலகில், எதிரெதிரான சக்திகளை எப்படி மஹிந்த ராஜபக்ஷ தமிழ்மக்களுக்கு எதிராகத் திருப்பினார்? என்ற கேள்விகளுக்கு தமிழ் மக்கள் விடை கண்டுபிடிக்க வேண்டும். அந்த விடைகளைக் கடந்த 13 ஆண்டுகளாக கண்டுபிடிக்க தவறிய வெற்றிடத்தில்தானா இப்பொழுது பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன? 13 மீண்டும் அரங்கிக்குள் வந்திருக்கிறது?



உதயனின் பிரத்தியேகச் செய்தி

# மனோ சாட்சி

## மனம் திறக்கிறார் மனோ கணேசன்

கனடா உதயனிற்கான பிரத்தியேகத் தொடர்

### கொஞ்சம் கிளர்ச்சி நிகழ்வுகள்! நிறைய உறங்கா உண்மைகள் -- பகுதி 1

## - நடராஜா ரவிராஜ் என்ற எனது நண்பன்-



**கா**லம்: 2005ம் வருடம் வடக்கில் நடைபெற்ற வாக்கு பகிஸ்கரிப்பின் காரணமாக தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாக மஹிந்த, பாதுகாப்பு செயலாளராக கோதாபய ஆகியோர் ஆட்சி செய்த காலகட்டம்.

நண்பன் ரவி உயிருடன் இல்லையே என திடீரென நான் நினைத்துக்கொள்வேன். அந்த 2006 நவம்பர், என் நினைவில் நிற்கிறது.

காலை தொலைபேசியில் அவரது பணிப்பெண் அழுது குழறிய, சில நிமிடங்களில், அடித்து பிடித்துகொண்டு, போக்குவரத்து விதிகளையும் மீறிக்கொண்டு, கொழும்பு பொது மருத்துமனைக்கு ஓடினேன். அங்கு அப்போது ஒருவருமில்லை.

என்னைக்கண்ட மருத்துவமனை பிரதம அத்தியட்சகர், அழைத்து ஒரு அறையை கைகாட்டி விட்டார். அங்கே ஒரு பலகை பெஞ்சின் மீது என் நண்பன் ரவி படுத்திருக்க, "என்ன, இங்கே? ஐசியூவில் இல்லையா?" என்று நாக்குழற கேட்ட போது, "இல்லை, ஹொனரபல் கணேசன், ஹொனரபல் ரவிராஜ் இறந்துவிட்டார்" என்று அத்தியட்சகர் அமைதி ஆங்கிலத்தில் சொன்னார்.

மின்னல் தாக்கியது போலிருந்தது. அருகில் சென்று தொட்டு பார்த்தப்போ உடல் சூடு அப்படியே. முகத்தில் ரவியின் வழமையான அந்த மர்ம புன்னகை.

நான் குனிந்து காயத்தை தேடினேன். எதுவும் தெரியவில்லை. இரத்தமும் இருக்கவில்லை. இரத்தத்தை துடைத்துவிட்டார்களோ.

நான் கேட்காமலே, என்ன பார்க்கிறேன் என்பதை உணர்ந்து, அத்தியட்சகர், ரவியின் தலையில் இடப்புறத்தில் ஒரு புள்ளியை காட்டினார். துப்பாக்கி சன்னம் இதில்தான் நுழைய, பெரும் சிதைவில்லை.




வெறுமை உணர்வுடன் நான் வெளியில் வந்தபோது, அப்போதுதான் அலறலுடன் ரவியின் தாய், மனைவி, மகள், தொடர்ந்து செய்தியாளர், அரசியலர் வரத்தொடங்கினர்.

சட்டென ஒரு உண்மை உறைத்தது. ஒரு அரசியலர், மக்களுக்காக வாழ்ந்து, குரல் எழுப்பி, போராடி, உயிர் இழக்க வாழ்நாளில் அம்மாமனிதரை முழுமையாக உணராதோர் உட்பட அனைவரும் அந்த இழப்பை உணருகிறார்கள். அதுவும் மரணம் கொடுமையாக நிகழும் போது, உணரலும் உயர்கிறது.

ரவி வாழ்வும் இப்படிதான். அவரின் மறைவுக்கு பிறகு அஞ்சலி கூட்டங்கள் நடத்தி, பட்டங்கள் வழங்கி, இனம் வருந்தி வணங்குகிறது. யாரையும் குறை சொல்வதற்கில்லை. இதுதான் உலக இயல்பு.

ஆனால், அந்த இறப்பு நேரடியாக அவரது குடும்பத்துக்குத்தான். அன்று அங்கே கொழும்பு பொது மருத்துமனை வாசலில், ரவியின் தாயும், மனைவியும், மகளும் கதறியழுத காட்சி மனதை வெறுமையாக்கியது.

அந்த தாய் என் கையை பிடித்துகொண்டு கதறிய படம் ஊடகங்களில் வெளியாகி மக்களின் மனங்களை உருக்கியது. எனது ஞாபகத்தின்படி, ரவியின் மகள் பாடசாலை சீருடையில் அழைத்து வரப்பட்டார் என எண்ணுகிறேன். திருமதி. சசிகலா ரவிராஜ் அன்று அரசியல்வாதி இல்லை. ஒரு பாடசாலை ஆசிரியராக இருந்தார். அன்றைய தினம் அவர் அதிர்ச்சியில் உறைந்திருந்தார்.

பின்னாளில், 2020ம் ஆண்டளவில் சசிகலா தேர்தலில் போட்டியிட்டார். ஒருநாள் என்னை அழைத்து, ரவியின் நினைவாக ஒரு எழுத்தாக்கம் எழுதி அனுப்புங்கோ என்றார். குடும்ப நண்பர் சிலரும் கேட்டார்கள். இந்த விஷங்களைதான் எழுதி அனுப்பினேன். அதன்பின் ரவியின் நண்பர்கள் இடைக்கிடை என்னுடன் பேசுகிறார்கள்.

மீண்டும் விட்ட இடத்துக்கு வருகிறேன்.

ஒரு பெரும் இறுதி ஊர்வலத்தையும், அஞ்சலி கூட்டம் ஒன்றை விஹாரமகாதேவி பூங்காவிலும் நான், ராஜித உள்ளிட்டோர் ரூபசிங்கவின் போர் எதிர்ப்பு முன்னணி என நடத்தினோம். அதற்கும் அரசு தடைகளை போட்டது. இப்போ சிக்கலில் இருக்கும் பூஜித ஜயசுந்தரதான் கொழும்பு டிஐஜி. சண்டை போட்டு, நடத்தினோம். தமிழர்களை விட, சிங்களவர்கள்தான் அதிகம் வந்தார்கள்.

நான் யாழ்ப்பாணத்திலும், ரவி கொழும்பிலும் பிறக்கலை. சுகமான இன்றைய அரசியல் நாட்களை போன்றல்லாத, மரணம் அழைக்கிறது என்று தெரிந்திருந்த நெருக்கடி நாட்களில், நாம் தேர்தலுலுக்கு அப்பால், மனித உரிமைப் பாதையில் சென்றோம்.

யுத்தம் முடிந்து சில நவம்பர்களில் நான் ரவியின் நினைவு கூட்டங்கள் நடத்தினேன். பின்னாளில் அக்கூட்டங்கள் சம்பிரதாய அரசியல் கூட்டங்களாக மாறின.

இறந்துபோன அரசியல்வாதியின் நினைவு கூட்டங்கள் இப்படித்தான் நடக்கும். இதில் பெரும் தவறில்லை. ஆனால் எனக்கு ரவியை பற்றி பேசுகிற போது, பிணவறையில் படுத்திருந்த ரவி, அந்த உடல் சூடு, மர்ம புன்னகை முகம், தோட்டா துளைத்த தலையின் சிறு புள்ளி, இவை ஞாபகத்திற்கு வரும். இந்த கூட்டங்களில், எனக்கு இயல்புநிலை இல்லாமலானது.



அக்காலத்தில் இத்தகைய கொலை முயற்சிகள் எம்மீது பிரயோகிக்கப்பட இருந்தமை எமக்கு தெரியும். தெரிந்துகொண்டுதான் நாம் போராடினோம்.

ஒருமுறை நானும், ரவியும் களுத்துறையில் ராஜித ஏற்பாட்டில் போர் எதிர்ப்பு கூட்டமொன்றிற்காக கொழும்பிலிருந்து சென்றோம். ரவி அப்போ ஒரு புது ஜீப் வாங்கியிருந்தார். புறப்பட்டபோது அவர் கேட்டதால், அவரது புது மெருகு வண்டியில் ஏறிக்கொண்டேன்.

பின்னால் வந்த என் வண்டியில் பாதுகாப்பு அதிகாரிகள் ஏறிக்கொண்டார்கள்.

நானும், ரவியும் தனியாக, ரவி ஓட்டினார். களுத்துறை நகரமண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்நிகழ்வில் கலந்துகொள்ள, விக்கிரமபாகு, மக்கள் கண்காணிப்பு குழுவின் செயலாளர் பிரியாணி குணரட்ன, எமக்கு முன் சென்றிருந்தார்கள்.

களுத்துறையை நெருங்கிய போது, பிரியாணி தொலைபேசியில் அழைத்தார். கூட்ட மண்டப மேடை திரை சீலைக்கு பின் மறைந்திருந்த ஒரு சந்தேக நபரை ராஜிதவின் பாதுகாப்பு அலுவலர்கள் பிடித்துள்ளதாக சொன்னார்.

அதற்குள் எங்களுக்கு பின்னால் வந்த எனது வண்டி வேகமாக எங்களை கடந்து வந்து மறித்தது. அதிலிருந்து எனது பாதுகாப்பு அதிகாரி ஓடி வந்தார்.

"சார், களுத்துறை மண்டபத்திலே சந்தேக நபர் ஒருவரை பிடித்திருக்கிறார்கள்" என்றார். "ஆம். எனக்கு தெரியும்", என்றேன். "சார், நாங்கள் இந்த நிகழ்ச்சியை ரத்து செய்தால் என்ன?" என்று கேட்டார். அதற்கு நான் உடன்படவிலை.

உடனே எனது அதிகாரி, என் வாகனத்தில் இருந்த இரு அதிகாரிகளை, ரவியின் வாகனத்தில் ஏற்றிவிட்டு "சார், நீங்கள் மெதுவாக வாங்கோ. நாம் சென்று அந்த மண்டபத்தை சோதிக்கிறோம்", என்று கூறிவிட்டு முன்னாள் இருந்த என் வாகனத்தில் சென்றார்கள்.

நானும், ரவியும், இரு அதிகாரிகளுடன் மெதுவாக சென்றோம். சிறிதில் பிரியாணியிடம் இருந்து மீண்டும் அழைப்பு. பிடிபட்ட சந்தேக நபரிடம் ஒரு துப்பாக்கி கைப்பற்றப்பட்டு, அவரை களுத்துறை போலீஸ் கொண்டு போனதாக கூறினார்.

கூட்டத்திற்கு வந்த மக்களில் பாதிப்பேர் பதட்டத்தில் சென்றுவிட, ஒரு சிலரே இருப்பதாக, ஆனால் கூட்டத்தை கட்டாயம் நடத்த வேண்டும் என ராஜிதவும், விக்கிரமபாகுவும் சொல்வதாக பிரியாணி சொன்னார். நடத்துவோம், நாங்களும் வருகின்றோம் என நான் சொன்னேன்.

கூட்டம் நடந்தது. நாம் பேசினோம். கூட்டத்தின் பின் நாம் களுத்துறை போலீஸ ிற்கு செல்லவேண்டி ராஜிதவின் அதிகாரிகள் போலீசுக்கு அறிவித்தார்கள்.

மேலிட உத்தரவு காரணமாக அந்த சந்தேக நபரை தலைமையகத்திற்கு அனுப்பியுள்ளதாக களுத்துறை போலீஸ் கூறியது.

அந்நபர் பற்றி அதன் பின் தகவலில்லை. பதிவுகளும் இல்லை. அங்கே எம்மில் எவரையோ கொல்ல நடந்த முயற்சி என ஊகித்தோம்.

அன்று நானும், ரவியும் பயணித்த அந்த புதிய வாகனத்தில்தான் நாரஹேன்பிட்ட எல்விட்டிகல மாவத்தை, அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் சில தினங்களுக்கு பின் ரவி சுட்டு கொல்லப்பட்டார்.

சுட்டு கொல்லப்பட்ட போதும்கூட அவரது வாகனத்தை அவர் தான் ஓட்டினார். அவரருகில் அமர்ந்திருந்த அவரது சிங்கள பொலிஸ் அதிகாரியும் கொல்லப்பட்டார்.

இதிலிருந்து தெரிவது, பொதுவாக சொல்லப்படுவதை போல, அரசு பயங்கரவாதம் ஒட்டுமொத்த பாதுகாப்பு துறையையும் தழுவியதல்ல. கொலை, கடத்தல், சித்திரவதை குழுக்களை அரசியல் தலைமை தம் தேவைகளுக்காக அமைத்து பயன்படுத்தியது.

இதை நாம் கொழும்பில் இருந்த சர்வதேச சமூகத்துக்கு சொன்னோம். அப்படியா, என செவிமடுத்தார்கள். அவ்வளவுதான்.

அவ்வளவுதான்.

இத்தகைய தந்திர அரசபயங்கரவாத சூழல் பற்றி போராட்டங்கள் நடத்திய நான், ரவி, விக்கிரமபாகு, சிறிதுங்க, பிரியாணி ஆகியோர் அறிந்திருந்தோம். எச்சரிக்கையாகவும் இருக்க தீர்மானித்தோம்.

ஆனால் ரவிக்கு எச்சரிக்கையில் சிரத்தையில்லை. கொழும்பு ஹவ்லக் வீதியில் பயணிப்போருக்கு ஹவலக்-பார்க் வீதி சந்தியை ஒட்டிய சிறுவர் பூங்காவும், BRC விளையாட்டு கழக திடலும் தெரியும். ஹவ்லக் வீதியை ஒட்டி இன்னொரு சிறிய சாமாந்திர வீதியும் இருக்கும். அதில் பாரம்பரியமாக ஒரு சிங்கள வியாபாரி செவ்விளநீர் விற்பார்.

ஒரு நாள் நான் ஹவ்லொக் வீதியிலே சென்றபோது, அந்த இளநீர் கடைக்கு பக்கத்தில் வாகனத்தை தரித்து, ரவியும், அவரது காவலர்களும் இளநீர் அருந்தியபடி சிரித்து பேசிக்கொண்டிருப்பதை கண்டேன்.

உடனடியாக எனது வாகனம், யூ-டர்னில் வந்து ரவியின் வாகனத்தின் பின் நின்றது. எம்மை கண்ட இளநீர்காரரர் தனக்கு வாடிக்கையாளர்கள் அதிகரிக்கிறார்கள் என சந்தோசப்பட்டு பார்த்தார். நான் ரவியை கடுமையாக கண்டித்தேன்.

தங்கள் வீஜபீயை பகிரங்க தெருவோரத்தில் வைத்து இளநீர் குடித்துக்கொண்டிருந்த ரவியின் காவலர்களை கடுமையாக திட்டினேன். "உங்களுக்கு மூளை இல்லையா?" என நான் சிங்களத்தில் கேட்டது ஞாபகம்.

தராதரத்தில் உயர்ந்த எனது பாதுகாப்பு அதிகாரியும் ரவியின் காவலர்களை சாடினார்.

ரவியையும், காவலர்களையும் வண்டியில் ஏற்றி அனுப்பிவிட்டு, நான் போனேன்.

இச்சம்பவமும், களுத்துறை சம்பவமும் நிகழ்ந்த சில நாட்களில் ரவியின் ஏற்பாட்டில் கூட்டமைப்பு எம்பிக்கள் கொழும்பு ஐநா வளாகத்திற்கு முன்னாலே ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அதை அடுத்து ரவி கொல்லப்பட்டார்.

உலக சமுதாயத்தின் கொழும்பு முகவரியான ஐநா அலுவலக வாசலில், நாட்டில் ஒடுக்கப்படும் இனத்தின் ஜனநாயக பிரதிநிதிகள் ஜனநாயக ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். அடுத்த நாள் அதில் ஒரு எம்பி கொல்லப்படுகிறார். இதுபற்றி ஐநா ஒன்றும் ஆர்ப்பரிக்கவில்லை.

இதன் பிறகு எனக்கு சர்வதேச சமூகம் பற்றிய நம்பிக்கை குறைய தொடங்கியது.





# வடக்கு மாகாண சபையை பௌத்த மடமாக்க முயற்சிகள்

**- எமது யாழ் செய்தியாளர்**

இலங்கை தனது 75 ஆவது சுதந்திர தினத்தை அடுத்த மாதம் கொண்டாடவுள்ள நிலையில், அந்த சந்தர்ப்பத்தப் பயன்படுத்தி பௌத்தத்தை வலிந்து திணிக்க அரசு முனைவதாக வடக்கு மாகாண மக்கள் கவலைப்படுகின்றனர்.

நாட்டின் பவளவிழா சுதந்திர தினக் கொண்டாட்டம் எதிர்வரும் பிப்ரவரி 4ஆம் திகதி நாடு முழுவதும் இடம்பெறவுள்ள நிலையில் வடக்கு மாகாண சபை அலுவலகத்தில் தனித்து பௌத்த மத வழிபாடுகள் மட்டும் இரவு முழுவதும் இடம்பெற பிரதம செயலாளர் ஏற்பாடு செய்துள்ளார்.

இதன் காரணமாக வடக்கு மாகாண சபை காரியாலயம் பௌத்த மயமாக்கப்படவுள்ளதாக பல்துறையைச் சார்ந்தவர்களால் கடும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

சுதந்திர தின நிகழ்வுகளை ஒட்டி நாடு முழுவதும் இடம்பெறும் சர்வ மத வழிபாடுகள் அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

எனினும் வடக்கு மாகாண சபையால் சகல மத வழிபாடு என்னும் பெயரில் இந்த ஏற்பாடுகளை செய்திருந்தாலும் ஏனைய மதங்களிற்கான வழிபாடுகள் ஆலயங்களில் இடம்பெறவுள்ள நிலையில் பௌத்த வழிபாடு மாகாண சபையில் இடம்பெற திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், கிறிஸ்தவ மத வழிபாடு மன்னாரிலும், சைவ வழிபாடு வவுனியாவிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

இதர மதங்களின் வழிபாடுகள் ஆலயங்களில் நடைபெறும் நிலையில், பௌத்த வழிபாடு மட்டும் கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. அதற்கமைய பிப்ரவரி மாதம் 2ஆம் திகதி இரவிரவாக மாகாண சபை அலுவலகத்தில் பிரித் ஓதி பௌத்த வழிபாட்டு ஏற்பாடுகள் இடம்பெறுவதோடு காலையில் பௌத்த துறவிகளிற்கு தானம் வழங்கப்படவுள்ளது.

இந்த பிரித் ஓதும் நிகழ்விற்காக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பௌத்த துறவிகளும் அழைக்கப்படுவதோடு அநுராதபுரத்தில் இருந்தும் ஒரு தொகுதி பௌத்த பிக்குமார்களும் அழைத்து வரப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வுகளிற்காக பிப்ரவரி 2ஆம் திகதி வடக்கு மாகாண சபையின் அலுவலகத்தின் உட்புறம் மற்றும் வெளிப்புறங்கள் பௌத்த கொடிகளால் அலங்கரிக்கப்படவுள்ளது என்று நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.





# புத்தகங்களும் சட்டம் ஒழுங்கும்


**- வே. பாலகிருஷ்ணன் இ.கா. ப**
**கோவை மாநகர காவல் ஆணையர்**

கல்வெட்டுகளில் ஆரம்பித்த எழுத்து இன்று காகித பக்கங்களிலும், கணிணிவரிகளிலும், சரித்திரங்களையும், சாதனைகளையும், பிரச்சனைகளையும், அறிவியலையும் எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்கிறது. இணையதளம் வளர்ச்சி பெற்று மக்கள் கணினிகளிலும், ஸ்மார்டு போன்களிலும் புத்தகங்களை வாசித்து வந்தாலும் இன்னும் புத்தகங்களை கையால் தொட்டுப் பக்கங்களை புரட்டி, வரியோடு உறவாடி உணர்வுப்பூர்வமாக ஒன்றி, புத்தகத்தில் உள்ள அறிவுச் சுரங்கங்களை தோண்டி அதில் பயன்டுவது இன்றும் குறையவில்லை. வாசிப்பு பழக்கத்தை காவல்துறையில் பல்வேறு பிரச்சனைகளை தடுப்பதற்கும் தீர்ப்பதற்கும் எவ்வாறு பயன்படுத்தலாம் என்று யோசித்ததன் பலனாக பல முன்னெடுப்புகள் செயல்வடிவம் கொடுக்கப்புட்டுள்ளன.

காவல்துறையில் உள்ள கவிஞர்கள், கதையாசிரியர்கள் அல்லது இரசனையாளர்கள் என யாராக இருந்தாலும் அவர்கள் தங்களுடைய ஓய்வு நேரத்தை பயன்படுத்துவதற்கும் உழைப்போடு ஒனறிணைநத் மன அழுத்தத்தை சரிசெய்வதற்கும் புத்தகங்களை பயன்படுத்த முடியும். அதேபோல், குற்றங்களை முளையிலே கிள்ளி எறிவதற்கும் குற்றங்கள் நடக்காமல் தடுப்பதற்கும் குறிப்பாக சிறுவர்கள் குற்ற வாழ்க்கையை தேர்ந்தெடுக்காமல் இருப்பதற்கும் எப்படி புத்தங்களைப் பயன்படுத்தலாம் எனத் திட்டமிட்டோம். அதன் மூலம், பல்வேறு வழிகளில் கோவை மாநகர காவல் துறையில் புத்தகங்கள் காவல் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. துப்பாக்கி தூக்கிய கைகள், குண்டுகள் மூலம் சட்டம் ஒழுங்கை பராமரித்த காவல் துறை இன்று புத்தகங்கள் மூலம் ஒரு மாற்றத்தை கொண்டு வருவதற்கு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. குறிப்பாக, சிறுவர்களிடம் புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தும் விதமாக அவர்களுக்கு பிடித்த கதை புத்தகங்கள், சிந்திக்க வைக்கும் மற்றும் கற்பனையை வளர்க்கும் கதைகள் என வாசிக்கும் பழக்கத்தை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி பின் கொஞ்சம் கொஞ்சமாக பிற புத்தகங்களில் ஈடுபாடு ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை எடுத்து வருகின்றோம். மேலும், ஏற்கனவே இயங்கி வரும் காவல் சிறார் மன்றங்களுக்கு வரக்கூடிய சிறார்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கும் அவர்கள் மாலை நேரங்களில் சாலையில் சுற்றித் திரியாமல் புத்தகங்களை கையில் கொடுத்து உற்சாகம் கூடிய ஊட்டக்கூடிய கதைகள், காமிக்ஸ், நல்ல வரைபடங்களுடன் கூடியக் கதைகள் போன்றவற்றைப் படிக்க கொடுக்கிறோம். இதன் மூலம் அவர்கள் கெட்ட நடத்தைக்காரர்களிடம் பழகும் வாய்ப்பை குறைப்பதற்கும் அதன் மூலம் புத்தககங்களின் ஈடுபாட்டை வளர்த்து, சிந்தனையைத் தூண்டும் மற்றும் அறிவியல் தொடர்பான புத்தகங்ககளை படிப்பதற்கும் ஏற்பாடு செய்கிறோம்.



அதேபோல், சாலையோர நூலகங்கள் (Street library) அல்லது தெரு நூலகங்கள் என்ற பெயரில் கோவை மாநகரத்தில் உள்ள 100 இடங்களை குறிப்பாக மக்கள் நெரிசல் அதிகமாக உள்ள, பொருளாதார ரீதியில் பெரிய அளவில் முன்னேற்றம் இல்லாத பகுதிகளைத் தேர்வு செய்து வீதிகள் தோறும் நூலகங்கள் அமைக்கும் விதமாக அந்தந்த தெருக்களில் உள்ள குழந்தைகள் அந்த தெருக்களிலே புத்தகங்கள் படிப்பதற்கு வாய்ப்பாக நல்ல தரமான புத்தகங்கள் அவர்களுக்கு கிடைக்கக் கூடிய வகையில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குழந்தைகளுக்கு - முக்கியமாக பெண் குழந்தைகள் அந்த தெருக்களை விட்டு அடுத்த தெருவில் சென்று புத்தகம் படிப்பது கூட ஒரு சில நேரம் சிரமமாக இருப்பதால், பெண் குழந்தைகளை மனதில் வைத்து இந்த திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறோம். இதில் முக்கியமாக கதை புத்தகங்கள், அறிவியலை கதைகள் மூலம் விளக்கக்கூடிய புத்தகங்கள் போன்ற புததக்ங்க்ளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அமைத்திருக்கின்றோம். இந்த புத்தகங்களை மாலை நேரங்களில் அக்குழந்தைகள், அங்கிருந்தும் படிக்கலாம் அல்லது புத்தகத்தை வீட்டிற்கு எடுத்துச் சென்றும் படித்து திரும்பக் கொடுக்கலாம். இதன் மூலம் நூற்றுக்கணக்கான சிறுவர் சிறுமிகள் பயன்பெற்று வருகின்றனர்.





அதேபோல், “ஆட்டோ நூலகங்களும்” கோயமுத்தூர் காவல்துறை மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கோவை மாநகரில் 4000-க்கும் மேற்புட்ட ஆட்டோ ஓட்டுநர்கள் நகரத்தின் நடுத்தர மக்களின் பயணத்திற்கு ஊன்று கோலாக உள்ளனர். அவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக செலவிடுவதற்கும், பயணிகளை ஏற்றிச் செல்லும்போது அவர்களுக்கு பயன்படக்கூடிய வகையிலும் ஒவ்வொரு ஆட்டோவிலும் புத்தகங்கள் ங்கிய அடங்கிய ஒரு பெட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது . இந்த பெட்டியில் உள்ள புத்தங்கள் பெரும்பாலும் தன்னம்பிக்கை ஊட்டக்கூடிய புத்தகங்களாகவும் மனச் சோர்வை அகற்றக்கூடிய புத்தங்களாகவும் இருக்கும். அடுத்த கட்டமாக இந்த திட்டத்தை எல்லா வாடகை வாகனங்களுக்கும் நீட்டிக்க இருக்கின்றோம். ஆட்டோ ஓட்டுநர்கள் குற்றங்களை தடுப்பதிலும், குற்றவாளிகளைப் பிடித்து கொடுப்பதிலும் முக்கிய பங்குவகிக்கின்றனர். அவர்களுடுனுடன் காவல்துறை இணக்கமாக இருப்பது காவல் துறைக்கும், பொதுமக்களின் பாதுகாப்பிற்கும் உறுதுணையாக இருக்கும். ஆட்டோ ஓட்டுநர்களுடன் காவல்துறை, தொர்ந்து தொடர்பில் இருக்கக்கூடிய வகையில் இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆட்டோ ஓட்டுநர்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் அதாவது பயணிகள் இல்லாமல் ஆட்டோ நிலையங்களில் இருக்கும்போது இந்த புத்தங்களை படித்து பயன்பெறலாம். அதேபோல் பயணத்தில் வரக்கூடிய மக்களுக்கும் ஒரு நல்ல அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுக்கலாம். இவ்விருக் காரணங்களுக்காக இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது நகரத்தில் உள்ள 4000 ஆட்டோகளுக்கும் விரிவுபடுத்தப்படுகிறது.

காவல்துறையில் உள்ளக் காவலர்கள் பல்வேறு காரணங்களுக்காக பயணங்களை மேற்கொள்ளும் போதும், பணிக்காக காவல் வாகனங்களில் செல்லும் போதும், பயன்பெறக்கூடிய வகையில் ஒவ்வொரு காவல் வாகனத்திலும் ஒரு புத்தகப் பெட்டி (ஒரு மினி லைப்ரரி) ஏற்படுத்தப்பட்டுள்ளது. காவலர்கள் அந்த புத்தகங்களைப் படிப்பதற்கு உந்தப்படுகிறார்கள். இதன் மூலம் பயண நேரத்தை பயனுள்ளதாகக் களிப்பதற்கும், தவறான சிந்தனைகளில் ஈடுபடாமல் இருப்பதற்கும் இவ்வசதி வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. அதே போல ஏற்கனவே கே-ாவை மாநகர ஆயதப்படையில் 5000 புத்தகங்களோடு கூடிய ஒரு படிப்பகமும் இருந்து வருகின்றது. அதை காவலர்களும் காவல் குடும்பங்களும் பயன்படுத்தி தங்களுடைய நேரத்தை பயனுள்ளதாகச் செலவிட்டு வருகின்றார்கள். இது காவலர்களை மன அழுத்தத்திலிருந்து விடுவிப்பதற்கும் புதிய உத்திகளைக் கற்றுக் கொள்வதற்கும், பல்வேறு விசயங்களைத் தெரிந்து கொள்வதற்கும், சிந்தனையைத் தூண்டுவதற்கும் வாய்ப்பாக உள்ளது.

அதேபோல ஒவ்வொரு காவல் நிலையத்திலும் படிப்பகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த படிப்பகங்கள் காவல் நிலையத்திற்கு வரக்கூடிய பொது மக்கள் பயன்பெறக்கூடிய வகையில், குறிப்பாக சில நேரம் விசாரணை அதிகாரியின் வருகைக்காக காத்திருக்கும்போது இப்புத்தகங்களை படித்து பயன் பெறலாம். தேவைப்பட்டால் அல்லது விரும்பினால் அந்த புத்தகங்களை அவர்கள் வீடுகளுக்கு எடுத்துக்கொண்டு கூடு செல்லலாம். பல்வேறு பிரச்சனைகளோடு வரக்கூடிய பொது மக்களின் மனதை சாந்தப்படுத்துவதற்கும், பல்வேறு காவல்துறை தொடர்பான சட்டரீதியான விசயங்களை தெரிந்து கொள்வதற்கும் இந்த படிப்பகங்கள் உதவியாக இருக்கின்றன.

வரும்முன் காக்க வேண்டியது நோயிலிருந்து மட்டுமல்ல, குற்றங்களிலிருந்தும் தான். காவல்துறையில் குற்றங்களைத் தடுப்பதற்கும், குற்றவாளிகள் உருவாகாமல் தடுப்பதற்கும், குற்றம் குறைந்த சமுதாயம் உருவாவதற்கும் காவல் துறையினரின் கண்ணியத்தை அதிகப்படுத்தவும் புத்தகங்களின் பங்களிப்பு அளப்பரியது.



கனடிய செய்திகள்
Canadian News

# வோட்டர்லூ தமிழ் கலைப் பண்பாட்டு கழகத்தின் பொங்கல் விழா வெகு விமரிசை



வோட்டர்லூ தமிழ் கலைப் பண்பாட்டு கழகத்தின் பொங்கல் விழா கழகத் தலைவர் டெனிஸ் லயோலா வின் தலைமையில் வெகு விமரிசையாக 14.01.2023 சனிக்கிழமை Woodland Christian School, Breslau இல் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு இந்த வட்டாரத்தில் வாழும் சுமார் ஐந்நூறுக்கும் அதிகமான தமிழ் மக்கள் கால நிலையை பொருட்படுத்தாது கலந்து சிறப்பித்தத்துடன், அவர்களின் பிள்ளைகளும், பெரியவர்களும் பல விதமான கலை, கலாச்சார, பண்பாட்டு நிகழ்ச்சிகளை வழங்கி சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் கிச்சினர் வோட்டர்லூ பாராளுமன்ற உறுப்பினர்கள், ஒன்ராறியோ மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள், வோட்டர்லூ வட்டார போலீஸ் மா அதிபர் குழுவினர், நகரசபை பிதாக்கள் என்பவர்களுடன் கேம்பிறிஜ் நகர சபை உறுப்பினர்கள் போன்ற பிரபலங்கள் பலர் வருகை தந்து எமது பொங்கல் நிகழ்வினையும், நிகழ்ச்சிகளையும், வாழையிலையில் பொங்கல் பரி-மாறி உண்ணும் பண்பாட்டினையும் நேரில் பார்த்து வியந்து கழகத்தின் நிர்வாக உறுப்பினர்களை வெகுவாக பாராட்டினார்கள்.















வோட்டர்லூ பிராந்தியத்தில் வாழ்ந்துவரும் தமிழர்களினால் 1989ம் வருடம் ஆரம்பிக்கப்பட்ட இக் கழகம் 34 வது வருடத்தில் தடம்பதித்து இன்று பரிணாம வளர்ச்சி அடைந்து, தமிழர்களின் பெருமையை உலகறிய செய்து இயங்குவதில் வோட்டர்லூ தமிழ் கலைப் பண்பாட்டு கழகத்தினர் பெருமை அடைகின்றனர்.

**தகவல்: அ. ஆதித்தன்**





Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

KANAGAAMBIKAI
Pawn Brokers



30
வருட சேவைகள்

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!

கனகாம்பிகை

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2

416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2

416 754 7198


இனிய
தைப்பொங்கல்
மற்றும்
தமிழ் மரபுத் திங்கள்
நல்வாழ்த்துக்கள்
Happy Thai Pongal
& Tamil Heritage Month
Raymond Cho
MPP - Scarborough North
Constituency Office
Unit B, 4559 Sheppard Ave. E
Scarborough, ON M1S 1V3
(416) 297-5040 | raymond.choco@pc.ola.org
www.raymondcho.ca
Ontario

கனடிய செய்திகள் Canadian News

# எலிசெபெத்த மகாராணியின் 70வருட சேவை பூர்த்தியை முன்னிட்டு பதக்கம் மற்றும் அரசின் சான்றிதழ் ஆகியவற்றைப் பெற்ற நான்கு சேவையாளர்கள்










கடந்த 24ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று மதியம் கனடாவின் மார்க்கம் நகரில் அமைந்திருக்கும் மார்க்கம் தோர்ன்ஹில் பாராளுமன்ற உறுப்பினரும் கனடாவின் மத்திய சிறு வர்த்தகம். ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தகம் ஆகிய துறைகள் சார்ந்த அமைச்சருமான கௌரவ மேரி இங் அவர்களின் அலுவலகத்தில் அமைச்சர் சார்பாக கனடிய தமிழர் சமூகத்தைச்



சேர்ந்த நான்கு சமூக சேவையாளர்கள் கௌரவிக்கப்பெற்றார்கள்.

மேற்படி கௌரவத்தைப் பெற்றவர்கள் கனடா வாழ்

திருமதி. ஞானம்மா திருநாவுக்கரசு (ஆன்மீக மற்றும் சமூக சேவையாளர்),

பாஸ்டர் சோதி செல்லத்துரை, (ஆன்மீக மற்றும் சமூக சேவையாளர்),

திரு. கேதா நடராஜா (வர்த்தகத் துறை மற்றும் சமூக சேவையாளர்), திரு. வாசன் பரமேஸ் (வர்த்தகம், நிர்வாகம் மற்றும் சமூக சேவையாளர்).

இந்த கௌரவிப்பு நிகழ்வில் பிரித்தானியாவின் எலிசெபெத்த மகாராணியின் 70வருட சேவை பூர்த்தி விழாவையொட்டிய பதக்கம் மற்றும் அரசின் சான்றிதழ் ஆகியவை இந்த நான்கு சேவையாளர்களுக்கும்



வழங்கப்பெற்றன.

இங்கே காணப்படும் படங்களில் கௌரவம் பெற்றவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோரும் காணப்படுகின்றனர்.





# "கடவுள் உன் விதியை மாற்ற மாட்டார்" – தென்னிலங்கையின் பிரகடனம்!

வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்

உங்களின் தலைவிதியை மாற்றிக் கொள்வது உங்களின் கைகளில்தான் உள்ளது. எனவே நீங்கள் உங்களை மாற்றிக் கொள்ளாதவரை கடவுள் உங்களின் தலைவிதியை மாற்றி அமைக்கமாட்டார். எனவே மக்களும் மாறிவிட்டார்கள் என்பதை காட்ட வேண்டும். "உன்னை நீ மாற்றிக் கொள்ளும் வரை கடவுள் உன் விதியை மாற்ற மாட்டார்" என்பதை வரலாறு உணாத்தியுள்ளது.

எனவேஇ தத்தமது சொந்த தலைவிதியை மாத்திரமல்ல நாட்டின் தலைவிதியையே மாற்றும் போது பொறுப்பின் பெரும்பகுதி மக்களிடம் உள்ளது. நடந்ததையும், நடப்பதையும் நன்கு அறியாமல், வரும் தேர்தல்களில் துணிச்சலான, விவேகமான முடிவுகளை எடுக்கத் தவறினால், தங்கள் குழந்தைகளின் எதிர்கால அழிவுக்கான பாதையை அமைத்துக் கொடுத்தற்காக மாத்திரமல்ல ஜனநாயகம் செத்துப்போன நாட்டை எதிர்காலச் சந்ததியினருக்க வழங்கியதற்கான முழுப் பொறுப்பையும் அவர்களே ஏற்க வேண்டும்.

• மக்களின் தீர்மானமிக்க தீர்ப்பின் மையப் புள்ளி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்

இதுதான் தென்னிலங்கையில் மக்கள் முன் வைக்கப்பட்டுள்ள முக்கிய சுலோகமாகக் இன்று காணப்படுகின்றது. மக்களின் தீர்மானமிக்க தீர்ப்பின் மையப் புள்ளியாக உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலே முன்நிறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இந்தத் தேர்தல் நடைபெறுமா என்பதுதான் இன்று மக்கள் முன் உள்ள கேள்வியாகும். ஏனெனில் எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கொடுக்காது என ரணில் - ராஜபக்ஷ ஆளும் கட்சி கூட்டாளிகள் பரப்புரை செய்து வருகின்றனர். வெளிப்படையாகவே உள்ளூராட்சி சபைகளுக்கான தோதலை நடத்துவதால் மாற்றம் ஏற்படப்போவதில்லை என தொடர்ச்சியாக கூறி வருவதுடன் தேர்தலை நடாத்தாமல் விடுதற்கான அணைத்து நகர்வுகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

- தேர்தல் செலவுக்கென 10 பில்லியன் ரூபாய் பணம் 2023 வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையை திறைசெரி செலுத்தும்நிலையில் இல்லை என்று ஆளும் தரப்பில் தொடர்ச்சியாக கூறப்படுகின்றது.
- தேர்தல் நடத்தினால் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க இயலாது.
- அரசாங்கங்களில் அரச சேவை விரிவடைந்து வருவதால் அரசாங்க ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஒய்வூதியம் அரச வருவாயில் பெரும் பகுதியை எடுத்துக் கொள்கிறது. 1.7 மில்லியன் அரசு ஊழியர்களில் ஒரு பாதியை மட்டுமே கொண்டு நாட்டை நிர்வகிக்க முடியும் என்று நம்பப்படுகிறது. அரசதரப்பு
- ஏன் இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டு தீர்வு நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுக்கவில்லை? பொதுத்துறை குறைக்கப்பட்டால், நிறைய நிதி சேமிக்க முடியும். மேலும் பணச் சிக்கல்கள் கணிசமான அளவில் குறைக்கப்படும். அந்த முடிவை அடைய அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்ததாகக் கூறுகிறது. ஆனால் அவை போதுமானதாக இல்லை என்று ஆங்கில ஊடகம் தனது ஆசிரியர் தலையங்கத்தில் கேள்வி எழுப்பியுள்ளது. அதுமாத்திரமல்ல

1. இலங்கை தனது பொருளாதார நெருக்கடிக்கு இடையிலும் ஒரு பெரிய ஆதாயமற்ற அமைச்சரவையை பராமரிக்கிறது.
2. மேலும் சில அமைச்சர்களை நியமிப்பதன் மூலம் அந்த சாதனையை முறியடிக்க வாய்ப்புள்ளது.
3. குற்றவாளிகள் யார் என்று தெரிந்தாலும் பல்வேறு மோசடிகளால் அரசு கஜானாவுக்கு ஏற்பட்டுள்ள இழப்பை ஈடுகட்ட எதுவும் செய்யவில்லை.
4. 1000 கோடி ரூபா நட்டத்தை மீட்பதன் மூலம் அரசாங்கம் தனது வருவாயை அதிகரிப்பதற்கு ஏன் அதிக முயற்சியில் இறங்கவில்லை.
5. 55 பில்லியன் சர்க்கரை வரி மோசடியால் ஏற்பட்டதா?
6. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கடந்த பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது, அரச வங்கியொன்றில் இருந்து பெறப்பட்ட ஐந்து பில்லியன் ரூபா கடனைத்திருப்பிச்செலுத்தவில்லை என அப்போதைய அமைச்சர் தயா கமகே மீது குற்றம் சுமத்தினார். இந்தத் தொகை திரும்பப் பெறப்பட்டால் உள்ளாட்சித் தேர்தலுக்குப் போதுமான நிதி கிடைக்கும்.
7. உள்ளாட்சி தேர்தலுக்கு சுமார் ரூ.6 பில்லியன். இது நிறைய பணம் என்பதில் சந்தேகமில்லை.
8. ஆனால் தேர்தல்கள் எப்போதுமே விலை மதிக்க முடியாதது. என்றாலும் அத்தியாவசியமானது.
9. தற்போதைய பொருளாதார நெருக்கடி முடியும் வரை காத்திருந்து தேர்தலை நடத்தினால், இன்னும் சில ஆண்டுகளுக்கு மக்களுக்கு தமது வாக்குரிமையை பயன்படுத்த முடியாது போய்விடும்.
10. தற்போதைய நெருக்கடிக்கு காரணமானவர்கள் நாட்டை நாசமாக்கிக் கொண்டே இருப்பார்கள்.
11. மற்றும் பொருளாதார மீட்சி சாத்தியமற்றது.
12. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், தோல்வியுற்ற தலைவர்கள் பொதுக் கருத்து மற்றும் தேசநலன் பற்றிய மக்களின் கருத்துக்களையும், கோரிக்கைகளையும் பொருட்படுத்தாமல் அவர்கள் விரும்பியதைச் செய்ய சுதந்திரமாக இருப்பார்கள் என்றும் அந்த ஆசிரியர் தலையங்கம் குறிப்பிடுகின்றது.
13. நிதி நெருக்கடி குறித்து பேசும் அரசாங்கம் இதற்கும் அப்பால் 275 மில்லியன் ரூபா செலவு செய்து சுதந்திர தின நிகழ்வுகளை நடத்த தயாராக உள்ளது.

• ரணில் - ராஜபக்ஷ ஆளும் கூட்டணி அரசாங்கத்தை மாற்றாது.

உண்மையில் இந்தத் தேர்தல் தற்போதைய நெருக்கடி நிலையைத் தோற்றுவித்ததற்குப் பொறுப்பான இன்றைய ரணில் - ராஜபக்ஷ ஆளும் கூட்டணி அரசாங்கத்தை மாற்றாது.

- ஆனால் இந்தத் தேர்தல்கள் நடத்தப்பட்டால், நிச்சயமாக தற்போதைய அரசாங்கத்தின் மீதான வாக்கெடுப்பாக, மக்கள் கருத்துக் கணிப்பாக இருக்கும்.
- மேலும் இந்த நாட்டு மக்களின் திறனையும், அவர்கள் தங்கள் பிரச்சினையை எந்தளவுக்கு உணர்ந்திருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக் காட்டும்.
- இது அரசியல்வாதிகளுக்கு ஒரு வலுவான செய்தியை அனுப்பக்கூடும்.
- இது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண அவர்களுக்கு ஒரு பெரிய அழுத்தமாக இருக்கும்.
- ரணில் - ராஜபக்ஷ ஆளும் அணியினர் தெடர்ந்தும் ஆட்சியில் இருப்பதற்கு தகுதியற்றவர்கள் என்பதை நாட்டுக்கும் உலகத்திற்கும் உரத்துச் சொல்வதாக இந்த மக்களின் தீர்ப்பு அமையும்.
- இது எதிர்காலத்தில் தேசிய அளவில் நடைபெறவுள்ள ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்திற்கான தேர்தல்களுக்கு ஒரு முன்னோட்டமாக மக்களின் ஆணைக்கு இழுத்தச் செல்வதாகவும் அமையும்.
- தமிழ்த் தலைமைத்துவங்களின் போக்கு தென்னிலங்கையின் பிரகடனத்துக்கு மத்தியில் தமிழ்த் தலைமைத்துவங்களில் இணக்க அரசியல் நடத்துபவர்கள் ரணில் - ராஜபக்ஷ அணியினரின் தேர்தல் தேவையில்லை என்ற மொழியையே பேசுகின்றனர்.

மறு பகுதியினர் பிரிந்து நின்று கூட்டமைப்பின் தலைவர் யார் என பட்டி மன்றம் நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

"உன்னை நீ மாற்றிக் கொள்ளும் வரை கடவுள் உன் விதியை மாற்ற மாட்டார்" என்பதை வரலாறு உணாத்தியுள்ளது என்ற சுலோகம் தென்னிலங்கைக்கு மாத்திரமல்ல வடக்குக் கிழக்கிற்கும் மலையகத்திற்கும் பொருந்தும்.

• கூட்டமைப்பின் தலைவர் மகுடத்தை யாருக்கு சூட்டுவது?

தென்னிலங்கை 75 வருடங்களாக தாம் மேற் கொண்டுவந்த தவறினை திருத்தி அமைக்க புறப்பட்டுள்ளது. வடக்குக் கிழக்கு மக்களைப் பொறுத்து கூட்டமைப்பின் தலைவர் மகுடத்தை யாருக்கு சூட்டுவது என்பதல்ல முதற் பணி. தமது தலைவிதியை தாமே மாற்றி அமைக்கப் புறப்பட்டாக வேண்டும் என்பதுதான் இன்றைய தேவை. மலையக மக்களைப் பொறுத்து சொந்தங்களுக்குள்ளும் சுயநலன்களுக்குள்ளும் கிளைவிட்டு பரவியுள்ள தொழிற்சங்க அரசியலுக்கப்பால் பாதை வெட்டிப் பயணம் போயாக வேண்டும்.

Email : vathevaraj@gmail.com

## தைமகளே பிறந்து வா
## (எழுசீர் ஆசிரிய விருத்தம்)

தைமகளே பிறந்துவா தைத்திருநாட் கொண்டாடி
தரணி எங்கும் ஒளிக்கவே!
தேமதுரத் தமிழொலி தேசமெலாம் ஒலித்திட
தாமதம் செய்திடா வருவாய்
நம்பிக்கைக் கீற்று நாளும் தெரியும்
நம்வாழ்வும் நன்றாய்ச் சிறக்கும்
எம்மவர் வாழ்வினில் எல்லாம் கிடைக்கும்
எல்லோர் மனதிலும் இனிக்குமே!

முற்றம் முழுதும் முத்தாய்க் கோலமிட்டு
மூலையில் கரும்பு நாட்டியே!
சுற்றியே தோரணத்தால் சோடனை செய்து
சுந்தரமாய் மாவிலை தூக்கினோம்
புதிரெடுத்து நீராடி புத்துடை அணிந்துமே!
பானையில் புனித நீரிட்டோம்
பதியும் சதியுமாய்ப் பகலவனை வணங்கியே!
பரமனைப் பணிந்து நின்றோமே!

வெள்ளை வேட்டியுடன் தலைப்பாகை கட்டியே!
வஞ்சிபோல் பானையை அலங்கரித்து
கள்ளமற்ற பாலைக் கலயத்தில் விட்டே!
கனன்ற அடுப்பில் வைத்தோம்
பாங்காய்ப் பசும்பால் பொங்கிச் சரிக்கவே!
பயறுடன் பச்சரிசி பானையிட்டே!
தேங்காய்த் துருவலும் தித்திக்கச் சேர்த்து
தகிக்கும் உலையில் இட்டோமே!

சமமாய்ச் சர்க்கரை சத்தான கஸ்கொட்டை
சுவைமிகு தேனும் விட்டு
அமரர் போற்றும் அருமைப் பொங்கலுக்கு
ஆநெய்யும் அளவாய்க் கலந்தோம்
கற்கண்டு முந்திரி கச்சிதமாய்ச் சேர்த்தே!
கனிதரும் பொங்கலை பொங்கினோம்
பற்றொடு பொங்கல் படைத்து வைக்கவே!
பலவகைப் பொருட்கள் எடுத்தோமே!

சுற்றம் சூழவே சுயமாய்க் கூடியே
சத்தான பொங்கல் தந்திடவே!
முற்றிய கரும்பும் முக்கனியும் தயிரும்
மலர்களும் பருவ இளநீரும்
பக்திப் பாட்டும் பட்டாசு வெடியுடன்
பரிதிக்கு படைத்து வைத்தோம்
பக்கத்து வீட்டார்க்கும் பகிர்ந்து கொடுத்து
பதமான பொங்கலைப் புசித்தோமே!

பலகார வகையும் பதமாய்ச் செய்தோம்
பசியோடு வந்தோர்க்கும் பரிமாறினோம்
விலகாமல் இருந்த வீண்பகை எல்லாம்
விலக்கியே ஒன்றாய்ச் சேர்ந்தே!
ஏர்பிடித்த உழவனை இதயத்தில் ஏற்றியே!
எல்லோரும் கூடியே வாழ்த்தினோம்
பார்புகழ் மக்களாய்ப் பலகலை கற்றுமே!
பல்லோர் போற்றிட வாழ்வோமே!

ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்
(416) 844-7453



# விநாயகர் விமர்சனம்

- கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி

## இலங்கையை வாட்டி வதைக்கும் வரிகளும் வானளாவிய விலைவாசி உயர்வும்

*காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே*
*மா நிறைவு இல்லதும் பல் நாட்கு ஆகும்*
*நூறு செறு ஆயினும் தமித்துப் புக்கு உணினே*
*வாய் புகுவதனினும் கால் பெரிது கெடுக்கும்*
*அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே*
*கோடியாத்து நாடு பெரிது நந்தும்*
*மெல்லியன் கிழவன் ஆகி வைகலும்*
*வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு*
*பரிவு தப எடுக்கும் பிண்டம் நச்சின்*
*யானை புக்க புலம் போல*
*தானும் உண்ணான் உலகமும் கெடுமே*

*- பிசிராந்தையார்*

நன்கு முதிர்ந்து காய்ந்த நெல்லை அறுத்து கவளம் கவளமாகத் திரட்டி யானைக்கு உண்ணக் கொடுத்தால் ஒரு மா (14400 சதுரஅடி) அளவை விடச் சிறிய வயலில் விளைந்த நெல்லைக் கொண்டு பல நாட்கள் யானைக்கு உணவளிக்கலாம். (ஆனால்) நூறு வயல்பரப்பளவில் விளைந்தநெல் என்றாலும் யானை தனியாக வயலிலே இறங்கித் தின்றால் அதன் வாய்க்குள்ளே நுழைவதைவிட காலிலே உழக்குப்பட்டு அழியும் நெல்லின் அளவே அதிகமாக இருக்கும். அதேபோல பகுத்தறிவுள்ள அரசன் முறையான வரிக்கொள்கைளை வகுத்து அதன்படி நின்றொழுகி மக்களிடம் வரி திரட்டி நல்லாட்சி நடத்தினால் அந்த நாடு கோடி கோடியாகப் பொருளீட்டி செழிப்புற வளரும் அரசனும் மகிழ்வுடன் வாழலாம். மாறாக அரசனானவன் வரைமுறை அறியாத கல்போன்ற முட்டாள்கள் கூட்டத்தோடு சேர்ந்து முறை தவறி வரி வசூலித்து மக்களின் வருவாய்களைக் கொள்ளையடித்தால் யானை தனியே புகுந்த வயல் நிலம் போல உலகமும் கெடும் அரசனும் கெடுவான். ஒரு நாட்டின் வரிக் கொள்கை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை வெளிப்படுத்தி இலங்கையின் இன்றைய கையறு நிலைமையை கண்ணாடி போலப் பிரதிபலிக்கிறது இந்த புறநானூற்றுப் பாடல்.

வேலை செய்யும் வீரர் கோட்டாபய ராஜபக்ஸ பெரிய கதிரையிலிருந்து துண்டைக்காணோம் துணியைக்காணோம் என்று பின்கதவால் நாட்டை விட்டு ஓடிய பின்னர் ராஜபக்ஸக்களின் ஆபத்பாந்தவனாக அரசியலமைப்பில் காணப்பட்ட ஓட்டையின் ஊடாக வன் மேன் பார்ட்டியாகி பெரிய கதிரையில் தன்னைத் தாபித்துக் கொண்ட விக்கிரமானவர் பொதுமக்கள் படும் துயரங்கள் பற்றிய எந்தவித உணர்ச்சியுமின்றி இந்த ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் வரிகளைக் வரைமுறையின்றி அதிகரித்திருக்கிறார். அண்மையில் உலகின் பலபாகங்களிலிருக்கும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் அபிவிருத்தி நிபுணர்களுமாக 182 பேர் கூட்டாக இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள் பற்றி வெளியிட்ட ஓர் அறிக்கையில் அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கை(ள) பற்றி சாடியிருப்பதுடன் அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் வரிவருவாயைத் திரட்டுவதும் அதன் ஊடாக வரவு செலவுத்திட்டத்தில் பல ஆண்டுகள் தொடர்ச்சியாக எதிர்க்கணியமாக இருந்த ஆரம்ப நிலுவையை (primary balance) ஒரே வருடத்தில் நேர்க்கணியமாக மாற்றுவதும் நடைமுறைச் சாத்தியமல்ல எனக் கூறுகின்றனர். யானையை வயலுக்குள் ஒட்டிவிட்ட நிலைமைதான் நாட்டிற்கும் ஆட்சியாளர்களுக்கும் ஏற்படும் என்பது நமக்கு நன்கு புரிகிறது. அத்துடன் நாட்டின் நிதிநிலைமையை வங்குரோத்து நிலைக்கு இட்டுச் சென்றவர்கள் அரசியல்வாதிகளின் செல்வாக்குப் பெற்ற தனியார்துறை கடன் உரிமையாளர்களே என்ற கருத்தையும் இவ்வாராட்சியாளர்கள் முன்வைக்கின்றனர். இடர் அபாயம் நிறைந்த (high risk) பிணைமுறிகளில் முதலீடு செய்ததன் மூலம் இத்தகைய முதலீட்டாளர்கள் கொள்ளை இலாபம் ஈட்டியுள்ளதாகவும் இப்போது இலங்கை மீளச் செலுத்த வேண்டியுள்ள கடன்களை பதிவழிப்பு (write off) செய்தாலே ஒழிய இலங்கைக்கு மீட்சி கிடைக்கப்போவதில்லை எனவும் இதுவரை கொள்ளை இலாபம் பார்த்தவர்கள் இப்போது எஞ்சியுள்ள கடன்களைப் பதிவழிப்புச் செய்யவேண்டும் என்று கேட்டிருக்கின்றனர். அது மட்டுமல்லாது ஒரு நாடு கடுமையான நிதிநெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நேரத்தில் உரிய நேரத்தில் உரிய வகையில் உதவி செய்யாமல் காலத்தை இழுத்தடித்துவரும் சர்வதேச நிதி நிறுவனங்களின் நடத்தையும் மேற்படி புலமையாளர்களின் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்கிறது. தற்போது கசியும் உள்ளகத் தகவல்களின் படி வரிகளை இந்தளவுக்கு உயர்ந்த வீதங்களில் அதிகரிக்க வேண்டும் என்று IMF நிறுவனமே நிபந்தனை விதித்ததாகவும் மானியங்களை அகற்றவும் பெற்றோலியம் எரிவாயு மின்சாரம் போன்ற அத்தியாவசிய பொருள்கள் சேவைகளின் விலைகளை சந்தை விலைக்கு அதிகரிக்க வேண்டும் என்றும் நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மாத்திரமின்றி இலாபத்தில் இயங்குபவற்றையும் தனியார் மயப்படுத்துமாறும் கோரப்பட்டதாகத் தெரிகிறது. ஏற்கெனவே அதிகரிக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டணங்களை மேலும் ஒரு மிகப்பெரிய தொகையினால் அதிகரிக்க வேண்டும் என்றும் அவ்வாறு செய்தால் மட்டுமே தொடர்ச்சியாக மின்விநியோகத்தை தொடர்ச்சியாக மேற்கொள்ள முடியும் என்றும் இல்லாவிட்டால் நீண்ட நேர மின் துண்டிற்பிற்கு தயாராகுமாறும் எரிசக்தி அமைச்சர் கூறகிறார். அதே வேளை நட்டத்தில் இயங்குவதாகக் கூறும் மின்சாரசபை கடந்த வருடம் தமது ஊழியர்களுக்கு தலா 100000 ருபா வரையில் போனஸ் வழங்கியுள்ளதாகவும் தெரியவருகிறது போனஸ் என்பது நிறுவனங்கள் இலாபம் உழைக்கும் போது அதில் ஒரு பகுதியை ஊழியர்களுக்கு ஊக்குவிப்பாக வழங்குவதாகும். ஆனால் தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் போனஸ் வழங்குவது பொது முயற்சியாண்மைக் குழு எனப்படும் கோப் (committee on public enterprises - COPE) குழுவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதே போல தற்போதைய நெருக்கடி காலகட்டத்திலும் அரச நிறுவனங்களில் கட்டடங்களையும் சுற்றுப்புறங்களையும் அலங்கரித்தல் போன்ற அத்தியாவசியமற்ற செலவுகள் மேற்கொள்ளப்பட்டு அரசநிதிகள் வீணடிக்கப்படுகின்றமை பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மறுபுறம் பொருளாதாரம் உயிருக்கு ஊசலாடும் இந்த வேளையிலும் கூட இலஞ்சமும் ஊழலும் குறைந்நதாகத் தெரியவில்லை. ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைப் புறச்சூழலைப் பயன்படுத்தி தமது பைகளை நிரப்பிக் கொள்ளும் பணிகளிருந்து அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் சற்றேனும் தளர்ந்து விடவில்லை. அதேவேளை உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் பற்றாக்குறை காரணமாக பொது வைத்தியசாலைகளில் நோயாளிகளுக்குச் சிகிச்சைகளை மேற்கொள்வதில் பாரிய நெருக்கடிகள் எதிர்நோக்கப்படுகின்றன. குறிப்பாக புற்று நோய் வைத்திய சாலைகளில் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் மருந்துகள் கிடைக்காமையால் நோயாளர்கள் இறக்கும் ஆபத்து அதிகரித்துள்ளதாக தொடர்புடைய வைத்தியர்கள் கூறுகிறார்கள். இத்தகைய மருந்துகள் சந்தையில் பல ஆயிரங்கள் தொடக்கம் இலட்சங்கள் வரையில் உள்ளதால் நோயாளிகள பலர் அவற்றைக் கொள்வனவு செய்யும் அளவுக்கு பொருளாதார வசதி படைத்தவர்கள் அல்ல. சிலர் பொது வெளியில் நிதிதிரட்டி அவற்றைக் கொள்வனவு செய்ய முயற்சித்தாலும் அவற்றைத் தொடர்ச்சியாக வழங்கவேண்டியுள்ளதால் நோயாளிகளால் அவற்றைத் தொடர முடியாது போகும். சாதாரண புரசிட்டமோல் வில்லைகள் ஏனைய மருந்துப் பொருள்களின் விலைகளும் இருமடங்கிற்கும் மேலாக அதிகரித்துள்ளன. வரிகள் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளதால் மருத்துவ சேவைக்கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. மனிதன் நோய்வாய்ப்படுவதை ஒரு நுகர்வாகக் கருதி அதற்கு வரி விதிக்கப்படுகிறது. இலங்கையில் நோய்வாய்ப்படுவதென்பது ஒரு பாவப்பட்ட செயலாக மாறிவிட்டது. மறுபுறம் பாடசாலைக் கல்வியில் நெருக்கடிகள் அதிகரித்துள்ளன. புாடசாலை நூல்கள் இலவசமாக வழங்கப்பட்டாலும் அப்பியாசக் கொப்பிகள் மற்றும் ஏனைய கற்றல் உபகரணங்களின் விலைகள் வானளாவ உயர்ந்து விட்டன. மக்கள் ஒரு புறம் விலைவாசி உயர்வினால் தமது உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவே பகிரதப் பிரயத்தனம் செய்து வரும் நிலையில் கல்வி சுகாதாரம் போன்ற வாழ்வாதாரத் தேவைகளைப் நிறைவேற்றமுடியாமல் மனதளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். அரசாங்கம் பொதுமக்கள் எதிர்நோக்கும் அவலங்கள் பற்றிய உணர்திறன் கிஞ்சித்துமின்றி ஏற்கெனவே அதிகரித்துள்ள மின் கட்டணத்தை இன்னும் எத்தனை ரூபாவினால் அதிகரிப்பது என்று பார்க்கிறது. ஏதோ பொதுமக்கள் சேர்ந்து செய்த தவறினால் தான் அரச நிறுவனங்கள் நட்டமடைந்து போலவும் பொதுமக்கள் கொள்ளையடித்ததால் தால் தான் நாடு வங்குரோத்து அடைந்தது போலவும் தொடர்ந்தும் பொதுமக்களிடம் இருந்து கறந்து எல்லாவற்றையும் சரிசெய்ய முனைவது தெரிகிறது. நாட்டைக் கொள்ளை அடித்தவர்கள் நடுவீட்டில் ஜம்மென்று உட்கார்ந்து அனுபவிக்கிறார்கள். இலட்சக்கணக்கில் மின் கட்டணங்களைச் செலுத்தாமல் நிலுவையில் விட்டுள்ள அரசியல் வாதிகளிடமிருந்தும் பணமுதலைகளிடமிருந்து அவற்றை அறவிடுவது பற்றியோ அல்லது உற்பத்தி மற்றும் வினியோகச் செலவுகளையும் குறைத்து நிறுவன மறுசீரமைப்பில் ஈடுபடுவது குறித்தோ அக்கறை காட்டப்படவில்லை. அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் எத்தகைய ஊழல்களைச் செய்து நாட்டைக்கொள்ளையடித்தாலும் அவற்றைக் கண்டுபிடிப்பது பற்றியோ கோடிக்கணக்கில் ஏற்பட்ட இழப்புகள் பற்றியோ கொள்ளையடித்தோரிடமிருந்து அவற்றை மீட்பது பற்றியோ குற்றவாளிகளைக் கண்டு பிடித்துத் தண்டனை வழங்குவது பற்றியோ எவ்வித கரிசனையும் காட்டப்படவில்லை என்பதைவிட. அதற்கான திசையில் நகர்வதற்கான ஒரு சிறிய சமிக்ஞை கூட இதுவரையில் இல்லை. இந்தியாவில் இருப்பது போல விஜிலன்ஸ என அழைக்கப்படும் (central vigilance commission) மத்திய அமலாக்கல் துறை அதிகாரிகள் முக்கியமான அரசியல்வாதிகள் பிரபலங்கள் மற்றும் முக்கிய புள்ளிகள் போன்றோறைப் பின்தொடர்வது போன்றதொரு வலுவான கட்டமைப்பு இலங்கையில் இல்லை. இலங்கையிலும் இலஞ்ச ஆணைக்குழு இயங்கினாலும் அதனால் மிகப்பெரிய அளவில் சாதனைகள் செய்ததாக வரலாறில்லை. எந்த ஒரு முக்கிய ஊழல் அரசியல்வாதியும் அதனூடாக உள்ளே போனதாகவும் தெரியவில்லை. எந்த ஒரு அரசியல்வாதியையம் இன்னொரு அரசியல் வாதி அவர் எக்கட்சியில் இருந்தாலும் இது விடயத்தில் காட்டிக் கொடுத்ததும் கிடையாது. அவ்வாறு யாராவது ஒரு சில அரசியல் வாதிகள் இதுபற்றி பொது வெளியிலோ கதைத்தாலும் நிரூபித்துக் காட்டச் சொல்லு என்று எதிர்ப்பறிக்கை விடுவதுடன் எல்லாம் முடிந்துவிடும். அதிகாரிகள் என்ன சோடை போனவர்களா? பியோன் தொடக்கம் அமைச்சுகளின் உயர் அதிகாரிகள் வரையிலான பலர் இதில் கைதேர்ந்தவர்கள். ஆனால் நேர்மையான அதிகாரிகள் பதவி உயர்வுகள் இன்றி தண்ணியில்லாத காட்டுக்கு மாற்றப்பட்டு பழிவாங்கப்பட்ட சம்பவங்களும் உண்டு. அரச நிர்வாகத்துறை சீர்திருத்தப்பட்டு நேர்மையாக சிலகாலம் இயங்கினாலே இலங்கை எதிர்நோக்கும் சமகாலப் பிரச்சினைகள் பலவற்றில் இருந்து மீண்டெழலாம். மாறாக நாடு படுபாதாளத்தில் விழுந்துள்ள இப்போதைய நிலையிலும் அதே மந்தநிலையில் இயங்கும் அமைச்சுகளும் அரசு நிறுவனங்களும் பொருளாதார மீட்சியைக் கால தாமதப்படுத்துவதையே காணமுடிகிறது.






அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த தென்கொரியாவின் இடர்க்கால நிவாரண அமைப்பின் தலைவர் ஒரு இராஜாங்க அமைச்சரையும் அதிகாரிகளையும் உயிரோடு தோலுரித்த வீடியோக்காட்சி பார்க்க அற்புதமாக இருந்தது. நாட்டின் இடர்ச்சூழலில் அரச இயந்திரம் உயிர்ப்படன் இயங்கிக்கொண்டிருக்கும் நிதிமற்றும் தொழில் நுட்ப உதவிகளையும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள் என்ற எதிர்பார்ப்பில் அமைச்சருடனான கூட்டத்திற்கு தயாராக இருந்த அவர் கூட்டத்திற்கு அரைமணிநேரம் தாமதமாக வந்த ராஜாங்க அமைச்சரையும் அதிகாரிகளையும் முகத்திற்கு நேரே நின்று என்னுடைய நாட்டில் இப்படி தாமதமாக வந்திருந்தால் உடனடியாகவே விசாரணை நடைபெற்று தண்டனை தரப்பட்டிருக்கும் பொறுப்பில்லாமல் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற முடியாதவர்களிடம் நான் ஏன் பேசவேண்டும். பொய்யர்களிடமும் தாம் கொடுக்கல் வாங்கல் செய்ய விருப்புவதில்லை என்றும் முகத்தில் அடித்தால் போல் விளாசினார். இந்தமாதிரி மோசமாக நடத்தையை மாற்றிக் கொள்ள முடியாவிட்டால் சர்வதேச உறவுகளை கட்டியெழுப்பலாம் எனக் கனவுகாண வேண்டாம் எனவும் எச்சரித்தார். நல்லமாட்டுக்கு ஒரு சூடு ஆனால் விமர்சனம் செய்தவரைக் குறைசொல்வதிலும் சப்பைக்கட்டுக் கட்டித் தாமதத்திற்கு காரணங்கள் தேடுவதிலுமே இலங்கையின் அடுத்த சிலநாட்கள் கழிந்தன. இவர்கள் எங்கே திருந்தப் போகிறார்கள்.



# மாத்தளை வடிவேலன்: மலையக இலக்கியத்தின் எரிநட்சத்திரம்

- மு. நித்தியானந்தன் லண்டன்

1

“மாத்தளை எங்கள் மலையகத்தின் தலைவாயில். தமிழகக் கரையிலிருந்து பயங்கரப்படகுகள் மூலம் கடலைக்கடந்து, கொடிய கானகங்களுக்கிடையே கால்நடையாய் உயிர்தப்பி வந்ததற்காக நன்றி கூறும் முதல் தெய்வம் எங்கள் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன். மலையக மக்களின் வரலாறு மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வரலாற்றுடன் ஆரம்பமாகிறது” என்கிறார் மலையகத்தின் கல்விமான் அமரர் இர.சிவலிங்கம்.

இந்த மாத்தளை மண்ணை தன் சுவாசத்தில், மூச்சில், ரத்தநாளங்களில், சிந்தனையில் ஏற்றிப் பெருமிதம் கொள்பவர் மாத்தளை வடிவேலன். மாத்தளைப் பிராந்தியத்தில் அவர் காலடிகள் படாத இடமேயில்லை. அங்குலம் அங்குலமாக அந்தப்பிரதேசத்தை அளந்து வைத்திருப்பவர் அவர் தெரிந்து வைத்திருப்பவர் வடிவேலன் கிட்டத்தட்ட எழுபத்தைந்து ஆண்டுகளாக அந்த மண்ணோடு போராடி வந்திருக்கிறார். அந்த மண்ணில் நடந்து முடிந்த அரசியல் மாற்றங்கள், எழுச்சிகள், புரட்சிகர இயக்கங்கள், அடுத்தடுத்து தொடர்ந்து இடம்பெற்ற இனவன்முறைகள், அவற்றிற்கு எந்த நேரத்திலும் பலியாகும் மக்களாக குறிவைக்கப்பட்ட மலையக மக்கள், உண்ண உணவின்றி தமிழ்த் தொழிலாளர்கள் அந்த மண்ணை விட்டே வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்ட அவலம், தோட்டங்கள் அரச உடைமை ஆக்கப்பட்டபின், மாத்தளையின் பெருந்தோட்டங்களின் பொலிவே சிதைந்து போன கோலம், இன சௌஜன்யம் குலைந்து போன கொடுமை.

இத்தனையையும் அவர் கண்கூடாக்கண்டிருக்கிறார். தன் நெஞ்சிலே தணல் கொண்டு திரிந்திருக்கிறார். தோல்வியையும் துயரத்தையும் சுமந்து கொண்டிருக்கிறார். மாத்தளை வீதிகளிலே அணிவகுத்துச் சென்ற ஊர்வலங்களில் அவர் முன்னணியில் நின்றிருக்கிறார். அரசியல் மேடைகளில் அவர் துணிவோடு முழங்கியிருக்கிறார்.

பொதுத் தேர்தலில் போட்டியிட்டிருக்கிறார். தோல்விகளைக் கண்டிருக்கிறார், துவண்டு போனதில்லை.


மாத்தளையில் உயிரோட்டம் மிக்க இலக்கியப் பாதையைச் செப்பனிடுவதில் அவர் மூலகாரணராயிருந்திருக்கிறார்.

மாத்தளையில் கே.முருகேசப்பிள்ளையும் ஷெய்கு கலைமானுல் காதிரியும் ஏற்றிவைத்த உன்னத இலக்கியச்சுடரை முன்னேந்திச் சென்ற பெருமகனாக மாத்தளை வடிவேலன் திகழ்கிறார். இர.சிவலிங்கம், எஸ்.திருச்செந்தூரன், பாரதியின் பேத்தி விஜயபாரதி, அவரது கணவர் சுந்தரராஜன், கு.அழகிரிசாமி ஆகிய இலக்கிய ஆளுமைகளுக்கு மாத்தளையில் செங்கம்பளம் விரித்து சிறப்புச் செய்த நிகழ்வுகளில் ஆர்வத்தோடு கலந்து கொண்ட இளைஞராக வடிவேலன் திகழ்ந்திருக்கிறார். மாத்தளை கார்த்திகேசு, மலரன்பன், அல் - அஸூமத், கதிர்வேல், பூபாலன், சி.கா.முத்து, ஆ.ராஜலிங்கம், பழனிவேல், கே.கோவிந்தராஜ், எச்.எச்.விக்ரமசிங்க, மாத்தளை சோமு என்று பேரணியின் அணைப்புடன் செயற்பட்டவர் வடிவேலன். மாத்தளையின் இலக்கியப்பாரம்பரியத்தை முன்னெடுத்த முக்கிய ஒரு கண்ணியாக வடிவேலன் இலக்கிய வரலாற்றுக்குரியவராகிறார்.

மாத்தளையின் ஆத்மீகச் செழுமையின் போஷிப்பிலே ஊட்டம் பெற்று, நிறைவு காணும் பக்குவம் அவருக்கு வாய்த்திருக்கிறது. மாத்தளையின்புனிதத் திருத்தலமாகக் கருதப்படும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் பிரகார வெளியில் ஆத்ம லயிப்பில் சுகிப்பவர் அவர். மாத்தளையின் வால்ராசா கோயில், வெட்டரி வால்சாமி, எழு கன்னியம்மன் கோயில், முனியாண்டி, வேட்டைக்கறுப்பன், இடும்பன், வைரவர் கோயில், தொட்டிச்சியம்மன் கோயில், ஊமையன் கோயில் என்று மாத்தளையில் குடிகொண்டிருக்கும் தெய்வங்கள் எல்லாம் அவர் நெஞ்சிலும் குடிகொண்டுள்ளன.

2

மலையக நாட்டுப்புறவியலில் முதன்மை ஆய்வாளராக மாத்தளை வடிவேலன் சிறப்புப் பெறுவதற்கு அவரது “மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும்” (1997), “மலையக நாட்டுப்புறவியலில் மாரியம்மன்” (2007), “மலையக பாரம்பரியக் கலைகள்” (1992) ஆகிய நூல்கல் சாட்சி சொல்லவல்லன. “மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும்” என்ற மாத்தளை வடிவேலனின் நூல் “ஒரு அசாத்திய தீமிதிப்பு”


எச்.எச்.விக்கிரமசிங்க


மாத்தளை பெ.வடிவேலன்


மு.நித்தியானந்தன்




என்று எழுதினார் இர.சிவலிங்கம் அவர்கள். இந்துசமய இராஜாங்க அமைச்சு நடத்திய நாட்டுப்புற வியல் கருத்தரங்கில் “காமன் கூத்தும் மலையக மக்களின் சமூக வாழ்வில் அதன் பங்களிப்பும்“ என்ற பொருண்மையில் மாத்தளை வடிவேலன் சமர்ப்பித்த ஆய்வுக்கட்டுரை அறிஞர்களின் பாராட்டைப்பெற்ற கட்டுரையாகும். தனது ஆய்வுப்பொருளின் மீது ஆழ்ந்த ஈடுபாடும், தோட்ட மக்களுடன் அவர் கொண்டுள்ள இடையறாத தொடர்ந்த நெருக்கமும் கள ஆய்வுகளில் அவருக்குப் பெருந் துணையாய் அமைந்துள்ளன.

பதினைந்து ஆண்டு காலம் இந்து சமய, கலாசார அலுவல்கள் அமைச்சில் கலாச்சார உத்தியோகஸ்தராகப் பணியாற்றிய காலப்பகுதியில் மலையகத்தின் ஆலயங்கள் பற்றிய மிகத் துல்லியமான தவல்களை அவர் சேகரித்துக்கொண்டிருந்தார். தோட்டங்கள், ஆலயங்கள் என்று தொடர்ந்த களப்பணியில் ஈடுபட்டிருந்ததால் மலையகத்தின் தொன்மங்கள், ஐதீகங்கள், தெய்வ வழிபாட்டு முறைகள், மக்கள் நம்பிக்கைகள் போன்ற அனைத்து வாழ்வியல் கோலங்களோடும் வடிவேலன் பின்னிப்பிணைந்தவராக மிளிர்ந்தார்.

இளமையில் சகல அமைப்புகளையும் கண்டனத்தோடு நோக்கிய வடிவேலன், பின்னால் அவை அனைத்தோடும் இணைந்து செயற்படுவதன் மூலமே மலையக மக்களுக்குக் காரிய சாத்தியமான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்று நம்பிச் செயற்பட்டார்.

தீவிர சமூகச் செயற்பாட்டாளரான வடிவேலன் 1974இல் காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ், நோர்த் மாத்தளையில் தோட்டங்கள் சுவீகரிக்கப்பட்டு, தோட்டத் தொழிலாளர்கள் வீதிகளுக்கு வந்த நிலையில் அவர்களின் ஜீவமரணப் போராட்டத்தை கண்கூடாகக் கண்டார். நாடு என்றும் காணாத உணவு நெருக்கடியில் சிக்கியிருந்தது. ஒரு கட்டத்தில் அரசாங்கத்திடம் இலங்கை மக்களுக்கான உணவுப்பொருட்களின் கையிருப்பு வெறும் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே போதுமானதாக இருந்தது. உணவு விநியோகம் ஒவ்வொரு கிழமையையும் எவ்வாறு தாக்குப்பிடிப்பது என்ற அளவிலேயே நடந்து கொண்டிருந்தது.

இந்நிலையில் மாத்தளையில் மகாவெலகந்த, மடவெளை 1ஆம், 2ஆம் தோட்டங்களைச் சேர்ந்த 210 குடும்பங்கள் வேலை இழந்து, காசும் இல்லாமல், ஒரு வேளைச் சாப்பாட்டுக்கும் வழியின்றி அல்லலுற்ற நேரத்தில், அவர்களுக்கு நிவாரணம் வழங்கும் உடனடி நடவடிக்கையில் எச்.எச்.விக்ரமசிங்க, மாத்தளை வடிவேலன், பாக்கியம் செல்லப்பா, கதிர்வேல், மலரன்பன், கே.வேலாயுதம் சந்தனம் கிருஷ்ணன் ஆகியோர் இணைந்து துரித கதியில் செயற்பட்டதை நோர்த் மாத்தளை மக்கள் இன்றும் நினைவு கூர்வர்.

அப்போது உணவு விநியோக ஆணையாளராக இருந்த எஸ்.பத்மநாதன் அவர்களை எச்.எச்.விக்ரமசிங்க சந்தித்து, நிலைமையை விளக்கி, அவர் உடனடியாகவே இந்த மக்களுக்கு உதவிட முன்வந்தார். அப்போது பிரதி ஆணையாளராக இருந்த எம்.எல்.எம்.மரைக்கார் பெருங்கருணையுடன் இந்த நிவாரணப்பணிகளை மேற்கொண்டார். இந்தக் குடும்பங்களுக்கு உடனடியாக 2 கொத்து அரிசியும் சீனியும் இலவசமாக விநியோகிக்குமாறு மரைக்கார் அவர்கள் மாத்தளை அரசாங்க அதிபர் சிறில் கமகே அவர்களுக்கு ஆணை பிறப்பித்தார். கடந்து போன ஒரு மாதத்திற்குமான உணவும் அவர்களுக்கு சேர்த்து வழங்கப்பட்டது. இந்தத் தோட்டங்களிலிருந்த தொழிற்சங்கங்கள் இந்தப் பிரச்னையைக் கண்டுகொள்ளவேயில்லை. தனி மனிதர்களாக அத்தருணத்தில் இவர்கள் செய்த சமூகப்பணி போற்றத்தக்கது என்பதில் ஐயமில்லை.

அது மட்டுமல்ல, அரசு மகாவெலகந்த, மடவெளை தோட்டங்களை சுவீகரித்த கையோடு, அத்தோட்டங்களில் இயங்கிக்கொண்டிருந்த தோட்டப்பாடசாலைகளை மூடிவிட்டன. இந்தத் தோட்டப்பாடசாலைகளில் பயின்று கொண்டிருந்த மாணவர்களின் கல்வி இடைநிறுத்தப்பட்டது. இப்பாடசாலைகளை மீண்டும் தொடங்கிட அப்போது தம்புள்ள பாராளுமன்றத் தொகுதியின் பிரதிநிதியாகவும் கலாசார அமைச்சராகவும் இருந்த டி.பி.தென்னக்கோன் அவர்களிடம் மனுவைச் சமர்ப்பித்து, அவர் கல்வி அமைச்சின் செயலாளராகவிருந்த ரிச்சர்ட் உடுகம அவர்களுக்கு உத்தரவு பிறப்பித்து, மீண்டும் தோட்டப்பாடசாலைகள் இயங்க ஆரம்பித்தன. இவற்றிற்கு ஆதாரமாக இருந்து செயற்பட்டவர்கள் எச்.எச்.விக்ரமசிங்கவும் மாத்தளை வடிவேலனுமே ஆவர். அமைச்சர்களாக, அமைச்சின் உயர் பதவியில் அமர்ந்திருப்பவர்களாக ஆற்றப்பட்ட பணிகள் அல்ல இவை. வெறுஞ் சாமானியர்களாக, எந்த விசிட்டிங் கார்டும் இல்லாதவர்களாக அதிகார பீடங்களை நாடி, ஏழை எளியவர்களுக்காகப் போராடியவர்கள் இவர்கள். அவை இரண்டு கொத்து அரிசி வாங்கிக் கொடுத்ததாக இருக்கட்டும், பதவி உயர்வுக்காக அமைச்சரிடம் மனுக் கொண்டு போவதாக இருக்கட்டும், இம்மாதிரிச் சின்னச்சின்ன வேலைகளை எல்லாம் எடுத்துப்போட்டுக்கொண்டு வேலை செய்யும் மனம் பெரிது.

*மிகுதி அடுத்தவாரம்...*

ஒரு கோப்பை
கொஞ்சம் ☕ தேநீர் - 331
***** ***** ***** *****
கவிஞர் தியாரூ

வைகை ஆற்றின் வெள்ளத்தை
வீரத் துடனே எதிர்த்ததுபார்;
வையம் புகழ வாழ்வாங்கு
வாழு கின்ற நாலடியார்!

வெள்ளம் தன்னை எதிர்த்தியங்க
உள்ளத் திறனுள் உறுதியெடு!
பள்ளம் மேடு கடந்தேறிப்
பரணிப் பாடல் எழுதிவிடு!

அச்சம் எதற்கு அதைவிலக்கு;
அடிமை புத்தித் திரைவிலக்கு!
மிச்சம் எதற்கு முடித்துவிடு;
மரண பயத்தை அழித்துவிடு!

உன்னை மிரட்டும் சிறுநரிகள்
உனக்(கு) எதிரே நின்றிடலாம்!
உன்னை உனக்குத் தெரியாதா;
உருட்டித் தள்ளு வென்றிடலாம்!



# பேச்சுவார்த்தையில் இலங்கையில் உள்ள தமிழ்த் தரப்புகளின் பொறுப்புப்பற்றிய தமிழ்ச் சிவில் சமூகத்தவர்களின் கரிசனைகள்

**(குறிப்பு ஸ்ரீலங்கா என்பதை இலங்கை என்று வாசிக்கவும் - ஆசிரிய பீடம் - கனடா உதயன்)**

*(சென்ற வார தொடர்ச்சி)*

**த**ற்போது சிறீ லங்காவை பொருளாதாரப் பேரழிவிலிருந்து மீட்பதற்கு உதவ முன்வரும் நாடுகளும் அமைப்புகளும் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு என்பதை பொருளாதார உதவிக்கான முன்னிபந்தனையாக முன்வைக்க வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கின்றோம். பொருளாதார உதவிகளின் ஒவ்வொரு கட்டமும் பேச்சுவார்த்தையின் ஒவ்வொரு அடைவுடனும் பிணைக்கப்பட்டதாகவே இருக்கும் என்பதை உதவி வழங்குபவர்கள் சிறீ லங்காவுக்கு கூறுவதுடன் அதையே நடைமுறைப்படுத்தவும் வேண்டும். வரலாற்றில் ஏற்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்தை உலகம் சரியாகப் பயன்படுத்துவதாயின் சர்வதேச நாடுகளும் உதவி வழங்கும் நிறுவனங்களும் இதையே செய்ய வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.

மேலும் தமிழ்த் தேசத்துடன் பேசுவது போலவே இத்தீவில் வாழும் முஸ்லிம்கள் மலையகத் தமிழர்கள் பறங்கியர், மலாயர் போன்ற சமூகங்களுடனும் சிறீலங்கா அரசு பேச்சுவார்த்தை நடாத்துவதுடன் ஏனைய சமூகங்களுக்கு எதிராக ,ந்நாட்டில் புரையோடிப்போயுள்ள பௌத்த - சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைகளுக்கெதிரான முழுமையான நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை நாம் சிறீ லங்கா அரசிடம் வலியுறுத்துகின்றோம்.

இவ்வறிக்கையில் கையெழுத்திட்டுள்ள தமிழ் சிவில் சமூக அமைப்புகள்:

- சுயாதீன தமிழ் இளைஞர்கள் அமைப்பு
- நியு சன் விளையாட்டு கழகம்
- புழுதி - சமூக உரிமைகளுக்கான அமைப்பு
- அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பு
- தளம்
- தமிழ் சட்டத்தரணிகள் பேரவை
- யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
- யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கம்
- நீதி சமாதான ஆணைக்குழு, யாழ்ப்பாண மறை மாவட்டம்
- நீதிக்கும் அமைதிக்குமான குருக்கள் துறவிகள் - வடக்கு கிழக்கு
- குறிஞ்சிக்குமரன் சனசமூக நிலையம்,
- அடையாளம் - கொள்கை ஆய்வுக்கான நிலையம்
- கிராமிய உழைப்பாளர் சங்கம்
- மறைநதி கத்தோலிக்க தொடர்பூடக மையம், யாழ்ப்பாண மறை மாவட்டம்
- சுயம்பு - கலை பண்பாட்டு செயல்திறன் மையம், யாழ்ப்பாணம்
- P2P மக்கள் இயக்கம்
- தமிழ் சிவில் சமூக அமையம்
- மலையக சமூக விஞ்ஞான ஆய்வு மையம்.
- சமூக விஞ்ஞான ஆய்வு மையம்.
- சமூக அபிவிருத்திக்கான செயற்பாட்டு மையம்.
- மலையகத் தமிழர் பண்பாட்டுப் பேரவை
- குரலற்றவர்களின் குரல்
- வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் வடக்கு கிழக்கு
- யாழ் மாவட்ட பெண்கள் சமாசம்
- அக்கினிச் சிறகுகள்.
- இலங்கை பல்சமய கருத்தாடல் நிலைய சகவாழ்வு சங்கம், யாழ்ப்பாணம்
- Centre for Accessibility Monitoring Information Disability. Batticaloa

சிவில் சமூக செயற்பாட்டாளர்கள்:

1. தவத்திரு அகத்தியர் அடிகளார் தென்கயிலை ஆதீனம்
2. ஆயர் P. கு. இம்மானுவல் பெர்னான்டோ ஆயர் மன்னார்
3. ஆயர் நோயல் இமானுவல் பேராயர், திருகோணமலை
4. தவத்திரு வேலன் சுவாமிகள் சிவகுரு ஆதீனம்
5. திருவருட்பணி செல்வன் நல்லூர்
6. அருட்பணி மோகன் ராம்கீ
7. அருட்பணியாளர் ஜுட் சுதர்சன்
8. அருட்பணி கந்தையா ஜெகதாஸ்
9. அருட் சகோதரி சோ. நிக்கோலா
10. அருட்பணியாளர் ப. யோ. ஜெபரட்ணம் குருமுதல்வர், யாழ். மறைமாவட்டம்
11. அருட்பணியாளர் கி. ஜெயக்குமார் மறைக்கோட்ட முதல்வர், இளவாலை
12. அருட்பணியாளர் ஜெயபாலன் குறூஸ் மன்னார் மறைமாவட்டம்
13. அருட்பணியாளர் அகஸ்ரின் புஸ்பராஜா மன்னார் மறைமாவட்டம்
14. அருட்பணியாளர் அருளானந்தம் யாவிஸ் பங்குத்தந்தை, குருநகர்
15. அருட்பணியாளர் வசந்தன் பங்குத்தந்தை, நெடுந்தீவு
16. அருட்பணியாளர் ஸ்ரிபன் யாழ்ப்பாணம்



17. அருட்பணியாளர் றோகான் கிளரீசியன் சபை
18. அருட்பணியாளர் எழில்ரஜன் அயர்லாந்து
19. அருட்பணியாளர் லியோ ஆம்ஸ்ரோங் யாழ். மறைமாவட்டம்
20. அருட்பணியாளர் தே. ரவிராஜ் விரிவுரையாளர், சவேரியார் குருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம்
21. அருட்பணியாளர் மங்களராஜா, விரிவுரையாளர், சவேரியார் குருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம்
22. அருட்பணியாளர் அ. ஜஸ்ரின், விரிவுரையாளர், சவேரியார் குருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம்
23. அருட்பணியாளர் றெக்ஸ் சவுந்தரா, பங்குத்தந்தை, மானிப்பாய்
24. அருட்பணியாளர் ம. வி. இ. இரவிச்சந்திரன், விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
25. அருட்பணியாளர் ரெறன்ஸ் பெர்னாண்டோ, கொழும்பு மறைமாவட்டம்
26. அருட்பணியாளர் ஸேராட் ஜயவர்த்தன, கொழும்பு மறைமாவட்டம்
27. அருட்பணியாளர் நந்தன சப்ரமாது கொழும்பு மறைமாவட்டம்
28. ே. அபிலாஷ் குடிமகன்
29. சி. அபிநயா சமூக செயற்பாட்டாளர்
30. அ. அபிராஜ் சமூகப் பிராணி
31. ஐங்கரன் தழிழரசன் ஊடகவியலாளர்
32. ச. அஜிதா சமூக செயற்பாட்டாளர்
33. அஜித்குமார் வியைாட்டுக் கழகம்
34. அம்பிகா ராஜசேகரம் பெண் சமூக செயற்பாட்டாளர்
35. ஆனந்தி பெண் சமூக செயற்பாட்டாளர்
36. ஏஞ்சல் LGBTQI சமூக செயற்பாட்டாளர்
37. கு. அனித்தா முன்பள்ளி ஆசிரியர்
38. அனித்தா LGBTQI சமூக செயற்பாட்டாளர்
39. அனட் நிலுக்சி கிறிஸ்டி சட்டத்தரணி
40. அனோஜன் சமூக செயற்பாட்டாளர்
41. த. அன்பழகன் சமூகப் பிராணி
42. அனுஜா இராசநாயகம் சட்டத்தரணி
43. அனுசாயா சமூக செயற்பாட்டாளர்
44. க. அனுஷா பெண் சமூக செயற்பாட்டாளர்
45. அனுஷானி அழகராஜ் சமூக செயற்பாட்டாளர்
46. அனுசாந்த் சமூக செயற்பாட்டாளர்
47. சி. அனுசியா பெண் உரிமை செயற்பாட்டாளர்
48. இ. அனுசியா பெண் சமூக செயற்பாட்டாளர்
49. அப்பொலி அன்ரனி ஜெராட் பாலேந்திரன் சமூக நலன்விரும்பி
50. ஆரியரெட்ணம் வில்பிரட் அர்ஜுன் சட்டத்தரணி
51. அரியதாஸ் சத்தியானந்தி ஆசிரியர்
52. அருள் வசந்தன் சமூக செயற்பாட்டாளர்
53. அருளம்மா சமூக செயற்பாட்டாளர்
54. பி. அருள்தாஸ் சமூகப் பிராணி
55. அருள்தாஸ் சமூக செயற்பாட்டாளர்
56. அருள்வதனா பெண் உரிமை செயற்பாட்டாளர்
57. அருட்பிரகாசம் நிரோசன் சட்டத்தரணி
58. அஸ்விக்கா சமூக செயற்பாட்டாளர்
59. வி. ஆதினா பெண் சமூக செயற்பாட்டாளர்
60. ப. ஆதித்யா பெண் சமூக செயற்பாட்டாளர்
61. அழகரெத்னம் கீர்த்தனா சட்டத்தரணி
62. பே. பபிதா பெண் சமூக செயற்பாட்டாளர்
63. பாபு கஜேந்தினி பெண் சமூக செயற்பாட்டாளர்
64. பேபிலைலா பெண் சமூக செயற்பாட்டாளர்
65. ஆ. பகீரதன் சமூக செயற்பாட்டாளர்
66. சா. பஜீனா பெண் சமூக செயற்பாட்டாளர்
67. பாலா சமூக செயற்பாட்டாளர்
68. பாலபாஸ்கரன் சுதர்சன் சட்டத்தரணி
69. பாலசிங்கம் மதுசாளினி பல்கலைக்கழக மாணவி
70. பானுமதி அரவிந்தன் பெண் சமூக செயற்பாட்டாளர்
71. ம. பானுசா பெண் சமூக செயற்பாட்டாளர்
72. மு. பரத் சமூக செயற்பாட்டாளர்
73. அ. பஸ்நா சமூக செயற்பாட்டாளர்
74. S. பவானந்தராஜா வங்கி முகாமையாளர்
75. சி. பீஷ்மன் சமூக செயற்பாட்டாளர்
76. பிருந்தன் சமூக செயற்பாட்டாளர்
77. பிஸ்லியா புகுடோ மனித உரிமை செயற்பாட்டாளர்
78. கரோலின் சமூக செயற்பாட்டாளர்
79. சந்திரா பெண் சமூக செயற்பாட்டாளர்
80. C. சந்தரகுமார் பயிற்றுவிப்பாளர்
81. கா. சந்திரவதனி பெண் சமூக செயற்பாட்டாளர்
82. சித்ரா ஆசிரியர்
83. சித்ரா மோகன் பெண் சமூக செயற்பாட்டாளர்
84. சித்ரா விஜயகுமார் பெண் சமூக செயற்பாட்டாளர்
85. சித்ரவேல் கணேசன் ஆசிரியர்
86. சித்திரவேல் தயாபரன் அதிபர்
87. கிறிஸ்டின் ஜெயசீலன் ஒகஸ்டா லிமா குடிமகன்
88. ம. கிரேசியன் சட்டத்தரணி
89. சு. டெய்சி பெண் சமூக செயற்பாட்டாளர்
90. U. M. டயாளினி பெண் சமூக செயற்பாட்டாளர்
91. டி. ஜோ. டியூக் சட்டத்தரணி
92. டிபினா பெண் சமூக செயற்பாட்டாளர்
93. L. டிலக்சன் மாணவன்
94. டிலான் குடிமகன்
95. தினேஸ் சமூக செயற்பாட்டாளர்
96. டினோயா சமூக செயற்பாட்டாளர்
97. எல்சன் பிறிமானந்த் ஜேசுதாசன் சமூக செயற்பாட்டாளர்
98. ஈஸ்வரி செல்வகுமார் பெண் சமூக செயற்பாட்டாளர்
99. எயிலோஸ் டீன்குமார் சூரதி
100. ம. பாத்திமா பர்ணா பெண் உரிமை செயற்பாட்டாளர்
101. பேராசிரியர் K.T. கணேலிங்கம் அரசறிவியல் துறை
102. க. கணேஸ்வரன் சட்டத்தரணி
103. பேராசிரியர் ந. கங்காதரன் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடம்
104. ஞானேஸ்வரராசா நிரோஜன் மாணவன்
105. கோபி மாதர் சங்க உறுப்பினர்
106. கோபிதா மனோகரன் சட்டத்தரணி
107. K. கோபிகரன் தனியார் துறை
108. கௌரி பெண் சமூக செயற்பாட்டாளர்
109. கௌரி ஜெயசுந்தரம் பெண் சமூக செயற்பாட்டாளர்
110. குணதாச பிரஷாந் சிவில் சமூக செயற்பாட்டாளர்
111. ஹக்கீம் அஸ்வர் செயற்பாட்டாளர்
112. த. இலக்கியா பெண் சமூக செயற்பாட்டாளர்
113. இளமுருகநாதன் கேஷிஹன் பல்கலைக்கழக மாணவன்
114. இளையதம்பி புவனேஸ்வரி குடிமகன்
115. இளையதம்பி திருஞானசுந்தரம் வியாபாரம்
116. S. இன்பரூபன் சமூக செயற்பாட்டாளர்
117. ம. இந்திராணி பெண் உரிமை செயற்பாட்டாளர்
118. இஸ்மயில் ஆயிஷா பாணு குடிமகன்
119. ம. யமுனா பெண் சமூக செயற்பாட்டாளர்
120. கி. ஜானகி பெண் சமூக செயற்பாட்டாளர்
121. ச. ஜனார்த்தனன் சமூக செயற்பாட்டாளர்
122. M.M. ஜன்சிலா பெண் சமூக செயற்பாட்டாளர்
123. Y. யதுசன் மாணவன்
124. அருட்பணி ஜெகதாஸ் குடிமகன்
125. ப. ஜெகதீஸ்வரன் குடிமகன்
126. க. ஜெக்கா பெண் சமூக செயற்பாட்டாளர்
127. யேமிகா பொன்னுத்துரை பல்கலைக்கழக மாணவி
128. க. ஜெனிதா பெண் சமூக செயற்பாட்டாளர்
129. ஜோ. ஜெஸ்ரின் பெண் சமூக செயற்பாட்டாளர்
130. M. ஜெயபால் அபிவிருத்தி உத்தியோகத்தர்
131. ஜெயலட்சுமி ஜெகநாதன் பெண் சமூக செயற்பாட்டாளர்
132. ஜெயம் சுதன் மாணவன்
133. ஜெயமதி தனராஜ் பல்கலைக மாணவி
134. சு. ஜெயந்தா பெண் சமூக செயற்பாட்டாளர்
135. ஜெயந்தா சுரேஸ் குடிமகன்
136. ப. ஜெயந்தி பெண் சமூக செயற்பாட்டாளர்
137. ஜெயந்தி சுந்தராஜி பெண் சமூக செயற்பாட்டாளர்
138. ஜெயந்தினி பெண் சமூக செயற்பாட்டாளர்
139. ஜெயராம் கேதீஸ்வரன் பந்தல் உரிமையாளர்
140. ஜெயரெட்ணம் கிருஷாந் சுயாதீன சமூக செயற்பாட்டாளர்
141. ஜெயசங்கர் மதுரா பெண் சமூக செயற்பாட்டாளர்
142. ஜெயசிங்கம் ஜெயரூபன் சட்டத்தரணி
143. இ. ஜெயசுதா பெண் சமூக செயற்பாட்டாளர்
144. செ. ஜெயவதனி பெண் சமூக செயற்பாட்டாளர்
145. சி. ஜெயிதா பெண் சமூக செயற்பாட்டாளர்
146. ஜொன LGBTQI சமூக செயற்பாட்டாளர்
147. சி. அ. யோதிலிங்கம் அரசியல் ஆய்வாளர்
148. யூட் சமூக ஆர்வலர்
149. ம. யூட் டினேஸ் சட்டத்தரணி
150. எ. யூலியட் பெண் உரிமை செயற்பாட்டாளர்
151. ஜஸ்டின் சிவில் சமூக செயற்பாட்டாளர்
152. கபிலன் மாணவன்
153. கைலாயபெருமாள் கம்சாஜினி மாணவி
154. கஜன் மின் இணைப்பாளர்
155. கஜேந்திரன் சுயதொழில் முயற்சியாளன்
156. கலைச்செல்வி குடிமகன்
157. கி. கலைவாணி சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
158. சு. கலைவேந்தன் சிவில் சமூக செயற்பாட்டாளர்
159. கா. கலையமுதன் சமூகப் பிராணி
160. கலாதர்சினி ஜோர்ஜ் வொசிங்டன் குடிமகன்
161. S. கலாவதி உறுப்பினர், யாழ் மாவட்ட பெண்கள் சமாசம்
162. கலோசியோன் பிரசாந்தி சமூக விரும்பி
163. கல்பனா பெண் சமூக செயற்பாட்டாளர்
164. சி. கமலகாந்தன் சமூக செயற்பாட்டாளர்
165. க. கமலாதேவி பெண் சமூக செயற்பாட்டாளர்

**(தொடர்ச்சி 26 பக்கம்)**

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1033



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## தம்பலகமம் ஆதிகோணநாயகர் கோயில் திருகோணமலை

" சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப் போமல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழு நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே."

கி.பி 1624 ஆம் ஆண்டின் பின்னர் இக்கோயில் கட்டப்படதாகக் கருதப்பட்டபோதிலும், வேறு சில கூற்றுக்களை ஆராயுமிடத்து, தம்பலகமத்திலே காணப்பட்ட ஒரு சிவாலயத்திலே, சுவாமிமலையில் கண்டெடுக்கப்பட்ட திருக்கோணேஸ்வரத் திருவுருவத்தைப் பிரதிஷடை செய்தார்கள் என்றும், அதன் பின்னர், முன்னர் வழங்கப்பட்ட பெயர் மறைந்து, ஆதிகோணநாயகர் கோயில் என்ற பெயர் நிலைத்திருக்கலாம் என்ற கருத்தினையும், கருத்திற்கொள்ள முடிகின்றது. இதற்கு ஆதாரமாக, யாழ்ப்பாணவைபவமாலையிலே சில கருத்துக்கள் காணப்படுகின்றன. மயில்வாகனப்புலவர் எழுதிய யாழ்ப்பாணவைபவமாலையில், விஜயன் தனது ஆட்சிக்குப் பாதுகாப்பாகக் கிழக்குத் திசையில், தம்பலகமத்துக் கோணேசர் கோயிலைப் புதுப்பித்துக் கட்டுவித்து நித்ய, நைமித்தியங்கள் காலந்தவறாது நடைபெற வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விஜயன் காலத்தின் பின்பு, மநுநீதிகண்டசோழன் மகன் குளக்கோட்டு மகாராஜன் யாத்திரையின் நிமித்தம் திருகோணமலையை வந்தடைந்து, கோணேசப்பெருமானைத் தரிசித்துப் பின் தம்பலகமத்திலே பழுதுபட்டுக்கிடந்த கோணேசர் சிவாலயத்தைப் பழுதுபார்த்து, அக்கிரகாரம் முதலிய வேலைகள் அனைத்தையும் திருத்தினான் என்றும், யாழ்ப்பாணவைபவமாலை கூறியுள்ளது. மநுநீதிகண்டசோழனின் பட்டப்பெயரைத் தட்சிணகைலாயபுராணம் வரராமதேவர் எனக் குறிப்பிட்டுள்ளது. கோணேசர் கோயில் கல்வெட்டின்படி, பரங்கியர் கோணைநகரை அழிக்குமுன்பு கோணைநாதர், தம்மையும், தமது பரிவார தேவர்களையும், ஆபரணங்களையும், பொக்கிஷங்கள் முதலான திரவியங்களையும், கழனிமலைக்குக் கொண்டுசெல்லும்படி, கோயில் அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்ததால், அவர்கள் அவ்வாறே செய்தனர் என்று சில குறிப்புக்களிலே கூறப்பட்டுள்ளது. சிலகாலம் சென்ற பின் வரராசசிங்கன் எனப் புராணங்கள் கூறும் முதலாம் இராசசிங்கனால், கழனிமலைக்கு அருகாகத் தம்பைநகர் எனப்படும் ஒரு நகரமும் கோணைநாதருக்குக் கோயிலும் புதிதாகக் கட்டப்பட்டது என்று திருக்கோணாசல புராணத்தின் தம்பைநகர்ப்படலத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

இதனை,

"கன்னல்வேலி வரம்புடுத்த
கழனிசூழும் தம்பைநகர்
என்னும் நாட்டின் அன்பினொடும்
இலங்கும் மணிப்பொன்னாலயமும்
சொன்ன முறையிற் றானமைத்துத்
தூய பூசைத் தேர்த்திருநாள்
முன்ன அவன்செய் கெனஅருளி
மறைந்தான் கோண மலைநாதன்"

என்று கூறப்பட்டுள்ளது.

"சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
ஏல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்."

தற்பொழுது ஆதிகோணநாயகர் ஆலயம் இருக்கும் இடத்திற்குச் சற்றுத் தூரத்தில், தீனேரி, பாண்டியூற்று ஆகிய இடங்கள் இருக்கின்றன. திருநகர், பாண்டியன் ஊற்று என்ற பெயர்கள் பிற்காலத்தில் இவ்வாறு திரிபுபட்டிருக்க வேண்டும். இங்கும் சிவாலயங்கள் இருந்தமைக்கான அழிபாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இங்கிருந்த சிவலிங்கம், நந்தி என்பன பலகாலங்களுக்கு முன்னர் கொண்டு வரப்பட்டு, தம்பலகமம் ஆதிகோணைநாதர் கோயிலில் வைக்கப்பட்டிருந்தது.

திருக்கோணேஸ்வரத்தோடு தொடர்புபட்டுக் காணப்படும் வரலாறுகள், மரபுகள் யாவும் தம்பலகமம் ஆதிகோணைநாயகர் ஆலயத்தோடும் தொடர்புபட்டுக் காணப்படுகின்றது. கோணேசர் கல்வெட்டுக் கூற்றின்படி குளக்கோட்டுமன்னன் கலியப்தம் 512 ஆம் ஆண்டில் கோணேசர் கோயில் திருப்பணியையும், 526 ஆம் ஆண்டில் கந்தளாய்க் குளத்தைக் கட்டும் பெரும்பணியையும், நிறைவேற்றியதாகச் சான்றுகள் கூறியுள்ளன. கி.மு 1300 வருட பழமை வாய்ந்தது திருக்கோணேஸ்வரம். இக்கோயில் திருப்பணியை கி.பி 5 ஆம் நூற்றாண்டளவில் சோழ அரசனாகிய குளக்கோட்டு மன்னன் புனருத்தாரணம் செய்துள்ளான். குளமும், கோட்டமும் கட்டியதால் குளக்கோட்டன் எனப் பெயர் பெற்றான் எனவும் கூறுவர். குளக்கோட்டு மன்னன் திருக்கோணேஸ்வரத்திற்குச் செய்த திருப்பணிகள், மானியங்கள், நிபந்தனைகள், நிர்வாக ஆணைகள் யாவும் கோணேசர் கல்வெட்டிலே தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. கோணேசர் கல்வெட்டிலுள்ள ஆணைகளை ஆதி கோணநாயகர் ஆலயம் இன்றுவரை கடைப்பிடித்து வருகின்றது.

- வளரும்...

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்
நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?
நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.
நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும் அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.



தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா
எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577
4 இடங்களில் சேவை
றொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு
MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga
SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7
HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto
RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill
NORTH YORK OFFICE
288 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# சமஷ்டி முறையிலான கட்டமைப்புக்குக் கொடுக்கும் பெயரோ வடிவம் முக்கியமல்ல அதன் உள்ளடக்கம்தான் முக்கியமானது!

- கனடா நக்கீரன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனும் சுமந்திரனும் வெள்ளிக்கிழமை (சனவரி 20, 2023) பிற்பகல் சனாதிபதி செயலகத்தில் சனாதிபதி விக்கிரமசிங்கவுடன் ஒரு மணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தினர். வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, வன மற்றும் வனவிலங்கு அமைச்சர், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் மூத்த அதிகாரிகள் குழுவினர் இதில் கலந்துகொண்டனர். வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தினால் அபகரிக்கப்பட்ட தனியார் காணிகளை உடனடியாக விடுவிப்பதற்கான அமைச்சின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான அமைச்சரவை பத்திரத்தை தயாரிக்குமாறு சனாதிபதி விக்கிரமசிங்க அமைச்சர் வன்னியாராச்சிக்கு பணிப்புரை விடுத்தார். இந்தச் சந்திப்பில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள்.

(1) இப்போது குற்றஞ்சாட்டப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐந்து கைதிகள் 75வது சுதந்திர நாளான பெப்ரவரி 4 அன்று விடுவிக்கப்படுவார்கள்.
(2) சட்டமா அதிபர் திணைக்களம் தேவையான ஆவணங்களைத் தயாரித்தவுடன் இன்னும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாத மேலும் பத்துக் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள்.
(3) காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவது மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். அது தொடர்பாக நில ஆணையம் அமைக்கப்படுகிறது.
(4) பத்து பேரில் ஒன்பது பிரதிப் பொலிஸ் மாஅதிபரும் ஒவ்வொரு மா.காண சபையினாலும் நிர்வகிக்கப்படுவார்கள். மீதமுள்ள ஒன்று கொழும்பு மாநகரப் பகுதிக்கானதாக இருக்கும்.

இவை நிறைவேற்றப்பட்டவுடன், முன்னர் விவாதிக்கப்பட்ட அதிகாரப்பகிர்வு மற்றும் அரசியலமைப்பு மாற்றங்கள் தொடர்பான ஏனைய விடயங்கள் மீண்டும் தொடங்கப்படும்.

எதிர்பார்த்தது போலவே, இந்திய வெளிநாட்டு அமைச்சர் ஜெய்சங்கர் அதே நாள் (வெள்ளிக்கிழமை) சனாதிபதி விக்கிரமசிங்கவுடன் தனது பேச்சுவார்த்தையின் போது, அரசியலமைப்பின் 13 வது திருத்தத்தை அரசாங்கம் "முழுமையாக செயல்படுத்த வேண்டும்" என வலியுறுத்தினார். இந்தியாவின் அன்றைய பிரதமர் இராஜீவ் காந்தி அரசின் தலையீட்டினால் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டது தெரிந்ததே. இது அதிகாரப் பகிர்வுக்கான கருவியாகக் கருதப்பட்டது. இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், "அதிகாரப் பகிர்வு இலங்கையின் (அரசியல்) உறுதித்தன்மைக்கு முக்கியமானது என்பதால் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்" என்பதையும் தெளிவுபடுத்தினார்.

சனாபதியுடனான சந்திப்பைத் தொடர்ந்து தொல்பொருள் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பிலும் அதிகாரிகளோடு பேசப்பட்டது. "குருந்தூர் மலை, தென்னமரவடி, புல்மோடை, திரியாய் போன்ற இடங்களில் தாங்கள் எல்லைக் கல்லுகளை நாட்டியிருந்த போதும் அவை வர்த்தமானியில் அறிவிக்கப்படவில்லை" என அதிகாரிகள் தெரிவித்தனர். அப்படியென்றால் எல்லைக் கற்களை அகற்றுமாறு கேட்கப்பட்ட போது, அந்தக் கற்கள் அகற்றப்படும் என அதிகாரிகள் இணக்கம் தெரிவத்தார்கள்.

காணி அதிகாரம் மாகாணசபைகளுக்குக் கையளிக்கப்படுவதற்கு ஏதுவாக தேசிய ஆணைக்குழு தொடர்பான சட்டவரைவு தயாரிக்கப்பட்டு வருவதாக சனாதிபதி தெரிவித்தார். அது நிறைவடைந்தவுடன் காணி அதிகாரங்கள் மகாணங்களுக்குக் கையளிக்கப்படும். இதே சமயம் உண்மைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்குதல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீளப்பெற்றுப் புதிய சட்டத்தினை உருவாக்குதல் உள்ளிட்டவற்றுக்கான சட்ட வரைவுகள் தயாராகிப்பட்டு வருவதாகும் தெரிவிக்கப்பட்டது. அந்த வரைவுகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக அவற்றைத் தங்களுடன் கலந்தாலோசிக்குமாறு விடுவிக்கப்பட்ட கோரிக்கை சனாதிபதியினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஏற்கனவே இணங்கிய விடயங்கள் தொடர்பாகவும் இன்றைய சந்திப்பில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும் அதன் அடிப்படையில் அடுத்த கட்டப் பேச்சுக்களை முன்னெடுக்கப்பது பற்றிய தீர்மானங்களை எடுக்க முடியும் என அரசு தரப்புக்குத் தெரிவிக்கப்பட்டது.

சனவரி 24 முதல் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வன விலங்குகள் திணைக்களத்தின் பிடியில் உள்ள நிலங்களை விடுவிப்பது தொடர்பில் உரிய திணைக்கள அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் கள ஆய்வில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு இடம்பெறும் கள ஆய்வில் இரு திணைக்கள உதவிச் செயலாளர்களுடன் சனாதிபதி செயலகத்தின் இணைப்பாளரும் சனவரி 23 முதல் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளனர். இந்த ஆய்வில் ஈடுபடும் குழுவினர் நேற்றைய தினம் மாவட்டச் செயலக அதிகாரிகள் சகிதம் நெடுந்தீவு உள்ளிட்ட பகுதிகளிற்கு சென்று தரவுகளைச் சேகரித்த அதேநேரம் வடமராட்சி கிழக்கு பகுதிகளிற்குச் சென்று ஆராயவுள்ளனர்.

தேசிய பொங்கல் நாள் நிகழ்விற்கு யாழ்ப்பாணம் சென்ற சனாதிபதியிடம் வடமராட்சி கிழக்கில் நாகர்கோவில் பகுதியில் போர் காரணமாக பற்றைகள் வளர்ந்த பகுதிகளை தமக்குரியது என வனவிலங்குகள் திணைக்களம் 19, 368 ஏக்கரை வர்த்தமானி வெளியிட்டுள்ளனர். இதில் 4,368 ஏக்கர் நிலம் தனியாரின் உறுதிக் காணிகள். அவற்றிற்கான வர்த்தமானிகள் இரத்துச் செய்து மீண்டும் உரியவர்களிடம் கையளிக்கப்பட வேண்டும் என எம்.ஏ.சுமந்திரன் விடுத்த கோரிக்கை தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்குமாறு சனாதிபதி பணிப்புரை விடுத்தார். இதற்கமைய வடமராட்சி கிழக்கின் 4 ஆயிரத்து 368 நிலங்கள் தொடர்பில் ஆராயவே வடமராட்சி கிழக்கிற்கு குழுவினர் பயணிக்கின்றனர்.



மீள்குடியேற்றம் தொடர்பான கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் சனாதிபதி இரணில் விக்கிரமசிங்க தலைமையில் சனவரி 23 (ஞாயிற்றுக்கிழமை) மாலை இடம்பெற்றது. வலிகாமம் வடக்கில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள மக்களின் 108 ஏக்கர் நிலப்பரப்பு இம்மாத இறுதிக்குள் விடுவிக்கப்படும் என இராணுவத்தினர் சனாதிபதி முன்னிலையில் தெரிவித்தனர்.

இதில் முப்படைத் தளபதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் , சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, க.வி.விக்னேஸ்வரன் , கு.திலீபன், காதர் மஸ்தான், பாதுகாப்பு செயலாளர் கமால் குணரட்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் முன்னாள் சனாதிபதி மகிந்த இராஜபக்ஷ கீரிமலையில் அமைத்த மாளிகைக்கும், கீரிமலைக்கும் இடையில் உள்ள கடற்படை முகாம் அமைந்துள்ள பிரதேசம். காங்கேசன்துறை சந்திக்கும், கடற்படை முகாமுக்கும் இடையில் அமைந்துள்ள பிரதேசம். கிராமக்கோட்டுச் சந்திக்கும் அண்மையாகவுள்ள இராணுவ முகாம் அமைந்துள்ள பிரதேசம். பலாலி வடக்கில் அன்ரனிபுரத்துக்கு அண்மையாகவுள்ள இராணுவ முகாம் என்பன விடுவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதில் பலாலி கிழக்கு பகுதியில் 1500 ஏக்கர் காணி விடுவிக்க வேண்டும் என எம்.ஏ.சுமந்திரன் கோரினார். எனினும் விமான நிலையம் அனைத்துலக தரத்திற்கு மாற்றப்பட்டதால் காணி விடுவிப்பது கடினம் என்றும் அப்பகுதியில் 10 மீற்றருக்கு உயர்வான கட்டடங்கள் கட்டமுடியாது என படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

அங்கு விவசாய நிலங்களே உள்ளன முதலில் அதனை விடுவியுங்கள் என சுமந்திரன் கேட்டுக் கொண்டார். இதற்குச் சனாதிபதி அந்தப் பகுதியில் விடுவிக்கப்படக் கூடிய நிலங்கள் தொடர்பான அறிக்கையை இருவாரங்களுக்குள் ஆராய்ந்து தமக்கு அறிகையிடுமாறு தனது செயலகச் செயலாளர் சாகல இரத்னாயக்கவுக்கு உத்தரவிட்டார்.

காணி அபகரிப்பு, காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் போனோர் தொடர்பாக பொறுப்புக் கூறல் மற்றும் இழப்பீடு போன்ற விடயங்கள் பேசப்பட்டாலும் காணி அபகரிப்பு மற்றம் காணி விடுவிப்பு இந்த இரண்டுமே முக்கியமானவை. மக்களது வாழ்வாதாரத்தோடு தொடர்புடையன.

நல்லாட்சிக் காலத்தில் (2015 - 2019 வரை) கணிசமான காணிகள் விடுவிக்கப்பட்டன. அரச காணிகள் 41,677 ஏக்கர், தனியான் காணிகள் 5,927 ஏக்கர் என மொத்தம் 47,604 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டன. கிழக்கே சம்பூரில் மட்டும் 617 குடும்பங்களுக்குச் சொந்தமான 237 ஏக்கர் காணி கடற்படையால் விடுவிக்கப்பட்டது. 2016 ஓகஸ்ட் மாதம் 22 அன்று சனாதிபதி சிறிசேனா அவர்களால் 546 குடும்பங்களுக்கு சொந்தமான 818 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டது. இந்தக் காணி இராசபக்ச ஆட்சிக் காலத்தில் கேட்வே இன்டஸ்றீஸ் **(Gateway Industries Ltd)** என்ற நிறுவனத்துக்கு 99 ஆண்டு குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. அதில் அந்த நிறுவனம் அ.டொலர் 4 பில்லியன் (4000 கோடி) பணத்தில் முதலீடு செய்ய இருந்தது. அந்தக் காணியை மீட்க உயர் நீதிமன்றம் வரை சென்று வாதாட வேண்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

2019 ஆம் ஆண்டு இறுதியில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் பின்னர் மிகச் சொற்ப காணிகளே விடுவிக்கப்பட்டன. சனாதிபதி கோட்டாபய இராசபக்ச ஆட்சியில் திரியாய், குச்சவெளி, புல்மோட்டை, தென்னமரவடி போன்ற கிராமங்களில் உள்ள பல்லாயிரம் ஏக்கர் காணிகளை தொல்பொருள் திணைக்களம் கையகப்படுத்தியது.

13 ஏ திருத்த சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப் பட்டு, இராணுவம் கையகப்படுத்திய காணிகள் விடுவிக்கப் பட்டு, எஞ்சிய அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்ட பின்னர் இரண்டாம் கட்டப் பேச்சு வார்த்தைகள் தொடங்க இருக்கிறது. அந்தப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தேசிய இனச் சிக்கலுக்கு தீர்வு காணப்படும் என சனாதிபதி விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். முன்னாள் சனாதிபதி மகிந்த இராசபக்ச அவர்களும் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியத் தரப்பைப் பொறுத்தளவில் ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர்களது வாழ்விடமான வடக்கு மற்றும் கிழக்கில் தமிழர்களுக்கு இருக்கிற உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் ஒரு சமஷ்டிக் அரசியல் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதே முக்கிய கோரிக்கையாக இருக்கிறது. இது இன்று நேற்றல்ல இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து இந்தக் கோரிக்கை முன் வைக்கப்பட்டு வருகிறது.

உண்மையில் சமஷ்டிக் கோரிக்கையை முதன் முதலில் ஒரு கோரிக்கையாக வைத்தவர்கள் கண்டிமக்களின் பிரதிநிதிகள்தான். டொனமோர் ஆணையத்தின் (1927) முன்பும் பின்னர் சோல்பரி ஆணையத்தின் (1946) முன்பும் சம்'டிக் கோரிக்கையை முன்வைத்தார்கள்.

(1) தமிழர்களின் தாயகப் பிரதேசமான வடக்கு - கிழக்கு மாகாணங்கள்.
(2) கண்டி மாகாணங்கள்.
(3) கரைநாட்டுச் சிங்களவர்களைக் கொண்ட மேற்கு, தெற்கு மாகாணங்கள்.

இம்மூன்று பிரதேசங்களுக்கும் சுயாட்சி வேண்டும் என்பதை அவர்கள் எழுந்தமானமாக முன்வைக்கவில்லை. வரலாற்று ரீதியாக யாழ்ப்பாண இராச்சியம், கோட்டை இராச்சியம், கண்டி இராச்சியம் எனும் மூன்று 'இராச்சியங்கள் இருந்துவந்தன என்பதைச் சுட்டிக் காட்டினார்கள். ஆனால் தமிழர் தரப்பு கண்டிச் சிங்களவர்களது தன்னாட்சிக் கோரிக்கையை அன்று ஆதரிக்கத் தவறிவிட்டார்கள். அதன் பலனை இன்றும் அனுபவிக்கிறோம்.


சமஷ்டி அடிப்படையில் ஒரு நியாயமான, நீதியான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதைத் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள எல்லாக் கட்சிகளும் வேறுபாடின்றிக் கேட்கின்றன. ஆனால் சமஷ்டி **(Federal)** என்ற சொல் சிங்கள மக்களுக்கு அச்சத்தை அளிக்கிறது. அதே சமயம் ஒற்றையாட்சி **(Unitary)** என்ற சொல் தமிழர்களுக்கு அச்சத்தை உண்டாக்குகிறது. இரண்டுமே கெட்ட வார்த்தைகள்.

உலகில் 25 விழுக்காடு மக்கள் சமஷ்டி அரசியல் யாப்பைக் கொண்ட நாடுகளில் வாழ்கிறார்கள். ஆனால் அந்த நாடுகளின் அரசியல் யாப்புகள் ஒரே மாதிரியாக இல்லை. மத்திய மற்றும் வெளிப்புற **(peripheral)** மாநிலங்கள் அல்லது மாகாணங்களுக்கு இடையே பகிரப்படும் அதிகாரங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. இந்த அதிகாரங்களின் அளவை வைத்தே ஒரு நாடு இணைப்பாட்சி நாடா அல்லது கூட்டாச்சி நாடா என்பது தீர்மானிக்கப்படும். அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் அதன் மாநிலங்கள் உச்சகட்ட அதிகாரப் பகிர்வைப் பெற்றுள்ளன. ஆனால் இந்தியா 28 மாநிலங்களையும் 8 ஆட்சிப் பகுதிகளையும் கொண்ட ஒரு சக்தி வாய்ந்த மைய அமைப்புடன் கூடிய கூட்டாட்சி **(A federation with strong centralising tendency)** நாடாகும்.

ஐக்கிய இராச்சியம் இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து, வடக்கு அயர்லாந்து ஆகிய நான்கு தீவுகளினால் ஆன ஒரு தனித்துவமான நாடு. ஐக்கிய இராச்சியம் ஒரு ஒற்றையாட்சி நாடாக இருந்தபோதிலும் 1999 இல் ஸ்கொட்டி' நாடாளுமன்றம் வேல்ஸ் தேசிய சட்டமன்றம் மற்றும் வட அயர்லாந்து சட்டமன்றம் ஆகியவை நிறுவப்பட்டன, இவற்றின் வரலாறு மற்றும் நிர்வாக கட்டமைப்பைப் பிரதிபலிக்கும் வகையில், ஒவ்வொன்றிற்கும் ஏற்பாடுகள் வேறுபடுகின்றன.

தமிழ்த் தேசியத் தரப்பு கேட்கும் சமஷ்டி முறையிலான கட்டமைப்புக்கு இடம்படும் பெயர் முக்கியமல்ல. அதன் வடிவமும் முக்கியமல்ல. அதன் உள்ளடக்கம்தான் முக்கியமானது. ரோசாப் பூவை வேறுசொல் கொண்டு அழைத்தாலும் அது மணக்கும் என்பதே உண்மை.

# பேரறிஞரும் பேராசிரியருமான கோபாலப்பிள்ளை மகாதேவா இங்கிலாந்தில் காலமானார்



**(யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தபோது "மைற்" என்ற பொறியியல் நிறுவனத்தை உருவாக்கி யாழ்ப்பாணம், சுன்னாகம் ஆகிய இடங்களில் அழகிய நவீன சந்தைகளைக் கட்டிக் கொடுத்து நகர சபைகளினதும் அரசாங்கத்தினதும் மற்றும் பலரது பாராட்டையும் பெற்றவர் பேராசிரியர் கோபாலப்பிள்ளை மகாதேவா என்பது இங்கு குறிப்பிடத்தக்கது)**

**யா**ழ்ப்பாணம் மட்டுவில் தெற்கில் 1934ம் ஆண்டு பிறந்த பேராசிரியர் கோபாலப்பிள்ளை மகாதேவா அவர்கள் தொடர்ச்சியான தமிழ்ப் பணிகள் மற்றும் சமூகப் பணிகளைத் தொடர்ந்து கடந்த 14-01-2023 அன்று இங்கிலாந்தின் இலண்டன் மாநகரில் இறைபதம் அடைந்தார் என்ற செய்தி எமக்கு கிட்டியபோது மொழியையும் பண்பாட்டையும் நட்பையும் என்றும் மரியாதை செய்து வந்த மகத்தான மனிதர் பற்றிய பழைய நினைவுகளை மீட்டுப் பார்த்தோம்.

பேராசிரியர் கோபாலப்பிள்ளை மகாதேவா அவர்கள் ஒரு பொறியியலாளர். ஆனால் அவர் இறுதிவரையிலும் தமிழ் மொழியையும் தமிழிலக்கியத்தையும் நேசித்தும் யாசித்தும் வாழ்ந்த ஒரு அறிஞர் என்றால் அது மிகையாகாது. 1974ல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது அனைத்துலகத் தமிராய்ச்சி மகாநாட்டின் பிரதம செயலாளராகச் செயலாற்றிய கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவாதான் அவர் என்பதும், அவரே தொடர்ந்து தற்போது கோபன் மகாதேவா என்ற பெயரில் பிரபல்யமாகி பல்துறைச் செயற்பாடுகளிலும் இலக்கியத்திலும் ஈடுபாடுகொண்டு இயங்கி வந்தவர் என்பது உலகெங்கும் இலக்கிய மற்றும் தமிழை நேசிக்கும் அனைவரும் நன்கு அறிவார்கள்.

யாழ்ப்பாணத்தில் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டை நடத்த முடியாது என்றும் கொழும்பிலேதான் அது நடத்தப்பட வேண்டும் என்றும் அன்றைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் மந்திரிசபையில் தீர்மானித்திருந்த வேளையில் கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா சிறிதும் தளராமல் தனது திறமையைப் பயன்படுத்தி சிறிமா அம்மையாருடன் வாதாடி யாழ்நகரிலேயே அந்த மாநாட்டை நடத்த அனுமதிபெற்றவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர் தனது ஆரம்பக்கல்வியை கைதடிநுணாவில் சித்திவிநாயகர் இந்து கலவன் பாடசாலை, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆகியவற்றிலும் இடைநிலைக்கல்வியை சாவகச்சேரி இந்துக்கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி ஆகியவற்றிலும் பெற்று இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் மாணவனாகச் சேர்ந்து தனது பட்டப்படிப்பை 1955ல் நிறைவு செய்து ஒரு பொறியியலாளரானார்.

பாடசாலைக் காலத்தில் உயரம் பாய்தலிலும், கைப்பந்தாட்டத்தில் பல்கலைக் கழகத்திலும், பங்குபற்றி பரிசில்களும் பெற்றுள்ளார். 1961 ஆம் ஆண்டில் பெரிய பிரித்தானியாவில் உள்ள பேர்மிங்காம் பல்கலைக் கழகத்தில் தனது பட்ட மேற்படிப்பை மேற்கொண்டு முதுமாணிப்பட்டம், கலாநிதிப்பட்டம் ஆகியவற்றைப் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து எந்திரவியல், முகாமையியல், தொடர்பான ஏழு உயர் பட்டயங்களைப் பெற்றார். இலங்கை, இங்கிலாந்து, மேற்கிந்திய தீவுகள் ஆகிய இடங்களில் பொறியியலாளர், ஆராய்ச்சி ஆசிரியர், கைத்தொழில் ஆலோசகர், இயக்குநர், பேராசிரியர் ஆகிய பதவிகளில் பணிபுரிந்த இவர், தனது வாழ்நாளில் சிறுவயது முதல் 1961 வரையிலும் பின்னர் 1966 முதல் 1978 வரையிலும் இலங்கையில் வாழ்ந்தார். ஏனைய காலங்களில் மேற்கிந்திய தீவுகளிலும் பெரும்பகுதியை பிரித்தானியாவிலும் வாழ்ந்து அந்தந்த நாடுகளில் பணிபுரிந்தார். இங்கிலாந்தில் 41 வருடங்கள் வாழ்ந்துள்ளார்.

இவர் இங்கையில் இருந்த காலப்பகுதியில் இலங்கை அரசாங்க சேவையில் பணியாற்றி களனி, பாணந்துறை, ஆகிவற்றில் அமைந்துள்ள பெரிய பாலங்களையும், மட்டக்களப்பு விமான நிலையத்தையும் கட்ட உதவினார். "மைற்" என்ற தாபனத்தை உருவாக்கி யாழ்ப்பாணம், சுன்னாகம் ஆகிய இடங்களில் மாதிரி நவீன சந்தைகளைக் கட்டிக் கொடுத்துப் பலரது பாராட்டையும் பெற்றார். இலங்கையில் இருந்த காலத்தில் இலங்கை கலாசார அமைச்சின் தமிழ் நாடகக் குழுவின் அங்கத்தினராகவும் மகாவலித்திட்ட விசாரணைக்குழுவில் அங்கத்தவராகவும், இலங்கை கைத்தொழில் சபை, இலங்கை அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் முகாமைத்துவக் குழுவின் அங்கத்தினராகவும், வட இலங்கை வர்த்தகர் -கைத்தொழிலாளர் சம்மேளனத்தின் (1970-78) நிறுவுதலைவராகவும் பணியாற்றினார்.

1960-1970 ஆண்டு காலப்பகுதியில் ஈழத்துச் சமகாலக் கல்விமான்கள் பலரால் "ஒரு யாழ்ப்பாணத்து மூளை" என்ற பாராட்டைப் பெற்றார்.

பேராசிரியர் கோபன் மகாதேவா தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை மிக்கவர். இவர் தனது பதின்னான்காவது வயதில் யாழ். மத்திய கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலப்பகுதியில் "மகாத்மா காந்தி" பற்றி ஒரு ஆங்கிலக் கவிதையை எழுதியதன் மூலம் எழுத்துலகில் பிரவேசித்தார். அதனைத் தொடர்ந்து இவரது "விண்வெளி ஆராய்ச்சிக்" கட்டுரைகள் இலங்கையின் வீரகேசரி பத்திரிகையில் பிரசுரமாகின. ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆங்கில மற்றும் தமிழ்க்கவிதைகளை இவர் எழுதியுள்ளார்.

இவரது "வாழ்க்கையும் கவிதையும்" என்ற தமிழ்க்கவிதை நூலில், இலங்கைக் கவியரங்குகளில் பாடப்பட்ட பல்வேறு கவிதைகளும் தமிழ்ச்சஞ்சிகைகளில் பிரசுரமான கவிதைகளும் அடங்கியுள்ளன. இவரது பரிசோதனை முயற்சியாக சில ஆங்கில 'Nursery Rhymes" என்னும் குழந்தைப் பாடல்கள் சிவற்றை தமிழாக்கம் செய்திருக்கிறார். இவருடைய 'Life in Nutshells' ஆங்கிலக்கவிதைத் தொகுப்பு 1997ல் பிரித்தானியாவின் கவிதை நூல்கள் போட்டியில் முதலாவது பரிசைப்பெற்றது. இவரது மூன்று நீண்ட ஆங்கிலச் சிறுகதைகள் அடங்கிய சிறுகதைத் தொகுதியொன்றும் வெளியாகியுள்ளது.


பிரித்தானிய ஈழவர் இலக்கியச்சங்கம் (ELAB) என்ற அமைப்பினை 2006 ஆம் ஆண்டில் நிறுவி அதன் தலைமைப் பதவியை ஏற்று மாதந்தோறும் இரண்டாவது புதன் கிழமைகளில் கூடி ஆக்க பூர்வமான செயற்பாடுகளை நடத்திவருகிறார். இதில் தமிழ் ஆங்கில மொழிகளில் சமகாலம் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும் கவிதைகளும் சமர்ப்பிக்கப்பட்டு கருத்துரைகள் பரிமாறப்பட்டு "பூந்துணர்" (Perceptions) என்னும் நூல் தொகுதிகளாக வெளிவருகின்றன. இத்தகைய பூந்துணர் தொகுதிகள் 2007, 2010, 2012, 2014 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்துள்ளன.

பேராசியர் அவர்கள் ஒரு சிறந்த நடிகனுமாவார். அவர் எழுதித் தயாரித்து நடித்த குறும்படங்களாக "திருக்குறள் தாத்தா", "செல்லாச்சிப்பாட்டி", "தாய்மை" ஆகியவை விளங்குகின்றன.

வாழ்க்கையின் முடிவுரையை எழுதியது போன்று. தனது 89 வயதில் இறப்பு என்னும் ஓய்வில்லத்தை அடைந்துள்ள பேராசிரியர் கோபாலப்பிள்ளை மகாதேவா அவர்கள் சுறுசுறுப்பாக இயங்கி பலதரப்பட்ட சமூகப் பணிகளிலும் இலக்கியப் பணிகளிலும் ஈடுபட்டு தனது இறப்பின் பின்னரும் பேசப்படும் ஒருவராக உள்ளார் என்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

**ஆர். என். லோகேந்திரலிங்கம்**
**தலைவர், உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் - கனடாக் கிளை**

# மரண அறிவித்தல்



**தோற்றம்**
05 - 01 - 1934

**மறைவு**
14 - 01 - 2023

## பேராசிரியர்
# கோபாலப்பிள்ளை மகாதேவா

மட்டுவில் தெற்கு, யாழ்ப்பாணம், இலங்கையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிட மாகவும் கொண்ட பேராசிரியர் கோபாலப்பிள்ளை மகாதேவா கடந்த 14.01.2023 லண்டனில் காலமானார்.

அன்னார் கந்தர் வேலாயுதர் கோபாலப்பிள்ளை மற்றும் இராமநாதர் அப்பா பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், சின்னையா முத்துக்குமாரசாமி மற்றும் தங்கரத்னம் முத்துக்குமாரசாமி (மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற Dr. சீதாதேவி மகாதேவா அவர்களின் அன்புக் கணவரும், செல்வி உமா மகாதேவா, திருமதி உஷா மோரன்,Dr. லவன் மகாதேவா மற்றும் Dr. உலா மகாதேவா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வி.கே. தில்லைநாயகம் மற்றும் காலஞ்சென்ற கே.விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரன், செல்வி அமாலியா மகாதேவா பொன்ரன் மற்றும் செல்வி கமலா மகாதேவா பொன்ரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (05.02.2023) ஞாயிற்றுக்கிழமை லண்டன் நேரப்படி முற்பகல் 11.00 மணி தொடக்கம் மதியம் 12.45 மணிவரை West Chapel, Golders Green Crematorium, 62 Hoop Lane, London, NW11 7NL, UK அந்திய சேவையில் இடம்பெறும்.

நிகழ்நேர ஒளிபரப்புக்கான இணைப்பு
https://watch.obitus.com
username : gohi9569 password : 914859

தகவல்:
**Dr.உலா மகாதேவா**
**(மகள்)**

(22 பக்கத் தொடர்ச்சி)

**பேச்சுவார்த்தையில் இலங்கையில் உள்ள தமிழ்த் தரப்புகளின் பொறுப்புப்பற்றிய தமிழ்ச் சிவில் சமூகத்தவர்களின் கரிசனைகள்**

166. வ. கமவேந்தினி சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
167. சி. கம்சா பெண் சமூக செயற்பாட்டாளர்
168. கனகசபை தேவகடாட்சம் ஓய்வு பெற்ற கிராமசேவையாளர்
169. கனகராஜ் சசிரேகா சட்டத்தரணி
170. கணபதிப்பிள்ளை குமணன் ஊடகவியலாளர்
171. K. காண்டீபன் சிவில் சமூக செயற்பாட்டாளர்
172. சி. காஞ்சனா பெண் சமூக செயற்பாட்டாளர்
173. கந்தையா தவராஜா சட்டத்தரணி
174. கந்தசாமி ஜெயசீலன் குடிமகன்
175. கந்தசாமி ஜெய்சங்கர் சுகாதார பரிசோதகர்
176. கார்த்தி LGBTQI சமூக செயற்பாட்டாளர்
177. கார்த்தி கயன் ஊடகவியலாளர்
178. கார்த்திகா சமூக செயற்பாட்டாளர்
179. கார்திகா சுவேந்திரநாதன் குடிமகன்
180. க. கார்த்தினி பெண் சமூக செயற்பாட்டாளர்
181. காருண்யா சமூக செயற்பாட்டாளர்
182. T. காசேந்திரன் மனித உரிமைச்செயற்பாட்டாளர்
183. கவிதா பெண் சமூக செயற்பாட்டாளர்
184. கவிதா காந்தன் பெண் சமூக செயற்பாட்டாளர்
185. K. கவிவரன் மாணவன்
186. கீதா பெண் சமூக செயற்பாட்டாளர்
187. வி. கேசவன் சிவில் சமூக செயற்பாட்டாளர்
188. சி. கேசவன் குடிமகன்
189. கேஷிகன் இளமுருகநாதன் சமூக செயற்பாட்டாளர்
190. M. கேசிகா பெண் சமூக செயற்பாட்டாளர்
191. கேதீஸ்வரன் பந்தல் உரிமையாளர்
192. கேதிகா சிவில் சமூக செயற்பாட்டாளர்
193. கிருபாகரி பெண் சமூக செயற்பாட்டாளர்
194. கோபாலசிங்கம் கோவூரன் விற்பனை பிரதிநிதி
195. மு. கோமகன் சிவில் சமூக செயற்பாட்டாளர்
196. கி. கோமாவதி பெண் சமூக செயற்பாட்டாளர்
197. கோணமலை மதனகோபி விவசாயி
198. சி. கோணேசலிங்கம் விவசாயி
199. மு. கோவலன் குடிமகன்
200. சி. கௌசலா சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
201. கௌசி LGBTQI சமூக செயற்பாட்டாளர்
202. A. கோயலீலீ பெண் சமூக செயற்பாட்டாளர்
203. T. கிரிசாந்த் குடிமகன்
204. கிருஸ்ணா மணிமாறன் பெண் சமூக செயற்பாட்டாளர்
205. க. குலகௌரி சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
206. கு. குலமணி பெண் சமூக செயற்பாட்டாளர்
207. குழந்தைவேல் ஜெகநீதன் தாதிய உத்தியோகத்தர்
208. குமணன் கணபதிப்பிள்ளை குடிமகன்
209. குமார் சிவில் சமூக செயற்பாட்டாளர்
210. வி. குமாரசாமி எழுத்தாளர்
211. Dr. சி. குமரவேள் வைத்திய அதிகாரி
212. குவேதன் அபிவிருத்தி உத்தியோகத்தர்
213. Dr. பூ. லக்ஷமன் இருதய வைத்திய நிபுணர்
214. லக்ஷனி தேவதாஸ் சட்டத்தரணி
215. லக்சுமி வசந்தன் பெண் சமூக செயற்பாட்டாளர்
216. லலிதா சிவில் சமூக செயற்பாட்டாளர்
217. இ. லலிதாராணி சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
218. லதா சுப்ரமணியம் பெண் சமூக செயற்பாட்டாளர்
219. லாவண்யா துரைரட்ணம் குடிமகன்
220. சி. லெட்சுமிராணி பெண் சமூக செயற்பாட்டாளர்
221. லிங்கராசா தினேஸ் வங்கி அலுவலகர்
222. லோகேந்திரராசா யசு சட்டத்தரணி
223. மகாலக்ஸ்மி குருசாந்தன் பெண் சமூக செயற்பாட்டாளர்
224. K. மகேந்திரன் ஓய்வுபெற்ற அதிபர்
225. மகேந்திரன் நிர்மலா பெண் சமூக செயற்பாட்டாளர்
226. ர. மகிழினிபெண் சமூக செயற்பாட்டாளர்
227. M. மாலினி பெண் சமூக செயற்பாட்டாளர்
228. கு. மல்லிகா சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
229. மாமாங்கம் ஜீவராஜ் தாதியர் உத்தியோகத்தர்
230. மஞ்சு LGBTQI சமூக செயற்பாட்டாளர்
231. S. மஞ்சுளாதேவி பெண் சமூக செயற்பாட்டாளர்
232. M. மங்கை பெண் சமூக செயற்பாட்டாளர்
233. மனோஜ் சமூக செயற்பாட்டாளர்
234. மனோஜ் பிரபாகர் சமூக நலன் விரும்பி
235. மரியாம்பிள்ளை செல்வின், றேனியஸ் சமூக செயற்பாட்டாளர்
236. சி. மரியறோசரி பெண் சமூக செயற்பாட்டாளர்
237. சி. மரியரோசி சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
238. மரியதாஸ் அரியதாஸ் சேவைக்கால ஆலொசகர்
239. மர்லின் வேணுஜா யோசப் எனோசன் குடிமகன்
240. மதன் சிவில் சமூக செயற்பாட்டாளர்
241. கு. மாதவி பெண் சமூக செயற்பாட்டாளர்
242. N. மதிவதன் சட்டத்தரணி
243. ந. மதிவதனி சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
244. கோ. மதுரிக்கா பெண் சமூக செயற்பாட்டாளர்
245. மயிலரசி பெண் சமூக செயற்பாட்டாளர்
246. மயில்வாகனம் திபாகரன் வியாபாரம்
247. மேகராசா திவ்யநாதன் ஆசிரியர்
248. மேனகா பெண் சமூக செயற்பாட்டாளர்
249. மிதுன்ராஜ் சமூக செயற்பாட்டாளர்
250. N. மோகன் சட்டத்தரணி
251. மோகன் சிவில் சமூக செயற்பாட்டாளர்
252. முருகுபிள்ளை கிருபாகரன் சுகாதார பரிசோதகர்
253. முருகுப்பிள்ளை தவயோகராஜா அபிவிருத்தி உத்தியோகத்தர்
254. முத்துலிங்கம் ஜனனன் பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்
255. முத்துலிங்கம் புலேந்திரகுமார் மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்
256. K. மைதிலி பெண் சமூக செயற்பாட்டாளர்
257. நடராஜா கிருஷ்ணமூர்த்தி நிர்வாக உதவியாளர்
258. நடராஜா சிவரஞ்சித் சட்டத்தரணி
259. நாகையா சிவில் சமூக செயற்பாட்டாளர்
260. நாகலிங்கம் புஸ்பராஜ் தாதிய உத்தியோகத்தர்
261. நாகராஜ் குபேந்திரன் குடிமகன்
262. பி. நளினா சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
263. சே. நளினா பெண் சமூக செயற்பாட்டாளர்
264. நல்லதம்பி புஸ்பராஜா குடிமகன்
265. நல்லையா வினோதன் அபிவிருத்தி உத்தியோகத்தர்
266. நந்தினி சிவில் சமூக செயற்பாட்டாளர்
267. நர்சிக்கன் சிவில் சமூக செயற்பாட்டாளர்
268. நவலக்சன் மாணவன்
269. ந. நவபிரேமவாணிதன்னார்வலர்
270. நவரெத்தினம் கமலதாஸன் சட்டத்தரணி
271. நவரத்தினம் நந்தரூபன் பொறியியலாளர்
272. நவரெட்ணம் தமிழினியன் சட்டத்தரணி
273. வி. நவீன் சமூகப் பிராணி
274. ச. நிகலா சமூக செயற்பாட்டாளர்
275. நிலாந்தன் பத்தி எழுத்தாளர்
276. V. S. நிறைஞ்சன் சட்டத்தரணி
277. நிறஞ்சினி உள வள ஆலோசகர்
278. ம. நிர்மலாபெண் சமூக செயற்பாட்டாளர்
279. நிர்மலன் வீடியோ தொகுப்பாளர்
280. நிரோஜன் சிவில் சமூக செயற்பாட்டாளர்
281. வி. நிரோஜினி பெண் சமூக செயற்பாட்டாளர்
282. கு. நிருபன் சமூக செயற்பாட்டாளர்
283. நிசா LGBTQI சமூக செயற்பாட்டாளர்
284. ர. நிஷா பெண் சமூக செயற்பாட்டாளர்
285. நிசாந்தன் சமூக செயற்பாட்டாளர்
286. S. G. நிஷாந்தினி குடிமகன்
287. நிசாந்தி பிரமோத்யா குடிமகன்
288. அ. நித்தியா பெண் சமூக செயற்பாட்டாளர்
289. ஜீ. நித்தியகலா பெண் சமூக செயற்பாட்டாளர்
290. நிதுஷா சிறுவர் கழகம்
291. பாலிப்போடி உதயகுமார் ஆதிபர்
292. பரமேஸ்வரி தியாகம் பெண் சமூக செயற்பாட்டாளர்
293. பார்வதி மாரிமுத்து பெண் சமூக செயற்பாட்டாளர்
294. பத்திநாதன் மரிய சுலோஜன் சட்டத்தரணி
295. பத்திநாதர் அன்டன் புனிதநாயகம் சட்டத்தரணி
296. பத்மநாதன் செய்தி வாசிப்பாளர்
297. பா. பத்மாதேவி சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
298. Y. M. பட்றிக் பிரதீபன் வியாபாரம்
299. போல் அருள் வந்தனா பெண் சமூக செயற்பாட்டாளர்
300. M. போல்ராஜ் மாணவன்
301. செ. பவளவள்ளி அரசியல் கைதியின் தாய்
302. D. பவிகரன் மாணவன்
303. போர்ள் தர்ஷா பெஞ்சமின் சட்டத்தரணி
304. க. பிரதீபன் சமூக செயற்பாட்டாளர்
305. K. பிரதீபன் ஆசிரியர்
306. T. பிரசாந்தராஜ் சமூக செயற்பாட்டாளா
307. பிரதாப் சமூக செயற்பாட்டாளர்
308. சு. பிரவீன் காப்புறுதி நிறுவனம்
309. பிரீடா சமூக செயற்பாட்டாளர்
310. ப்ரீத்தா உமாபாலன் சமூக செயற்பாட்டாளர்
311. Dr.R. பிரேமகிருஸ்ணா உணர்வழியியல் வைத்திய நிபுணர்
312. ர. பிறேமளா பெண் சமூக செயற்பாட்டாளர்
313. பே. பிரேம்நாத் சட்டத்தரணி
314. பிரியா LGBTQI சமூக செயற்பாட்டாளர்
315. பிரியா ஆசிரியர்
316. அ. பிரியங்கா பெண் சமூக செயற்பாட்டாளர்
317. வே. பிரியசகானுஜன் சமூக செயற்பாட்டாளர்
318. புள்ளநாயகம் சந்திரசேகரன் சமூக செயற்பாட்டாளர்
319. புனிதசுந்தரம் சிவபிரியன் அலுவலக உதவியாளர்
320. புஷ்பமலர் பெண் சமூக செயற்பாட்டாளர்
321. புஸ்பவள்ளி வீரையா பெண் சமூக செயற்பாட்டாளர்
322. வி. புவிதரன் ஜனாதிபதி சட்டத்தரணி
323. றேச்சள் சகாயநாதன் சட்டத்தரணி
324. ரகிவன் சிவில் சமூக செயற்பாட்டாளர்
325. கா. ராகினி பெண் சமூக செயற்பாட்டாளர்
326. சி. ரகுந்தினி பெண் சமூக செயற்பாட்டாளர்
327. ராஜன் மின் இணைப்பாளர்
328. கெ. ராஜவதி பெண் சமூக செயற்பாட்டாளர்
329. இராஜேந்திரன் ஆதீஷன் சமூக செயற்பாட்டாளர்
330. திருமதி. ஊ. ராஜேஸ்வரன் மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர்
331. சு. ராஜேஸ்வரன் சமூக ஆர்வலர்
332. டீ. றாஜி பெண் சமூக செயற்பாட்டாளர்
333. S. றாஜினி பெண் சமூக செயற்பாட்டாளர்
334. பி. றஜித்தா பெண் சமூக செயற்பாட்டாளர்
335. ராஜ்குமார் சஜிந்தன் குடிமகன்
336. S. ராஜு வியாபாரம்
337. ரா. ராகினி சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
338. ர. றகிதா பெண் சமூக செயற்பாட்டாளர்
339. S. ராம் மாணவன்
340. சு. ரமேஸ் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்
341. த. ரமேஷ் அதிபர்
342. ரம்யா விஜயகுமரன் கிழக்கு பல்கலைக்கழகம்
343. ரங்கநாயகி பரமசிவம் பெண் சமூக செயற்பாட்டாளர்
344. ர. ரணிபா பெண் சமூக செயற்பாட்டாளர்
345. ஊ. ரணிதா ஞானராஜ் சட்டத்தரணி
346. க. றஞ்சினி பெண் சமூக செயற்பாட்டாளர்
347. A. றஞ்சினிபெண் சமூக செயற்பாட்டாளர்
348. ஜெ. ரஞ்சினி பெண் சமூக செயற்பாட்டாளர்
349. இரஞ்சினிதேவி பெண் சமூக செயற்பாட்டாளர்
350. இராசையா ,ஸங்குமரன் சட்டத்தரணி
351. ராசலிங்கம் விக்னேஸ்வரன் செயற்பாட்டாளர்
352. இரத்தினலீலா பெண் சமூக செயற்பாட்டாளர்
353. பா. இரத்தினேஸ்வரி பெண் சமூக செயற்பாட்டாளர்
354. K.S. ரட்ணவேல் சட்டத்தரணி
355. இ. ரவீந்திரன் கணித ஆசிரியர்
356. ரவிராஜ் ரமணா சட்டத்தரணி
357. த. இரவிவர்மன் சிரேஷ்ட ஊடகவியலாளர்
358. றீனா பெண் சமூக செயற்பாட்டாளர்
359. வே. ரெமோன் முகாமைத்துவ உதவியாளர்
360. ஜெ. றோபிதா பெண் சமூக செயற்பாட்டாளர்
361. T. றோகன்மாணவன்
362. சு. றோமியா பெண் சமூக செயற்பாட்டாளர்
363. றொசாணி LGBTQI சமூக செயற்பாட்டாளர்
364. சு. ரூபா பெண் சமூக செயற்பாட்டாளர்
365. க. ரூபதி பெண் சமூக செயற்பாட்டாளர்
366. அ. ருவனியா பெண் சமூக செயற்பாட்டாளர்
367. சபாரெத்தினம் சிவயோகநாதன் குடிமகன்
368. சைலா பெண் சமூக செயற்பாட்டாளர்
369. ம. சைலா பெண் சமூக செயற்பாட்டாளர்
370. சஜி டுபுடீவுஞஜ சமூக செயற்பாட்டாளர்
371. K. சங்கமதி பெண் சமூக செயற்பாட்டாளர்
372. சங்கீத் பெண் சமூக செயற்பாட்டாளர்
373. வி. சங்கீதா பெண் சமூக செயற்பாட்டாளர்
374. சஞ்சிகா திருச்சபேசன் ஆசிரியர்
375. சந்ததேவி பெண் சமூக செயற்பாட்டாளர்
376. கி. சாந்தாதேவி சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
377. சி. சரஸ்வதி பெண் சமூக செயற்பாட்டாளர்
378. சரஸ்வதி செல்வராஜ் பெண் சமூக செயற்பாட்டாளர்
379. சரோஜா பெண் சமூக செயற்பாட்டாளர்
380. செ. சசிகாந் ஆசிரியர்
381. S. சசிகுமார் ஆசிரியர்
382. ப. சசிஸ்காந்த் சமூக செயற்பாட்டாளர்
383. S. சசிதரன்ஆசிரியர்
384. சதியா தவச்செல்வன் குடிமகன்
385. சீனித்தம்பி ஜெயக்குமார் ஓய்வு பெற்ற அதிபர்
386. சீதாராமன் பாடகர்
387. செலஷ்டா சமூக செயற்பாட்டாளர்
388. செலின்ரா சமூக செயற்பாட்டாளர்
389. செல்வநாயகம் அரவிந்தன் / ஆனந்தவர்ணன் சமூக செயற்பாட்டாளர்
390. செல்வநாயகம் ரவிசாந் ஊடகவியலாளர்
391. ஸெல்வநாயகம் கிரிசாந் ஊடகவியலாளர்
392. செல்வராசா சமூக செயற்பாட்டாளர்
393. த. செல்வி சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
394. பா. செந்தில்குமரன் குடிமகன்
395. ஷாஜினி இரவிச்சந்திரன் சமூக செயற்பாட்டாளர்
396. ர. சாளினி பெண் சமூக செயற்பாட்டாளர்
397. திருமதி. ச. சண்முகநாதன் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்
398. சண்முகநாதன் ஜெயறொஸ்மன் கேதீஸ் குடிமகன்
399. அ. சர்மிளா சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
400. ம. சர்மிளாபெண் சமூக செயற்பாட்டாளர்
401. S. சியாம் சமூக செயற்பாட்டாளர்
402. ஷோபனா பெண் சமூக செயற்பாட்டாளர்
403. பொ. ந. சிங்கம் சமூக செயற்பாட்டாளர்
404. சின்னத்துரை ஜெகன் சட்டத்தரணி
405. சின்னத்தம்பி திருநவன் சுகாதார பரிசோதகர்
406. சிந்து பெண் சமூக செயற்பாட்டாளர்
407. சிந்துஜா சமூக விரும்பி
408. பி. சிந்துஜா பெண் சமூக செயற்பாட்டாளர்
409. சிந்துஜா மகேஸ்வரன் சமூக செயற்பாட்டாளர்
410. T. சிந்துஜன் ஆசிரியர்
411. ப. சிந்துஜன் சமூக செயற்பாட்டாளர்
412. சிவாஜினி பெண் சமூக செயற்பாட்டாளர்
413. சிவகஜன் சட்டத்துறை மாணவன்
414. க. சிவகலா பெண் சமூக செயற்பாட்டாளர்
415. சி. சிவகாந்தன் விரிவுரையாளர் கலைப் பீடம்
416. சிவம் பிரபா சமூக செயற்பாட்டாளர்
417. க. சிவமங்கை சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
418. சிவானந்தராஜா குடிமகன்
419. Dr. சி. சிவன்சுதன் பொது வைத்திய நிபுணர்
420. த. சிவரூபன் சமூக செயற்பாட்டாளர்
421. சிவசங்கீர்த்தன் சமூக செயற்பாட்டாளர்
422. சி. சியாழினி பெண் சமூக செயற்பாட்டாளர்
423. நி. சியானாநியாஸ் சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
424. வ. சோபிதா பெண் சமூக செயற்பாட்டாளர்
425. S. சோதிநாயகம் முகாமையாளர்
426. A. சௌந்தரராஜா சட்டத்தரணி

(தொடர்ச்சி 29 பக்கம்)

மலேசிய மடல்

# படைவீட்டு அரசு தொடந்திருந்தால் சைவ சமயம் இன்னும் செழித்திருக்கும் - தமிழ்மகன்



நக்கீரன்

**கோ**லாலம்பூர், ஜன.26:

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் நடைபெற்ற படைவீட்டு அரசு, தொடர்ந்து நிலைபெற்றிருந்தால், சிவனியத்தை ஆதாரமாகக் கொண்ட சைவ சமயம் இன்னும் செழித்திருக்கும் என்று தமிழகத்தைச் சேர்ந்த பன்முக இலக்கியப் படைப்பாளர் தமிழ்மகன் தெரிவித்தார்.



தேசிய நில நிதி கூட்டுறவு சங்க டான்ஸ்ரீ கே.ஆர். சோமா மொழி-இலக்கிய அறவாரியத்தின் 6-ஆவது பன்னாட்டு புத்தகப் பரிசுப் போட்டியில் 10ஆயிர டாலர் பணப் பரிசை வென்றவர், பா.வெங்கடேசன் என்னும் இயற்பெயரைக் கொண்ட தமிழ்மகன்.

உட்பகை, சகோதர சண்டை, பொறாமை, வெற்றுப் பெருமை உள்ளிட்ட காரணங்களால் அடிக்கடி தங்களுக்குள் போரிட்டுக் கொண்ட தமிழ் மன்னர்களான சேர-சோழ-பாண்டிய மன்னர்களின் ஆட்சி முடிவுக்கு வந்த காலக்கட்டத்தில், டில்லியை மையமாகக் கொண்ட மொகலாயர் ஆட்சி, வடக்கிலிருந்து தென்பகுதிக்கும் பரவ ஆரம்பித்தது.

அதேவேளை, மராட்டியர்கள், பல்லவர்கள், விஜய நகரப் பேரரசினர் உள்ளிட்டவர்களின் அதிகார கரங்களும் தமிழகத்தை ஆக்கிரமித்தன.


இடையில், ஆற்காட்டுப் பகுதி உள்ளிட்ட வடதமிழகத்தில் திருவண்ணா-மலையை ஒட்டிய ஆரணி நகரை மையமாகக் கொண்ட படைவீட்டு அரசு சம்புவராய மன்னர்களால் உருவாக்கப்பட்டது. இந்த மன்னர்கள், சைவ சமயத்தை மிகவும் போற்றி வளர்த்தனர் என்றும் பிற சமயங்களான பௌத்த, சமண மதங்களுக்கும் மதிப்பளித்தனர்.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் உருவான இந்த அரசின்மீது புதுடில்லி சுல்தான்களின் படை போர்தொடுத்தது. டில்லி மொகலாய சாம்ராஜ்யத்தில் ஒரு கட்டத்தில் தலைமை இடைவெளி ஏற்பட்டது.

அப்பொழுது அடிமை வம்சம் என்னும் கில்ஜி பரம்பரை உருவானது, ஏறக்குறைய இந்தக் கட்டத்தில்தான் அலாவுதீன் கில்ஜியும் அவரின் படைத் தளபதி மாலிக் காபூரும் தென்னிந்தியாமீது கவனத்தைத் திருப்பியபோது பாதிப்பிற்கு ஆளானது படைவீட்டு அரச் இந்த இருவரும் மடிந்தபின், மீண்டும் புதுடில்லி சுல்தானகத்தில் ஒரு தொய்வு நிலை உருவானது.

அதுவரை தென்னகத்தில் அடங்கி இருந்த பாமினி ஆட்சியாளர்களும் விஜயநகரப் பேரரசு ஆட்சியாளர்களும் மீண்டும் தலையெடுத்ததுடன், சுற்றியிருந்த சிற்றரசுகளின்மீது தாக்குதலும் மேற்கொண்டனர். குறிப்பாக, விஜயநகரப் பேரரசின் தெலுங்கு மன்னர்கள் படைவீட்டு அரசின்மீது மூர்க்கமாக தாக்குதல் தொடுத்தனர்.

பெரும் படைவலிமை கொண்ட டில்லி சுல்தான்களையும் விஜய நகர ஆட்சியாளர்களையும் எதிர்கொள்ள முடியாமல் சம்புவராய அரசர்கள் திணறி பின்வாங்கிய நேரத்தில், படைவீட்டு அரசைச் சுற்றிலும் இருந்த வானவ கோராயர்கள், பழவேட்டரையர்கள், மலையமான்கள், அதியமான்கள் உள்ளிட தமிழ் குறுநில மன்னர்களும் சிற்றரசர்களும் சம்புவராய அரசர்களுக்கு உதவிபுரிய வில்லை மாறாக, காழ்ப்பும் வெறுப்பும் கொண்டு ஒதுங்கி நின்றனர்.




இத்தகைய காரணங்களால், படைவீட்டு அரசு வீழ நேரிட்டது.

இத்தகைய வரலாற்று சம்பவங்களைத் தொகுத்துதான் படைவீடு என்னும் பெயரில் வரலாற்று நாவலாக கடந்த 2020-இல் தமிழ்மகன் வெளியிட்டார். அந்தப் படைப்புதான் டான்ஸ்ரீ சோமா மொழி-இலக்கிய அறவாரியத்தின் 6-ஆவது பன்னாட்டு புத்தகப் பரிசையும் கேடயத்தையும் வென்றது.

இந்தப் படைவீடு நாவல் குறித்து கருத்து தெரிவித்த தமிழ்மகன், உலகாளும் நாயகனும் பரம்பொருளுமான சிவனையும் அன்னை உமையவள் பார்வதியையும் "அம்மையே - அப்பா" என்று ஒருசேர போற்றும் சிவநெறிக் கொள்கையை, தங்களின் சமய நெறியாகக் கொண்டு சம்புவராயர்கள் வாழ்ந்தனர் என்று தெரிவித்தார்.

சம்புவராயர்களின் படைவீட்டரசு அந்நியர்களின் படையெடுப்பிற்கு ஆளாகாமல், இன்னும் நிலைத்திருந்தால் சைவ சமயம் இன்னும் பேரளவில் செழித்திருக்கும் என்றும் தமிழ்மகன் தெரிவித்தார்.

30 ஆண்டுகளுக்கும் மேலாக, இதழியல் துறையில் பணியாற்றிவரும் இவர், ஆனந்த விகடன், ஜூனியர் விகடன், குங்குமம், குமுதம், தின மணி உள்ளிட்ட பருவ - நாளிதழ்களில் பணியாற்றியவர். சிறந்த நாவலுக்காகவும் சிறந்த சிறுகதைத் தொகுப்புக்காகவும் தமிழ்நாட்டு அரசின் விருதுகளை இரண்டு முறை பெற்றுள்ள இவர், 15-க்கும் மேற்பட்ட நூல்களையும் அதிகமான கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

தமிழ் இலக்கிய உலகில் சிறந்த படைப்பாளியாகத் திகழும் இவரின் பெயர், மலேசிய தேசிய நில நிதி கூட்டுறவு சங்கத்தின் டான்ஸ்ரீ கே.ஆர். சோமா மொழி இலக்கிய அறவாரிய வரலாற்றிலும் இடம்பெற்றதன்வழி, பன்னாட்டுத் தமிழர்களின் கவனத்தையும் பெற்றுள்ளார்.

**நக்கீரன் -** Nakkeeran 013-244 36 24



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# இவ்வார ராசிபலன்

**27-01-2023 வெள்ளி தொடக்கம் 02-02-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** பணவரவு தரும் வாரம். பெரியோர்களின் ஆதரவு பெருகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். விவசாயத்தில் கவனம் தேவை. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பண விரயம் உண்டு. புதிய சிந்தனை உருவாகும். கலையார்வம் கூடும். கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். காரியத்தடை அகலும். சிறப்புக்கள் சேரும். பொறுப்புக்கள் கூடும். திருமுனை ஏற்படும். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. விவசாயம் விளைச்சல் தரும். குழந்தைகள் நலனில் அதிக அக்கறை தேவை. இல்லத்தில் மகிழ்ச்சி உண்டு. புத்திரரால் பூரிப்பு உண்டு. போட்டிகள் மறையும். தொல்லைகள் அகலும். வில்லங்கம் விலகும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். நல்லவர் நட்பு கூடி வரும். பொருள் சேர்க்கையுண்டு. வரவுகள் மிகுதியாகும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். காலணிகள் காணாமல் போகும். புதிய பொருள் சேரும். காதல் எண்ணம் உருவாகும். உடல் சோர்வு ஏற்படும். கடன் பிரச்சனைத் தீரும். பணியில் நிரந்தரம் உண்டாகும். புதிய நட்பினால் பலன் உண்டு. பாசம் அதிகரிக்கும். தொழில் முன்னேற்றம் அடைவீர். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். கணவன், மனைவி இடையே நல்ல உறவு ஏற்படும். உடல் நோயிலிருந்து விடுதலையாவீர்கள். உடல் பொலிவு கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வினைதீர்க்கும் பிள்ளையார்
அதிர்ஷ்ட எண்: 4,2,1,7, அதிர்ஷ்ட நிறம்: கருநீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,K




**ரிஷபம்:** புத்துணர்வோடு செயல்படும் வாரம். உஷ்ண நோய் வந்து நீங்கும். பொருளாதார உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். வெற்றி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. கல்விச் செலவு உண்டு. உறவினர் வருகை ஏற்படும். உலோகத்தொழில் உயர்வு தரும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். முடிவுகள் சாதகமாகும். கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. பணவரவு தாமதமாகும். பாராட்டு பெருகும். உடல்சோர்வு நீங்கும். சந்தர்ப சாதகம் உண்டு. உத்யோகம் உயர்வு தரும். வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுபகாரியம் கைகூடும். சந்தோஷம் பெருகும். மாணவர் பாராட்டு பெறுவர். அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். கற்பனை ஆற்றல் பெருகும். உண்மைகள் வெளிப்படும். கன்னிப்பெண்களிடம் கவனம் தேவை. பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமைகள் சேரும். இயந்திர பணியில் நிதானம் தேவை. சொல்லில் கவனம் தேவை. விபரீத போக்கு மாறும். சிக்கனத்தை கையாள வேண்டும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வீடு வாங்கும் யோகம் உண்டு. திட்டங்கள் நிறைவேறும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 9,5,7,2
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,N




**மிதுனம்:** அதிர்ஷ்ட வாய்ப்புகள் வரும் வாரம். வரவுகள் அதிகரிக்கும். குடும்ப உறவு பலப்படும். பெண்களால் பெருமை சேரும். வணிகத்தொழில் விரிவடையும். விவேகம் அதிகரிக்கும். வேற்று இன நட்பு கிட்டும். மாற்றுத்தொழில் உருவாகும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். கல்வி தடை ஏற்படும். உத்தியோகம் உன்னதம் தரும். நூதன முயற்சி தடைப்படும். வாகன மாற்றம் ஏற்படும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும். காதல் இனிக்கும். சொத்துப் பிரச்சனை தீர்வு ஏற்படும். எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். தாய் வழி உறவு லாபம் தரும். குடும்ப அன்யோன்யம் பெருகும். எதிலும் எச்சரிக்கை தேவை. அரசாங்க அனுகூலம் கூடும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். புது நண்பரால் அதிகப் பலன் உண்டாகும். சுபச்செய்தி கூடி வரும். விவசாயம் லாபம் தரும். நிதி நிலைமை சீராகும். தோற்றப் பொலிவு கூடும். கைப்பொருள் களவு போகும். பூர்வீகச் சொத்து சேரும். தொழில் வளர்ச்சி கூடும். உத்தியோகத்தில் தளர்வு ஏற்படும். புதிய தொழில் அமையும். உடல்சோர்வு ஏற்படும். உணவு பிரியம் அதிகரிக்கும். முகப்பொலிவு கூடும். உடல் நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள். சமூக சேவை செய்ய முன்வருவீர்கள். மருத்துவத்துறையில் ஆர்வம் கொள்வீர்கள். வாய்ச்சொல் பலன் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வரதராஜப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 5,3,1,2
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**கடகம்:** மங்களகரமான வாரம். மெத்தனப் போக்கு விலகும். பயணம் அனுகூலம் தரும். கலை ஈடுபாடு கூடும். விருந்தினர் வருகை உண்டு. தொழில் லாபம் தரும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மனோ தைரியம் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். உடல்நலத்தில் கவனம் தேவை. பாதகமான சூழ்நிலை விலகும். சோதனை நீங்கி சாதனையான காலம் வரும். ஞாபக மறதி ஏற்படும். திடீர் லாபம் உண்டு. மனக்குழப்பம் நீங்கும். மற்றவர் உதவி கிட்டும். புதிய நட்பு உருவாகும். திட்டம் வெற்றி பெறும். தகுதிகள் உயரும். கவலைகள் ஒழியும். புதிய எண்ணம் உருவாகும். கடன் பிரச்சனை அகலும். சுபச்செலவு அதிகரிக்கும். நண்பர்களால் உதவி உண்டு. அரசு வழி ஆதாயம் உண்டு. விவசாயம் பலன் தரும். புதிய நட்பு ஏற்படும். திறமைகள் வெளிப்படும். கமி'ன் தொழில் லாபம் தரும். குடும்ப கௌரவம் உயரும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். புகழ் கூடும். காரியத்தடை அகலும். கூட்டுத்தொழில் திருப்தி தரும். அந்தஸ்து உயரும். உடல்நலம் சீராகும். விளையாட்டுத்துறையில் வெற்றிக் கிட்டும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். பேச்சில் இனிமை கூடும். திறமையால் பெருமை சேரும். பழைய கடன் வசூலாகும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 3,8,1,9
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,Z




**சிம்மம்:** உதவிகள் கிடைக்கும் வாரம். வெளிநாட்டுப் பயணம் உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உண்டாகும். சொத்துச் சேர்க்கையுண்டு. குடும்ப ஒற்றுமை மேலோங்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. உறவினர்கள் வருகை ஏற்படும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். வழக்கு வெற்றி தரும். வீடு, மனை யோகம் உண்டு. எதிரிகள் பலம் குறையும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவுக்கு வரும். பதவி உயர்வு வரும். வர்த்தக தொழில் லாபம் தரும். மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். புதிய முயற்சியில் கவனம் தேவை. முன் கோபத்தை குறைக்கவும். காரிய வெற்றி உண்டு. கலைத்துறை முன்னேற்றம் உண்டு. குடும்ப ஒற்றுமை பலப்படும். உடல்நலம் திருப்தி தரும். திருமண வாய்ப்பு கூடி வரும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். அரசு வகையில் அனுகூலம் உண்டு. பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். தன வரவுகள் தடைப்படும். புகழும், பொருளும் பெருகும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லைத் தந்தவர் விலகிவிடுவர்.
வழிபட வேண்டிய தெய்வம்: மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 2,7,6,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,B



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**கன்னி:** சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டிய வாரம். ஆனந்தம் குடிகொள்ளும். அணிகலன் ஆர்வம் கூடும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோக உயர்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். தனம் சேரும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். எதிரிகளால் ஏற்றம் கிட்டும். பொதுவாழ்வில் புகழ் கூடும். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் நன்மை பயக்கும். பெண்களின் ஆலோசனை பெருமை சேரும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். உற்சாகம் களைகட்டும். உறவினர் வருகை உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். சொந்த தொழிலில் உயர்வு கிட்டும். பணிவும், துணிவும் கூடும். க்'ட காலம் மறையும். வாகன மாற்றம் உண்டாகும். மறைமுக எதிர்ப்பு வலுக்கும். பயணங்களால் இடையூறு ஏற்பட்டு சரியாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். வசந்தம் தேடி வரும். மேன்மைகள் தொடரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பல்லவ கணபதி, அதிர்ஷ்ட எண்: 6,4,3,7
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,H




**துலாம்:** கனமான லாபம் கிடைக்கும் வாரம். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். பூர்வீகச் சொத்து கிடைக்கும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். காரிய தடை விலகும். திருஷ்டிகள் ஒழியும். பணவரவு திருப்தி தரும். பேச்சில் நிதானம் தேவை. பெற்றோர்கள் ஆலோசனை பலன் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பிரிந்த தம்பதியினர் ஒன்று சேருவர். நண்பர்களால் ஏற்றம் உண்டு. சுயத்தொழிலில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் கூடும். பழையக் கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். கடன் சுமை குறையும். விபரீத போக்கு மறையும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். உறவினர் வருகை உற்சாகம் தரும். பிரச்சனைகள் அகலும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். பாராட்டுக்கள் உயரும். பயணம் அனுகூலம் தரும். வெளிநாட்டு நபரால் வெகுமதி உண்டு. குதூகலமான மனநிலை காணப்படும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். மன சந்தோஷம் அதிகரிக்கும். கல்வியில் மாணவர்கள் சிறப்பார்கள். மங்களச் செய்தி வரும். செயல் திறமை அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: தன தேவதை, அதிர்ஷ்ட எண்: 7,1,3,5
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,P




**விருச்சிகம்:** தொட்டது துலங்கும் வாரம். தெய்வீகப் பற்று கூடும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். முயற்சிகள் பலன் தரும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். கமிஷன் தொழில் லாபம் தரும். மங்களச் செய்தி வரும். வாகனச் செலவு உண்டு. வாழ்வில் மேன்மை உண்டு. பணவரவு உயரும். செயல்திறமை அதிகமாகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. கட்டிடத்தொழில் லாபம் தரும். திருமண வாய்ப்பு கூடி வரும். தாய், தந்தை உதவி உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு கூடும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தொழில் மேன்மை உண்டு. விவசாயம் பலன் அளிக்கும். வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். தடுமாற்றம் ஏற்படும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். தீர்த்த யாத்திரை உண்டு. திக்கற்ற நிலை மாறும். கனவுகள் நிறைவேறும். பங்குச்சந்தை லாபம் தரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். நல்லோர்களின் நட்பு கிட்டும். போட்டிகள் குறையும். விடாமுயற்சி அவசியம். வெற்றி வீடு தேடி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அலமேலுமங்கை, அதிர்ஷ்ட எண்: 5,4,2,3
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,K




**தனுசு:** தன வரவு பெருகும் வாரம். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். கணவன், மனைவி உறவு சீராகும். இடமாற்றம் உண்டு. கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. தன்னம்பிக்கை கூடும். நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். பிள்ளைகளின் கல்விச் செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமி வாங்கும் யோகம் உண்டு. மருத்துவச் செலவு அதிகரிக்கும். வேண்டும் வரம் கிடைக்கும். உற்சாகம் அலைமோதும். வேலையாட்களிடம் கவனம் தேவை. மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணம் உதயமாகும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்கள் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வெற்றியை எட்டும் காலம். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். கட்டிட தொழிலில் கவனம் தேவை. கற்பனை திறன் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீரங்கநாதர், அதிர்ஷ்ட எண்: 4,3,1,9
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,P




**மகரம்:** முத்தான வாய்ப்புகள் பெருகும் வாரம். தொல்லைகள் விலகும். கமிஷன் தொழில் லாபம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்யம் அதிகரிக்கும். சுறுசுறுப்பு அதிகமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனைவி கௌரவம் உயரும். நன்மைகள் நாடி வரும். வராத கடன் வந்து சேரும். பணவரவு உண்டு. ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு பெருகும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். பேச்சில் நிதானம் தேவை. பயணத்தால் பலன் உண்டு. குழப்பங்கள் அகலும். திடீர் செலவு ஏற்படும். எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. உயர்கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். மங்கள செய்தி வரும். சாதகமான வாய்ப்பு உருவாகும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். அன்னதானம் ஆரோக்கியம் தரும். உடல்நலம் சீராகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீரீமூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 5,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,Y

(தொடர்ச்சி 30 பக்கம்)

# அன்பின் தொனி - 678

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

**பாவ மன்னிப்பும் இரட்சிப்பும்**

**ஒருபால் திருமணம்** - Same sex marriage

இன்று நாம் காண்கிறதும் வாழ்கிறதுமான இந்த உலகத்தைப் படைத்த தேவாதி தேவன், சகல வஸ்த்துக்களையும் படைத்து, கடைசியாக தமது சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்து ஆணும் பெண்ணுமாக உருவாக்கி அவர்கள் பலுகிப் பெருகி, படைப்புகளின் பலவற்றையும் ஆளுகைசெய்யும்படி ஆசீர்வதிதார் என்பதை, பரிசுத்த வேதாகமத்திற்கூடாகப் படிக்கிறோம், அதையே இவ்வுலகில் கடந்துபோன காலங்களுக்கூடாக கண்டும் வருகிறோம். இப்படி ஆணும் பெண்ணு மாகப் படைத்த இருவரையும் கணவன் மனைவி என்ற உறவோடு இசைந்து ஓரே மாமிசாக ஜீவக்க கட்டளையிட்டார். இங்கு தேவன்தாமே முதலாவது திருமண வாழ்க்கையை ஏற்படுத்தினார் என்பதை எந்தவித ஐயமுமின்றி நாம் பரிசுத்த வேதாகமத்தில் காணக்கூடியதாய் இருக்கிறது.

பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக, அவர்கள் சமுத்திரத் தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார், ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.
**- ஆதியாகமம் 1: 26-28**

அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான், அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார். அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள், இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான், அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.
**- ஆதியாகமம் 2: 21-24**

இப்படியாகக் கடவுள் ஏற்படுத்திய திருமண ஏற்பாடும் உறவும், இன்றுவரை சகல தேசத்தினர், சமூகத்தவர், சமயத் தினர், மத்தியிலும் எந்தத் தடையுமின்றி அவரவர் தேசக் கலாச்சார, பாரம்பரிய பண்பாடு, சமய முறைமைகளின்படி நடைபெற்றே வருகின்றன. இந்த நிலையில், அண்மைக் காலங்களில் சத்துருவான பிசாசானவன் குடும்பங்களைப் பிரிக்க, திருமண உறவுகளை நிர்மூலமாக்க, இரகசிக பாவமாக செயற்பட்டுவந்த அருவருப்பான ஆண் ஆணோடும், பெண் பெண்ணோடும் உள்ள உறவுகளை, அவை ஒரு திருமண உறவு என்று பகிரங்கப்படுத்தி செயற்படவும், அவர்கள் ஒன்றாய் ஜீவக்கவும், அநேகரை பல நாடுகளிலும் வஞ்சித்து வருகிறான். அப்படிப்பட்ட பாவத்தில் விழுந்து தொடர்ச்சியாக வாழ்பவர்கள் இன்று ஒன்றுகூடி, தாம் பகிரங்கமாக அப்படி ஜீவப்பதற்காக அதை ஒரு சாதாரண திருமண வாழ்க்கை என்று கூறி, பல அரசாங்கங்களை "ஒரு பால் திருமணம்" (same sex marriage) சட்டபூர் வாக்கப்பட தமக்குள் சங்கங்களையும், ஸ்தாபனங்களையும், இயக்கங்களையும் உருவாக்கிப் பல நாடுகளில் போராட்டங்களையும், பகிரங்க கூட்டங்களையும் நடாத்தி அநேக பொது மக்களிளின் ஆதரவையும் பெற்று, சில தேசங்களில் வெற்றியும் கண்டுள்ளனர். இதைச் சட்டபூர்வமாக அனுமதித்த நாடுகளில் உள்ள சில கிறிஸ்தவ ஆலயங்களும் அதற்கு ஆதர வாக ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் திருமணம் செய்யும் சமய வைபவங்களை ஆலயங்களில் தமது ஊழியக் காரரால் நடப்பித்தும் வருகிறார்கள். அது மட்டுமல்ல, சில ஊழியக்காரரும் அப்படியான திருமணத்தை "ஒரு பால்" திருமணத்தை தாங்களே செய்தும் ஜீவிக்கிறார்கள். எவ்வளவு அருவருப்பும், அலங்கோலமும், அசிங்கமும், வெறுக்க வேண்டிய பாவமும் என்பதை அவர்கள் உணராதபடி பிசாசானவன் அவர்களை வஞ்சித்துவிட்டான். இரகசிக பாவ மாக பல மக்கள் மத்தியிலே பல ஆண்டுகளாக செயற்பட்டு வந்த இந்த ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் ஆனவர்களுடைய தகாத உறவு, இன்று பகிரங்கமாகவும், சட்டபூர்வமாகவும் ஆக்கப்பட்டு, சில கிறிஸ்தவ சபைகளும் அதை அங்கிகரித்து, "திருமணம்" என்ற கனமுள்ள உறவை கனவீனப்படுத்தி, அசுசிப்படுத்தி செயற்படுவதற்குக் காரணம், தேவ சத்தியத்தை சரிவரப் புரிந்துகொள்ளாததே முக்கிய காரணம். அதைத்தான் பரிசுத்த வேதாகமம் விபரித்துச் சொல்லுகிறது.

சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோ தமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது, தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எப்படியென்றால், காணப்ப டாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும், ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை. அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்த னைகளினாலே வீணரானார்கள், உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானி களென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்.
**- ரோமர் 1: 18-23**

***தொடரும்...***

---

*(26 பக்கத் தொடர்ச்சி)*

## *பேச்சுவார்த்தையில் இலங்கையில் உள்ள தமிழ்த் தரப்புகளின் பொறுப்புப்பற்றிய தமிழ்ச் சிவில் சமூகத்தவர்களின் கரிசனைகள்*

---

427. Dr. A. சரவணபவன் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடம்
428. சிறிபாலன் ஜென்சிகுடிமகன்
429. ஸ்ரீதேவி மங்கலம் பெண் சமூக செயற்பாட்டாளர்
430. ஸ்ரீநாகரூபன் பதுஜன் குடிமகன்
431. சிறிசரவணபவன் தினேஸ்குமார் ஆசிரியர்
432. Dr. வி. சிறீதரன் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடம்
433. T. சுபா பெண் சமூக செயற்பாட்டாளர்
434. ப. சுபேதினி சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
435. சுப்ரமணியம் சுரேஸ்குமார் ஆசிரியர்
436. சு. சுகன்யா பெண் சமூக செயற்பாட்டாளர்
437. சுஜீவன் மென் பொருள் உற்பத்தியாளர்
438. சுஜிவன் தர்மரெத்தினம் செயற்பாட்டாளர்
439. K. சுஜி சமூக செயற்பாட்டாளர்
440. சுஜித் பணியாளர்
441. அ. சுஜித்ரா சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
442. சி. சுகிலதா பெண் சமூக செயற்பாட்டாளர்
443. சி. சுலோசனா பெண் சமூக செயற்பாட்டாளர்
444. சு. சுலோசனா பெண் சமூக செயற்பாட்டாளர்
445. றி. சுமலதா பெண் சமூக செயற்பாட்டாளர்
446. அ. சுமதி பெண் சமூக செயற்பாட்டாளர்
447. ம. சுமாவதி பெண் சமூக செயற்பாட்டாளர்
448. சுந்தரலிங்கம் நிலானி சட்டத்தரணி
449. S. சுரேஸ் ஆசிரியர்
450. Dr. கு. சுரேஸ்குமார் பெண்நோயியல் மகப்பேற்று வைத்திய நிபுணர்
451. ச. சுரேஸ்குமார் சமூக செயற்பாட்டாளர்
452. சுசிலா கதிரேசன் பெண் சமூக செயற்பாட்டாளர்
453. சுசீந்திரன் ஓய்வு பெற்ற பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி
454. இ. சுதா LGBTQI சமூக செயற்பாட்டாளர்
455. சுதாகர் சமூக செயற்பாட்டாளர்
456. அ. சுதாகரி சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
457. சுதன் மாணவன்
458. சுதந்தினி சமூக செயற்பாட்டாளர்
459. வி. சுதர்சினி பெண் சமூக செயற்பாட்டாளர்
460. சுவேனி சமூக செயற்பாட்டாளர்
461. பா. சுவேந்தினி பெண் சமூக செயற்பாட்டாளர்
462. தாட்சாயினி பெண் சமூக செயற்பாட்டாளர்
463. தம்பிப்போடி சீதா ஸ்ரீ பல்கலைக்கழக மாணவி
464. B.N. தம்பு சட்டத்தரணி
465. தமிழினி சுரேந்ரன் குடிமகன்
466. தமிழ்ச்செல்வி விஜயரெட்ணம் விஞ்ஞான ஆசிரியர்
467. J. தனலட்சுமி பெண் சமூக செயற்பாட்டாளர்
468. தங்கமலர் பெண் சமூக செயற்பாட்டாளர்
469. பு. தங்கராணி பெண் சமூக செயற்பாட்டாளர்
470. தங்கவடிவேல் கஜந்தினி குடிமகன்
471. S. தனிக்குமார் சட்டத்தரணி
472. பி. தன்சியா பெண் சமூக செயற்பாட்டாளர்
473. தனுசன் மென்பொருள் பொறியியலாளர்
474. தர்மலிங்கம் கணேஸ் குடிமகன்
475. தர்மரெத்தினம் சுஜீவன் இளம் செயற்பாட்டாளர்
476. தர்மினி பெண் சமூக செயற்பாட்டாளர்
477. சு. தர்சன் மாணவன்
478. பா. தர்சிகா பெண் சமூக செயற்பாட்டாளர்
479. கி. தர்சிகா பெண் சமூக செயற்பாட்டாளர்
480. யூ. தர்சினி பெண் சமூக செயற்பாட்டாளர்
481. தர்சினி சமூக செயற்பாட்டாளர்
482. Dr. T. தவநேசன் வைத்திய அதிகாரி
483. ச. தவறாஜி பெண் சமூக செயற்பாட்டாளர்
484. த. தவயோகன் சமூகப் பிராணி
485. இ. தவேந்தினி பெண் சமூக செயற்பாட்டாளர்
486. தயாளன் குடிமகன்
487. ஜெ. தயாளினி பெண் சமூக செயற்பாட்டாளர்
488. ஜெ. தயாழினி சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
489. இ. தயாபரன் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்
490. தயாபரன் ரதி ஆசிரியர்
491. தெட்சணாமூர்த்தி கங்காதரன் சட்டத்தரணி
492. தெய்வானை அமிர்தலிங்கம் பெண் சமூக செயற்பாட்டாளர்
493. தேனுஜன் சமூக செயற்பாட்டாளர்
494. தேவி LGBTQI சமூக செயற்பாட்டாளர்
495. த. திலகராணி சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
496. திலவதி சமூக செயற்பாட்டாளர்
497. செ. திலீபன் சமூக செயற்பாட்டாளர்
498. திருச்செல்வம் திருஅருள் சட்டத்தரணி
499. M. திசாங்கன் ஸ்டூடியோ
500. திவாகர் சமூக செயற்பாட்டாளர்
501. சு. திவாகரன் குடிமகன்
502. ந. திவ்யதேவி பெண் சமூக செயற்பாட்டாளர்
503. தி. தியாகேஸ்வரி பெண் சமூக செயற்பாட்டாளர்
504. துரைசாமி தினேஸ்வரன் குடிமகன்
505. துஷாரா சமூக செயற்பாட்டாளர்
506. ஏ. துஸ்யந்தன் மாணவன்
507. மா. துவாரகா சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
508. உருத்திரன் உமாதாசன் சட்டத்தரணி
509. ச. உஷா சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
510. வடிவேலுப்பிள்ளை சுரேஷ்குமார் பொதுமகன்
511. வள்ளுவன் விரிவுரையாளர், பொயியியல் பீடம்
512. வாணி சிமோன் குடிமகன்
513. ர. வனிதா பெண் சமூக செயற்பாட்டாளர்
514. வனிதா மகேந்திரன் பெண் சமூக செயற்பாட்டாளர்
515. பி. வனிதாமணி சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
516. ச. வாணி பெண் சமூக செயற்பாட்டாளர்
517. வசந்த கௌரி சமூகப்போராளி
518. வாசுகி ராஜேந்திராசெயற்பாட்டாளர்
519. வேலாயுதம் கனகசபை ஓய்வுபெற்ற அதிபர்
520. சு. விக்கி மாணவன்
521. விக்டோரியா ரோய் பெண் சமூக செயற்பாட்டாளர்
522. கு. ஓ. ளு. விஜயகுமார் சட்டத்தரணி
523. விஜயகுமார் மதிவதனன் விவசாயி
524. இ. விஜயலஷ்சுமி பெண் சமூக செயற்பாட்டாளர்
525. விஜயமலர் பெண் சமூக செயற்பாட்டாளர்
526. விஜயன் தீனதயாளன் சமூக செயற்பாட்டாளர்
527. விஜயநாதன் மேனகன் பல்கலைக்கழக மாணவன்
528. ற. விஜயவாணி சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
529. விஜிதா ஆசிரியர்
530. விஜயகுமாரி கண்ணதாசன் பெண் சமூக செயற்பாட்டாளர்
531. விமல்ராஜ் சமூக செயற்பாட்டாளர்
532. R. வினோதினி பெண் சமூக செயற்பாட்டாளர்
533. A. வினோதினி பெண் சமூக செயற்பாட்டாளர்
534. ம. விர்மகள் சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
535. சி. விஷாளினி சமூக செயற்பாட்டாளர், பெண் உரிமை செயற்பாட்டாளர்
536. விஸ்வநாதன் சஞ்சீவ் வங்கியாளர்
537. விதுசிக்கா சமூக செயற்பாட்டாளர்
538. வின்ஸ்லோ மனித உரிமை செயற்பாட்டாளர்
539. வி. யாழினி பெண் சமூக செயற்பாட்டாளர்
540. யது LGBTQI சமூக செயற்பாட்டாளர்
541. இ. யோகலதா பெண் சமூக செயற்பாட்டாளர்
542. யோகலிங்கம் விஜிதா குடிமகன்
543. யோகானந்தி யோகராசா சட்டத்தரணி
544. யோகராசா நிரோசன் மாணவன்
545. யோகேஸ்வரன் சமூக ஆர்வலர்
546. சி. அ. யோதிலிங்கம் சட்டத்தரணி
547. ப. யூஜின் ஆனந்தராஜ் சட்டத்தரணி
548. வ. நிசாந், சட்டத்தரணி
549. ம. நோயல், சட்டக்கல்லூரி மாணவன்
550. அ. கமிலஸ், ஊடகவியலாளர்
551. அன்ரன் புனிதநாயகம், சட்டத்தரணி

## இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)



**கும்பம்:** சுபிட்சங்கள் பெருகும் வாரம். கல்வியில் கவனம் தேவை. மனை வாங்கும் யோகம் உண்டு. நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். பணவரவு தரும். பாகப்பிரிவினை ஏற்படும். வாகன மாற்றம் உண்டு. புதிய நட்பு ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் மாறும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். அன்னிய தேச பயணம் உண்டு. வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். திருமண தீபம் சுடர்விடும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். அலைபேசியால் அலைச்சல் ஏற்படும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். சகோதர வழியில் கவனம் தேவை. அணிமணிகள் சேரும். விரும்பியது நிறைவேறும். கட்டிட தொழில் ஒப்பந்தங்கள் குவியும். கடன் பாக்கிகள் வசூலாகும். பதற்றம் குறையும். சுறுசுறுப்பு பெருகும். தாய்வழி உறவில் கவனம் தேவை. தொழில் முன்னேற்றம் ஏற்படும். சேமிப்பு பெருகும். திறமைகள் வெளிப்படும். பங்குச்சந்தை லாபம் தரும். மன ஆரோக்கியம் சிறக்கும். தொலைதூரப் பயணம் லாபம் தரும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ சண்டிகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,L



**மீனம்:** நினைவாற்றல் பெருகும் வாரம். மங்கள நிகழ்ச்சியில் பங்கு பெறுவீர்கள். பணமும், பாராட்டும் சேரும். வரன் வாயில் தேடி, வரும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. நல்ல சம்பவங்கள் நடைபெறும். புதிய முயற்சிகளை தள்ளிப்போடவும். விளையாட்டில் கவனம் தேவை. பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். கனவுகள் பலிதமாகும். விலகி சென்றவர் விரும்பி வருவர். மருத்துவச்செலவு குறையும். கனிவான பேச்சு அவசியம். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். பணிச்சுமை குறையும். அடுத்தவர், தலையீட்டை தவிர்க்கவும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். இனம்புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். பிரயாணம் வெற்றி பெரும். மாலை நேரத்தில் மிக கவனத்துடன் இருக்க வேண்டும். வறுமையின் வாட்டம் குறையும். பெண்களால் பெருமை சேரும். தன வரவில் தாமதம் உண்டு. சுபச்செய்தி தேடி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மஹாகணபதி, அதிர்ஷ்ட எண்: 4,3,1,0
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,P

## கடந்தவையும் கடப்பவையும் (43)

**சோக கீதம் ஒற்றே சுப்பிரபாதமாய்
ஆன காலம் நாம் வாழ்ந்த காலம் - அன்று**

**பள்ளிச் சிறுவர் ஆனாலும் கவலையிலிருந்து
தள்ளி இருக்க முடியாது -**

**எந்த இழப்பு ஆனாலும் - அங்கு
சொந்த இழப்பு ஆனதுபோல் சோகம்**

**எப்படி வரும் அப்படியொரு நெருக்கம்
இப்படித்தான் தமக்கும் வந்ததென்று - நல்ல**

**நண்பியவள் சொன்னாள் - அன்று
எங்களிற் பலருக்கும் பழக்கத்திற்குரிய**

**பல கதைகள் இருக்கும் - இதில்
ஒரு கதையாய் அவள் கதையைப் பார்ப்போம்**

**உயர்ந்த கறுத்த மோட்டார் வண்டி - அழகாய்
குனிந்தபடி ஓடிவந்தாராம் ஒருவர்**

**அன்றைய படத்து கதாநாயகன் போல் - கதவது
எந்தவொரு தடையுமின்றி திறபட**

**விரிந்த பரந்த முற்றத்தில் - முன்பு
தெரியாத அவர் வந்து நிற்க - வீட்டுப்**

**பெரியவரால் அறிமுகப் படுத்தப் பட்டாராம்
மரியாதையோடு மாமாவென**

**அளவான புன்சிரிப்பொடு ஆரம்பமானதாம்
அழகான மாமாவின் பழக்கம்**

**கரிய சுருள்முடி கன்னத்தில் கறுப்புக்காய்
பெரிய கண்கள் முத்துப்பற்கள்**

**கழுத்தில் கறுப்புக் கயிறு - அதில்
விழுந்து தொங்கும் வெள்ளைக் குப்பி**

**என்ன அதுவென்று சின்னவர் வினவ
சொன்னால் புரியுமா என்பதுபோல் சிரித்தாராம் - ஆனாலும்**

**சண்டையில் சிலவேளை பிடிபட்டால்
உண்டு உயிர் மாய்க்க என்றாராம்**

**'நல்லவர் நீங்கள் ஏன் சாகவேண்டும்?'
சின்னவர் ஒருநாள் சிரித்தபடி கேட்டனராம் - அதற்கு**

**'கொள்கை இது' என்றே பதில் கூறிமுடித்தாராம்
சின்னவர் என்று அலட்சியமாய் இருக்காது - பின்**

**மாமாவில் அன்பொடு மரியாதையும்
மளமளவென வளரவே அன்றொருநாள்**

**ஓட்டியாய் அவரும் மாட்டிக் கொண்டாராம்
மூர்த்தவர் பன்னிருவருள் ஒருவராக - அந்த**

**வெள்ளை மாவை வேறு வழியே இன்றி
உண்டே அவருமங்கு உயிர்நீர்த்தாராம்**

**ஆம்,
போர் நிறுத்த காலமொன்றின்
பேர் அவலம் எமதிடத்தில் - அன்று**

**போர் தடுக்க வந்தவர்கள் சரியாக
ஏர் எடுத்துப் பார்க்காத காரணமாம்**

**பிடிபட்டோரைத் தலைநகர் நகர்த்த தலைப்பட்ட வேளை - இனி
கடிப்பதன்றி வேறு வழியில்லையென்றே - கூட்டாக**

**தம்முயிரைத் தாம் மாய்த்து
எம்மினத்துச் சின்னவரும் விம்மியழ**

**விண்ணுலகம் எய்தினார்கள்.** **(தொடரும்)**

**-- உமா மோகன் - Montreal- Canada --**

கனடிய செய்திகள்
Canadian News

## 'Kailaasa Canada Organization' hosted 'Tamil Heritage Month Celebrations' in City of Markham

## கனடாவில் இயங்கிவரும் "கைலாசா அமைப்பு" நடத்திய தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்



கனடாவில் பல வருடங்களாக சிறந்த முறையில் இயங்கிவரும் "கைலாசா அமைப்பு" நடத்திய தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்ட நிகழ்வு கடந்த சனிக்கிழமையன்று 21ம் திகதி மதியம் அளவில் மார்க்கம் நகரில் அமைந்துள்ள இரா விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

கனடா "கைலாசா அமைப்பின்" இயக்குனர் சபை மற்றும் தொண்டர்கள் ஆகியோர் இணைந்து ஏற்பாடு செய்த இந்த விழாவிற்கு பல முக்கிய விருந்தினர்கள் அழைக்கப்பெற்றிருந்தனர்.

பிரம்ரன் மாநகர பிதா பெற்றிக் பிறவுண் அவர்கள். ஒன்றாரியோ மாகாண சபையின் ஸ்காபுறோ அஜின்கோர்ட் தொகுதியின் மக்கள் உறுப்பினர் அரிஸ் பாபிகியன் அவர்கள் மற்றும் மார்க்கம் மாநகர சபையின் 7ம் வட்டார உறுப்பினர் வனிதா நாதன் ஆகியோர் உட்பட பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

விழா ஆரம்பத்தில் உலக கைலாசா அமைப்பின் நிறுவனர் மகாசந்திதானம்



சுவாமி நித்தியானாந்த அவர்களின் திருவருவப் படத்திற்கு மரியாதை செய்யப்பெற்று பின்னர் மண்டபத்திற்கு அதை ஊர்வலமாக எடுத்து வந்தார்கள்.

தொடர்ந்த பக்தியும் பரவசமும் நிறைந்த விழாவாக இந்த தமிழர் மர-





புரிமை நாள் நகர்ந்து சென்றது.

இந்த விழாவில் கனடாவில் பல துறைகளில் சிறந்து விளங்கும் பலருக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றன. பாடகர் பிரபா அவர்கள் தெய்வீகப் பாடல் ஒன்றை இசைத்து சபையோரை மகிழ்வித்தார்.

கவிஞர் இராஜ்மீரா இராசையா அவர்கள் கவிதை ஒன்றை இயற்றிப் பாடி பார்வையாளர்களை மகிழ்வித்தார்.


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

SUBRA MORTGAGE FINANCIAL
MORTGAGE SOLUTIONS

✦ RESIDENTIAL ✦ COMMERCIAL ✦ INDUSTRIAL
✦ VACANT LAND ✦ CONSTRUCTION

# Know the basic things on Mortgage to find a better way for your Future!





CONTACT US TODAY

NESAN

416-908-5656

1st & 2nd Mortgages | Purchase | Refinance | Renewal | Switches | Equity lind of Credit
Pre-approvals | Self-employed | Multi-rental properties | New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, M1B 2W1

www.subra.com

WE DEAL WITH ALL BANKS
Brokerage #10330

Powered By

Mortgage Alliance · Scotiabank · radius financial · Equitable Bank · RMG mortgages
TD Canada Trust · RFA · First National Financial LP · Home Trust · MCAP

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தநின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்..
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

Jayasaji JEWELLERY
416 299 5479
416 293 5935
jayasaji@hotmail.com
www.Jayasaji.ca
jayasajijewellery
Jayasaji Jewellery
6055 Steeles Ave E# 131-132, Scarborough, Ontario, M1X0A7
MANUFACTURER, WHOLESALER AND RETAILER OF 18, 22, 24K YELLOW, ROSE AND WHITE GOLD GEMSTONE AND DIAMOND JEWELLERY SINCE 1993

உதயம் 1399 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 27, 2023

# என் பெற்றோரின் ஆத்ம சாந்திக்காக தான் நான் சினிமாவை விட்டு விவசாயத்திற்கு முழுமையாக மாறினேன் என்கிறார் இயக்குநர் பாண்டிராஜ்



விவசாயம் செய்பவர்கள் பலர் நஷ்டம் அடைகிறார்கள். ஆனால், விவசாயத்தை மாற்று வழியில் செய்பவர்கள், லாபத்தை சம்பாதிக்கிறார்கள். நான் இந்த வருடம் 114 மூட்டை நெல் அறுவடை செய்தேன். எனது மனைவி அறுவடை செய்யும் வரை ஆனா செலவை ஒரு டைரியில் எழுதி வைத்திருந்தார். நெல் விற்று பணத்தை கணக்கிட்டு இந்த வருடம் நமக்கு லாபம் என்று கூறினார். சினிமா எடுத்து பல கோடிகள் சம்பாதித்து கிடைத்த மகிழ்ச்சியை விட, விவசாயம் மூலம் வரும் நெல்லில் சாப்பிடும் போது அதிகமான மகிழ்ச்சி கிடைக்கிறது. (உள்ளே விபரமான செய்தி 10ம் பக்கத்தில்)

# கணபதி ரவீந்திரன், ரூபி யோகதாசன் ஆகியோரின் தலைமையில் இயங்கிவரும் "யுகம் வானொலி" 5 வது ஆண்டு நிறைவு விழா



"கலைவேந்தன்" கணபதி ரவீந்திரன்- "நவரச நாயகி" ரூபி யோகதாசன் ஆகியோரின் தலைமையில் இயங்கிவரும் "யுகம் வானொலி" யின் 5 வது ஆண்டு நிறைவு விழா நேற்று சனிக்கிழமையன்று மாலை ஸ்காபுறோவில் அமைந்துள்ள MEJESTIC CITY வர்த்தக வளாகத்தின் கேட்போர் கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது.

வெற்றி விழாவாக அமைந்த மேற்படி ஊடகப் பெருவிழாவில் அரசியல் பிரமுகர்கள். ஊடக நண்பர்கள் . வர்த்தக நண்பர் கலைஞர்கள் என அனைத்து தரப்பினரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு வாழ்த்திச் சென்றனர். "கலைவேந்தன்" கணபதி ரவீந்திரன்- "நவரச நாயகி" ரூபி யோகதாசன் ஆகியோருக்காகவே நேற்றைய மாலைப் பொழுது படைக்கப்பட்டிருந்தது என்றால் அது மிகையாகாது. கனடா உதயன் சார்பிலும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பெற்றன.

# வர்த்தகப் பிரமுகர் நண்பர் ராம்குமார் இல்லத்து திருமணம்



கனடா வாழ் வர்த்தகப் பிரமுகர் நண்பர் ராம்குமார் தம்பதிகளின் செல்வப் புதல்வர் சிவராஜ் மற்றும் திரு சிவானந்தன் தம்பதிகளின் செல்வப் புதல்வி தர்ஷனா ஆகியோரின் திருமணம் வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று 22ம் திகதி மதியம் ஸ்காபுறோவில் உள்ள மார்க்கம் கொன்வென்சன் விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

அழைக்கப்பெற்றற பல சிவாச்சசாரியப் பெருமக்கள் மணமக்களை ஆசீர்வதித்தனர். திருமணச் சடங்குகளை நடத்தி வைக்கும் பொறுப்பை சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் மற்றும் அவரது உதவிக் குருக்கள்மார் ஆகியோர் செவ்வனே ஆற்றியிருந்தனர்.

நகரெங்கும் பேசப்படும் திருமணமாகக் கருதப்பெற்ற இந்த வைபவத்தில் அழைக்கப்பெற்ற விருந்தினர்களில் அதிஸ்டக் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பெற்ற மூன்று வெற்றியாளர்களுக்கு விலையுயர்ந்த தங்க ஆபரணங்கள் பரிசளிக்கப்பெற்றன.

கனடா உதயன் சார்பிலும் நேரில் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பெற்றன.

## Kailaasa Canada Organization hosted Tamil Heritage Month Celebrations' in City of Markham

# கனடாவில் இயங்கிவரும் "கைலாசா அமைப்பு" நடத்திய தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்



கனடாவில் பல வருடங்களாக சிறந்த முறையில் இயங்கிவரும் "கைலாசா அமைப்பு" நடத்திய தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்ட நிகழ்வு கடந்த சனிக்கிழமையன்று 21ம் திகதி மதியம் அளவில் மார்க்கம் நகரில் அமைந்துள்ள "இரா விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. கனடா "கைலாசா அமைப்பின்" இயக்குனர் சபை மற்றும் தொண்டர்கள் ஆகியோர் இணைந்து ஏற்பாடு செய்த இந்த விழாவிற்கு பல முக்கிய விருந்தினர்கள் அழைக்கப்பெற்றிருந்தனர். (உள்ளே விபரமான செய்தி 30ம் பக்கத்தில்)

# 12 வருடங்களாக சிறையில் இருந்த அரசியல் கைதி குற்றம் எதுவும் நிரூபிக்கப்படாததால் விடுதலையானார்



குற்றம் எதுவும் நிரூபிக்கப்படாத நிலையில் 12 வருடங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதி சிவசுப்பிரமணியம் தில்லை ராஜ் கடந்த வியாழக்கிழமை (26.01.2023) குற்றமற்றவர் என கருதி மன்னார் மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)

புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL
COLOMBO - SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136